
மாம்பழச்சாலை
ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

# மாம்பழச்சாலை

## ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

நிலா புக்ஸ்

முகவரி

Nilacharal Ltd
18 Collingwood Road
Crawley
RH10 7WG
UK
E-mail: team@nilacharal.com

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | மாம்பழச்சாலை |
| ஆசிரியர் | : | ஏ.ஏ.ஹெச்.கே.கோரி |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பகம் | : | நிலாச்சாரல் லிமிடட் |
| காப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாசிரியர் | : | நிலா |


**"உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்கு தமிழ் இலக்கியங்களை படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்கு தமிழ் இலக்கிய பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்" -ன் இலட்சியம் "**

## TERMS OF USE:

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

*******

## உபயோக நிபந்தனைகள் :

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

*******

# உள்ளடக்கம்


ஸண்டே ஸண்டே ஸீ பாத் ........ 1

ஹாண்டில் வித் கேர் ........ 6

முதலையொன்று பல்லியான கதை ........ 13

உயிரெலாம் பாசம் ........ 25

வேகமும் விவேகமும் ........ 32

டோக்கன் ஸ்ட்ரைக் ........ 36

என்னுயிர்த் தோழி ........ 44

தாய்க்குலம் ........ 65

முட்டை ........ 74

ரெண்டு பேர் தள்ளுகிற வண்டி ........ 81

இறந்தவன் எழுதுகிறேன் ........ 87

கார் காலம் ........ 97

சின்னஞ்சிறிய தீவு ஒண்டு ........ 101

நாய்ப் பொயப்பு ........ 109

# ஸண்டே ஸண்டே ஸீ பாத்

அபூர்வமாய், வீடு நிசப்தமாயிருந்தது.

ஆச்சர்யத்தோடு நம்ம ஆளைப் பார்த்தேன். என் பார்வையைப் புரிந்து கொண்ட அவள், நான் கேள்வி கேட்காமலேயே பதில் சொன்னாள்.

"எல்லாட் டிக்கட்டும் கடலுக்குப் போயிருக்கு. இன்னிக்கி ஸண்டே ஸீ பாத்."

"வெரிகுட்" என்றேன் நான்.

"கடலுக்குப் பக்கத்ல, நீலாங்கரைல வீடு கட்னது எவ்ளவு நல்லது பாத்தியா! இன்னிக்கி ஸண்டே, வாரம் பூராக் குளிக்காததுகள்ளாம் அழுக்குத் தேச்சுக் குளிக்கிற நாள். அத்தன உருப்படியும் ஸீ பாத்துக்குப் போயிருச் சுன்னா எத்தன லிட்டர் தண்ணி மிச்சம் பார். புத்திசாலி நீ."

"ப்ரமாதமா ஒண்ணும் மிச்சம் ஆயிராது. உப்புப் பிசுக்குப் போக நல்ல தண்ணில குளிக்கணும்னு எல்லாம் சொல்லும். ஆனா, நா அட்வான்ஸு சொல்லிட்டேன், ஆளுக்கு அரை பக்கெட் தண்ணி தான்னு."

"எப்டியோ ஓரளவாவது தண்ணி ஸேவ் பண்றோம்ல? இந்தக் கஷ்ட காலத்ல ஒவ்வொரு துளி தண்ணியும் ஒரு பொக்கிஷந்தானே. ஒன்ன மாதிரி ஒரு திறமையான உள்துறை மந்திரி கம் உணவு மந்திரி கம் தண்ணி மந்திரி கம் மஹாராணி எனக்குக் கெடச்சதால, நம்ம சாம்ராஜ்யத்ல மாதம் மும்மாரி பொழியாட்டியும் தண்ணிக் கஷ்டம் தெரியல."

"தங்கள் பாராட்டுக்கு ரொம்ப நன்றி மஹாராஜா, பக்கத்து நாட்டுக்கு எப்பப் படையெடுக்கப் போறீங்க?"

"பக்கத்து நாட்டுக்குப் படையெடுப்பா? ஏன்? எதுக்கு? எப்படி? யார்?"

"மறந்திருப்பீங்களே! பக்கத்து வீட்டு ஓவர் ஹெட் டாங்க்ல தினமும் தண்ணி ஓவர் ஃப்ளோ ஆகி அஞ்சு நிமிஷத்துக்கு அநியாயமாக் கொட்டுது. இதனால வீட்டுக்கு, நாட்டுக்கு, ஒலகத்துக்கே கேடு, அதனால நா போய் நறுக்னு நாலு வார்த்தை கேட்டுட்டு, மண்டைல நாலு குட்டு குட்டிட்டு வரப்போறேன்னீங்க? ஸண்டே வரட்டும், போய் ஒரு கை பாத்துட்டு வர்றேன்னு வேகவேகமா வீர வசனம் பேசினீங்க?"

"ஆமா, வேகவேகமாப் பேசினேன். ஆனா, வேகம் விவேகமல்லன்னு ஆம்னி பஸ்ல, நாஷனல் பர்மிட் லாரிலல்லாம் எழுதிப் போட்டிருக்காங்களேன்னு யோசிக்கிறேன்."

"அட இவ்ளோ தானா நீங்க! அப்ப, நாம் போய்க் கேட்டுட்டு வரட்டுமா?"

"ஐயோ, அது முறையல்ல மஹாராணி. இதோ நானே போகிறேன். என் நெற்றியில் வெற்றித் திலகமிட்டு வழியனுப்பி வை, எதிரியைத் துவம்சம் செய்து விட்டு வருகிறேன்!"

பக்கத்து வீட்டுக் கதவில் பஸ்ஸரை அழுத்தினேன். என் வயதேயிருக்கிற இளைஞர் ஒருவர் வந்து கதவைத் திறந்தார்.

“சார், நா பக்கத்து நாடு, ஐ மீன், பக்கத்து வீடு” என்று என்னை நான் அறிமுகப்படுத்திக் கொண்டதும், “வாங்கோ சார், உள்ள வாங்கோ” என்று வரவேற்று டிராயிங் ஹாலில் அமர வைத்தார்.

“மன்னிக்கணும் சார், இந்த ஆத்துக்கு நா குடி வந்து ரெண்டு மாசமாறது. ஒங்க நெய்பர்ங்கற முறையில ஒங்கள வந்து பாத்திருக்கணும். ஒங்காத்துக்குத் தம்பதி சமேதரா வர்றது தான் முறை. அதுல பாருங்கோ, நா ஒரு பிஸி எக்ஸிக்யூட்டிவ். வாரத்ல ஆறு நாள் வேலை வேலை வேலை. ராத்திரி லேட்டா வருவேன், டயர்டா வருவேன். திரும்பக் கார்த்தால எந்திரிச்சி ஓடணும். ஸண்டே ஒரு நாள் தான் சித்த ஒழியும். ஆனா பாருங்கோ, ஸண்டே ஸண்டே இவொ என்ன அம்போன்னு விட்டுட்டுப் பொறந்தாத் துக்குப் போயிருவொ. அதனால நம்ம விஸிட் தள்ளிண்டே போயிடுத்து. இப்ப நீங்களே வந்துட்டேள். ஆத்துல எல்லாரையும் கூட்டிண்டு வந்திருக்கப்படாதோ? அட நா ஒரு அசடு பாருங்கோ. நம்ம ஆத்துக்காரி இங்க ஆப்ப்ஸன்ட், ஒங்காத்ல எல்லாரையும் கூட்டிண்டு வரப்படாதோங்கறேன். அட நாம தான் இப்பப் பழகிட்டோமே சார், அடிக்கடி மீட் பண்ணாமலா இருக்கப் போறோம்! திரும்பவும் பாருங்கோ, வந்தவாளை ஒக்கார வச்சுண்டு வளவளன்னு பேசிண்டே இருக்கேன். சார், என்ன சாப்புடறேள்? காஃபி? டீ? டீ இல்லை. காஃபி தான். என்னோட ஆத்துக்காரி ஃப்ளாஸ்க் நெறைய ஊத்தி வச்சுட்டுத்தான் போயிருக்கா. என்னோட ஒரு நாள் கோட்டா. நாம ரெண்டு பேரும் ஷேர் பண்ணிக்கலாம்.”

ஒருவாறு பேசி ஓய்ந்து அவர் வாயை மூடினார். வாயை மூடினவர் என் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தார், என் பதிலுக்காக.

“வேண்டாம் சார். தாங்ஸ். நா காஃபி, டீ சாப்புடற பழக்கமில்ல” என்றேன்.

“ரொம்ப நல்ல பழக்கம் சார். ஐ அப்ரிஷியேட் தட். ஹார்லிக்ஸ் கரச்சுத் தரட்டுமா? இல்லாட்டி போண் வீட்டா?” என்று திரும்பவும் என் வாயைப் பார்த்தார்.

“அதெல்லாம் ஒண்ணுமே வேண்டாம் சார், கொஞ்சம் தண்ணி மட்டும் குடுங்க” என்று நான் சொன்னது தான் தாமதம், மனிதர் ஸ்தம்பித்துப் போய்ப் பின் வாங்கி, ஸோஃபாவில் சரிந்து விட்டார்.

சில விநாடிகளுக்கு அவரிடம் சலனமேதும் இல்லாமற் போகவே, “சார், சார், என்னாச்சு ஒங்களுக்கு?” என்று அவர் தோளைப் பற்றி நான் உலுப்பவும், “ஒண்ணுமில்லை சார், ஒண்ணுமில்லை சார்” என்று சகஜ நிலைக்குத் திரும்பினார்.

“இவ்ளோ காஸ்ட்லி ஐட்டமாப் பாத்து நீங்க கேப்பேள்னு நா எதிர்பார்க்கலை. ஒரு அபூர்வமான வஸ்துவோட பேரை சர்வ சாதாரணமா நீங்க உச்சரிச்ச வொடன நா ஸ்ட்டன் ஆய்ட்டேன்.”

அவருடைய வளவளத்த பேச்சுக்கு ஊடே பொதிந்திருந்த நகைச்சுவையும், அந்த நகைச்சுவையின் பின்னணியிலிருந்த யதார்த்தமும் என் முகத்திலே புன்னகையைத் தோற்றுவித்தன. அந்தப் புன்னகை மாறாமலேயே நான் பாய்ன்ட்டைப் பிடித்தேன்.

“தண்ணி ஒரு அபூர்வமான வஸ்துன்னு அழகாச் சொல்றீங்க, ஆனா அந்தக் காஸ்ட்லி ஐட்டம் டெய்லி ஒங்க வீட்ல வேஸ்ட் ஆயிட்டிருக்கே சார், கவனிச்சீங்களா?”

“எதச் சொல்றேள்?”

“ஒங்க ஓவர்ஹெட் டாங்க் ரொம்பி வழியுது தினமும். அந்தத் தண்ணி ஓவர்ஃப்ளோ ஆகி வேஸ்ட் ஆகிறத நீங்க அவாய்ட் பண்ணலாமே.”

“ஐயோ, ஆமா சார். I feel guilty about that.. தண்ணியோட அருமை பெருமை புரிஞ்சவன் நான். மத்தவாளுக்கு முன்னுதாரணமாயிருக்க வேண்டியவன் நான். நானே ஒரு லயாபிலிட்டியா இருக்கோம் பாருங்கோ. அதுல என்னன்னா சார், அந்த மோட்டர் ஸ்விட்ச் பக்கத்ல போறதுக்கே நம்ம ஆத்துக்காரிக்கு அலர்ஜி. மோட்டர் ஸ்விட்ச்ச நாந்தான் ஆன் பண்ணனும், ஆஃப் பண்ணனும். ஆன் பண்றது ஈஸி, அப்பறம் டாங்க் ஃபுல் ஆகறச்ச நா குளிச்சிண்டிருப்பேன், டாய்லட்ல இருப்பேன், இல்லாட்டி பூஜைல இருப்பேன். நா ஓடிப்போய் மோட்டரை ஆஃப் பண்றதுக்குள்ள நெறைய தண்ணி கொட்டிப் போயிடறது. ஆனா பாருங்கோ, இன்னிக்கி ஓவர்ஃப்ளோ ஆக நா விடலை. எப்டீன்னு கேளுங்கோ. ஆத்துல இருக்கேனோல்லியோ அப்பப்ப மேலே போய் வாட்டர் லெவலப் பாத்துண்டேன். ஆத்துல வாரிசுகள்னு ஒண்ணு ரெண்டு இருந்ததுன்னா இதையெல்லாம் கவனிச்சிப்பா…”

“வாரிசுக்குத் தான் வழியே இல்லாமப் போயிருச்சே சார்! வாரத்ல ஆறு நாள் நீங்க பிஸி, லேட்டா வர்றீங்க, டயர்டா வர்றீங்க, ஏழாவது நாள் ஆத்துக்காரி பொறந்தாத்துக்குப் போயிர்றா….”

“அதுக்கும் ஒரு ஐடியா பண்ணிட்டேன் சார்” என்று என்னைப் பார்த்துக் கண்ணடித்தார்.

“அடுத்த ஸண்டே நம்ம அலமேலுவை அவொ பொறந்தாத்துக்கு அனுப்பறதா இல்லை.”

“வெரிகுட்!”

“நாங்க ரெண்டு பேரும் ஒங்காத்துக்கு வர்றதா யிருக்கோம்.”

“வெரி வெரி குட்!”

“இன்னொரு நல்ல ந்யூஸ் நா சொன்னா நீங்க மூணு வெரி போடுவேள்.”

“சொல்லுங்க.”

“எங்கக் கம்ப்பெனில இப்ப ஒரு ரிஸர்ச் பண்ணிண் டிருக்கோம். இன்னும் ரெண்டு நாள்ல ரிஸல்ட் தெரிஞ்சிடும். ஸண்டே ஒங்க ஆத்துக்கு வர்றச்ச சொல்றேன். அது வரக்யும் ஸஸ்பென்ஸ்!”

அடுத்த ஞாயிற்றுக்கிழமைக் காலை, சொன்ன மாதிரியே ரெண்டு பேரும் வந்தார்கள். என்னுடைய உள்துறை மந்திரி கம் உணவு மந்திரி கம் தண்ணீர் மந்திரி கம் மஹாராணியை அறிமுகப்படுத்தி வைத்தேன்.

"....ஒரு சொட்டுத் தண்ணி வேஸ்ட் ஆக விடமாட்டா. துணி அலசற தண்ணி டாய்லட் கழுவுறதுக்கு உபயோக மாகும், பாத்திரம் கழுவுற தண்ணி மரங்களுக்கும் செடிகளுக்கும் போகும். நம்மக் குட்டிப்பயல் ஒரு வாட்டர் பிஸ்ட்டல் கேட்டான். அதுகூட வாங்கித்தரக் கூடாதுன்னு உத்தரவு வந்திருச்சுன்னா பாருங்களேன். ரெய்ன் வாட்டர் ஹார்வெஸ்ட்டிங் பண்றதுக்கு அரசாங்க உத்தரவு வர்றதுக்கு முந்தியே நாங்களாவே பண்ணிட்டோம். ஐடியா குடுத்தது நம்ம மஹாராணி தான். தண்ணிய ஸேவ் பண்றது மட்டுமில்ல. எல்லா விஷயத்லயுமே நம்ம ஆள் பெர்ஃபக்ட்" என்று நான் கர்வம் கொண்டதற்கு அடுத்தாத்துக் காரியிடமிருந்து ஒரு முணுமுணுப்பு வெளிப்பட்டது. அது நம்ம ஆள் காதிலும் விழுந்து தொலைத்து விட்டது.

"பெர்ஃபக்ட்னு யாருமே கெடையாது. ஏதாவது ஒரு கொறை இருக்கத் தான் செய்யும், நம்மக் கண்ணுக்குத் தெரியாது, அடுத்தவா கண்ணுக்குத் தெரியும்" என்று எழுந்த முணுமுணுப்புக்கு நம்ம வீட்டுக்காரி புன்னகையோடு விட்ட சவால் பதிலாய் வந்தது.

"ஒங்கக் கண்ல பட்டா சொல்லுங்களேன் பாப்போம்!"

காஃபி பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கும்போது, கடல் குளிப்புக்குப் போயிருந்த நம்மப் பரிவாரங்கள் திரும்பி வந்தன.

"பசங்கள்ளாம் எங்க போய்ட்டு வர்றா?" என்கிற கேள்விக்கு "ஸீ பாத்க்குப் போய்ட்டு வாறோம் ஆன்ட்டி" என்று பதில் வந்தது.

"பசங்க ஆத்துல குளிக்க மாட்டாளா?"

"மெட்ராஸ்ல ஆறு ஏது ஆன்ட்டி? நாங்க கடல்ல தான் குளிப்போம். ஸண்டே ஸண்டே ஸீ பாத், பே ஆஃப் பெங்கால் எங்க தோஸ்த்!"

"இப்டியெல்லாமா ஒங்காத்ல தண்ணிய ஸேவ் பண்றேள்" என்று ரொம்ப ஆச்சர்யப்பட்டுப் போனாள் அந்த அம்மா.

"சிறுதுளிப் பெருவெள்ளந்தானேம்மா" என்று அவளைத் தேற்றினாள் நம்ம ஆள்.

"ரெண்டாயிரத்தி இருபத்தஞ்சுல இப்ப இருக்கிற மாதிரி மூணு பங்குத் தண்ணிப் பஞ்சம் இருக்குமாம்" என்று எனக்குத் தெரிந்த ஒரு தகவலை முன்வைத்து விட்டுப் பக்கத்து ஆத்துக்காரருக்கு ஒரு ரிமைண்டர் போட்டேன்.

"சார், நீங்க என்னமோ ஒங்கக் கம்ப்பெனில ஆராய்ச்சி பண்ணிட்டிருக்கிறதா, அன்னிக்கி ஒரு ஸஸ்பென்ஸ் வச்சிங்களே."

"ஒங்கக் கொழந்தைங்களப் பாத்த சந்தோஷத்ல அந்த முக்யமான சங்கதியவே மறந்துட்டேன் பாருங்கோ" என்று அவர் ஆரம்பித்தார்.

"ஓவர் ஹெட் டாங்க்ல தண்ணியோட லெவலக் காட்றதுக்கு மீட்டர் ஒண்ணு டெவலப் பண்ணினோம் எங்கக் கம்ப்பெனில. ஸக்ஸஸ். ஆத்துக்குள்ளாரயே அந்த மீட்டரை

வெச்சுக்காலம். கிச்சன்ல கூட வெச்சுக்கலாம். டாங்க்ல தண்ணி ஃபுல் ஆகறச்ச மீட்டர்ல அது தெரியும். ஓவர் ஃப்ளோ ஆறதுக்கு முந்தி நாம ஆஃப் பண்ணிரலாம். இந்த மீட்டர் பிரபலமாச்சுன்னா, மெட்ராஸ்ல, தமிழ்நாட்ல, இந்தியால, ஏன் ஒலகத்லேயே தினசரி வேஸ்ட் ஆகற தண்ணி எக்கச்சக்கமா மிச்சப்படும்."

"வெரி வெரி வெரி குட்!" என்றேன் நான்.

*

தம்பதிகள் விடைபெற்றுக் கொண்டு கிளம்புகிற போது, வீட்டுக் கதவின் உட்புறத்தில், கம்ப்யூட்டரில் டைப் பண்ணிக் கொட்டை எழுத்தில் ஒட்டப்பட்டிருந்த பட்டியல் அவர்கள் கண்ணில் பட்டது.

நம்ம தர்ம பத்தினி விளக்கம் தந்தாள்.

"அது வந்துங்க, எங்க வீட்ல ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு நேரம் வெளிய போவாங்க. கடைசியா வெளிய போறவங்க வீட்டப் பூட்டிக்கிட்டுப் போறப்ப கடைப்பிடிக்க வேண்டியச் செக் லிஸ்ட் இது. பின்னால் பால்கனிக் கதவு மூடியிருக்கிறதா, லைட், ஃபேன், அயண் பாக்ஸ் எல்லாம் ஆஃப் பண்ணியிருக்கிறதா, கிச்சனில் கியாஸ் ஸ்டவ் அணைத்திருக்கிறதா, டிவியும் கம்ப்யூட்டரும் ஆஃப் பண்ணியிருக்கிறதா, ஃபிரிட்ஜ் கதவு மூடியிருக்கிறதா, ஃபோன் ரிஸீவர் சரியாய் வைக்கப்பட்டிருக்கிறதா...."

எல்லாவற்றையும் பொறுமையாய்க் கேட்டு விட்டுப் பக்கத்து வீட்டம்மா, "இதுல ரொம்ப முக்யமான ஒரு ஐட்டம் விட்டுப்போன மாதிரியிருக்கே" என்று சிரித்தாள்.

"?"

"தண்ணிக் குழாய் எல்லாம் மூடியிருக்கிறதான்னு எழுத விட்டுப் போயிருக்கே?"

"அது, வந்து...." என்று மென்று விழுங்கினாள் நம்ம ஆள்.

"தண்ணிக் குழாய் தொறந்திருந்தாத்தான், தண்ணி விழற சத்தம் கேக்குமே...."

"கேக்கும்தான். ஆனா டாங்க்ல தண்ணியில்லாத சமயம் யாராவது குழாயத் தொறந்திருப்பா. தண்ணி வராது. அப்பறம் மூட ஞாபகமில்லாமப் போகும். அப்பறம் டாங்க்ல தண்ணி ஏத்தறச்ச, இங்கே தண்ணி கீழே போயிண்டே இருக்கும். சத்தங்கேட்டு நீங்க குழாய மூடிடுவேள் தான். ஆனாலும் போன தண்ணி போனது தானே. சிறு துளி பெரு வெள்ளமில்லியோ?"

நம்ம மஹாராணி ஓரக் கண்ணால் என்னைப் பார்த்தாள்.

நான், அடுத்த ஆத்துக்கார அலமேலுவைப் பார்த்தேன்.

"வெரி வெரி வெரி வெரி குட்!" என்றேன்.

**கவிதை உறவு ஆண்டு மலர், மே 2010. மற்றும், கவிதை உறவு, ஆகஸ்டு 2010.**

**(ஞாயிறு போற்றுதும்)**

# ஹாண்டில் வித் கேர்

அட்ரஸைக் கண்டு பிடித்து அந்த ஆடம்பர அப்பாட்மென்ட் அமைந்திருந்த காம்ப்ளக்ஸ்ஸுக்குள் பிரவேசித்தேன்.

ஃப்லாட் நம்பரையும், சந்திக்கப் போகிற நபரின் பெயரையும் ப்ஸக்யூரிட்டி ஆளிடம் சொல்லி, அவர் நீட்டிய ரிஜிஸ்டரில் ஆட்டோகிராஃப் போட்ட பின்னால், லிஃப்ட்டில் மூணாவது தளத்தையடைந்து, நண்பருடைய ஃப்லாட்டின் வாசலில் பஸ்ஸரை அழுத்தினேன்.

இந்த எழுத்தாளனின் நீண்ட நாள் வாசகராயிருந்து, சமீபத்தில் தான் நண்பராய் ஏற்றம் பெற்றிருக்கிறவர். இவ்வளவு பசையுள்ள பார்ட்டியென்று முன்னமேயே தெரியாது.

சொந்த ஃப்லாட்டா, வாடகையா என்று தெரிய வில்லை. நாலு அல்லது அஞ்சு பெட் ரூமாயிருக்கும். வாடகையென்றால், இன்றைய அண்ணா நகர் ரேட்டுக்கு இருபதாயிரத்துக்குக் குறையாமலிருக்கும்.

சொந்தமென்றால் ஒரு கோடிக்கு ஒரு ஐநூறு, ஆயிரம் கம்மியாயிருக்கும்.

சம்மருக்கு வீட்டில் எல்லோரும் ஊட்டிக்குப் போயிருப்பதாயும் தான் தன்னந்தனியாய் இருப்பதாயும் வாசகர் கம் நண்பர் சொல்லியிருந்தார்.

ரொம்பப் படிக்கிறவர் என்றும் சொல்லியிருந்தார். ஏஸி ரூமுக்குள் படித்துக் கொண்டிருப்பார், அல்லது படுத்துக் கிடப்பார். பஸ்ஸரின் ஓசை ஏஸி ரூமுக்குள் ஊடுருவியதோ இல்லையோ, இன்னொரு முறை அழுத்தலாமா என்று யோசித்த போது, கதவு திறந்தது.

“எழுத்தாளர் சார், வாங்க வாங்க. ஒங்களத்தான் எதிர்பாத்திட்டிருந்தேன்” என்று வரவேற்று, வரவேற் பறையில் சொகுசு ஸோஃபாவுக்குக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார்.

கோடீஸ்வரத்தனம் கொப்பளிக்கிற சுற்றுச் சூழல், பிரமிப்பூட்டுகிற உள்ளமைப்பு. அபரிதமான நீள அகலங்களைக் கொண்ட தட்டையான டெலிவிஷன். கண்ணுக்கழகான பெய்ன்ட்டிங்ஸ், மலர்களோடு கூடிய செயற்கையான மரம் ஒன்று, அப்பழுக்கில்லாத திரைச் சீலைகள்.

இத்தனையையும் ஓரங்கட்டுகிற மாதிரி சுவர்களில் அங்கங்கே பென்ஸில் கிறுக்கல்கள். இந்த வீட்டில் இளந்தளிர்கள் வசிப்பதற்கான அடையாளங்கள்.

அந்த மழலைக் கிறுக்கல்களில் மனம் லயித்தது. கண்களும்.

அதை அவதானித்த நண்பர், “எல்லாம் நம்மப் பேரப் பயலோட அட்டகாசம் சார். எவ்ளோ அழகான சொவர்ல கன்னா பின்னான்னு கிறுக்கிக் கெடுத்து வச்சிர்க்காம் பாருங்க” என்று வருத்தப்பட்டார்.

“பய, பயங்கரச் சேட்ட சார். ஒரு ரூம்ல ஒரு சொவர் விட்டு வக்யல. அவனோட பென்ஸில் பதம் பாக்காத எடம் என்னோட ஸ்டடி ரூம் மட்டுந்தான். வாங்க அங்கப் போயிரலாம்.”

அவரைத் தொடர்ந்து அவருடைய ஸ்டடி ரூமுக்குள் நுழைந்தேன்.

எக்கச்சக்கமான புஸ்தகங்கள், சைஸ் வாரியாய், ஷெல்ஃப்களில் அலங்காரமாய் அடுக்கப்பட்டிருந்தன. உட்கார்ந்து வாசிக்க மேஜை நாற்காலி, ஓய்வாய் வாசிக்க ஓர் ஈஸிச் சேர், படுத்தபடி படிக்கக் கட்டில், மெத்தை, தலையணைகள். பல வடிவங்களில், பல திசைகளில் விளக்குகள். இவையெல்லாவற்றையும் விட என் கண்களை உறுத்தியவை அறையின் சுவர்கள்.

சுவர்கள் அநியாயத்துக்கு சுத்தமாயிருந்தன.

என் கண்கள் சுவர்களைத் துளாவியதை நண்பர் கண்டு கொண்டார்.

“நா சொன்னேன்ல சார், இந்த ரூமுக்குள்ள மட்டும் அந்தப் பயல நா வுடறதேயில்ல. விட்டா, சொவர் பூரா கிறுக்கித் தள்ளிருவான். நம்ப ரூம் இப்ப எவ்ளோ நீட்டாயிருக்கு பாருங்க” என்று நண்பர் பெருமைப்பட்டுக் கொண்டார்.

“இந்த புக்ஸ் எல்லாம் என்னோட நாப்பது வருஷக் கலெக்ஷன் சார்” என்று பூரித்துப் போனவர், “எந்த புக் வேணும்னாலும் நீங்க எடுத்து வாசிங்க சார்” என்று பெருந்தன்மையாய் அனுமதி வழங்கியதற்கு, “இந்த ரூம்ல வாசிக்கிறதுக்கு எனக்கு ஒண்ணுமே இல்லியே சார்!” என்றேன் நான்.

“என்ன சார் அப்டிச் சொல்லிட்டீங்க!” என்று ஆச்சர்ய மடைந்தார்.

“ஷேக்ஸ்ப்பியர்லயிருந்து லேட்டஸ்ட் ஹாரிப் பாட்டர் வரக்யும் வால்யூம் வால்யூமா வச்சிர்க்கேன். தமிழ்ல கம்ப ராமாயணத்லயிருந்து ஷங்கரநாராயணன் வரக்யும் அடுக்கி வச்சிர்க்கேன். இலங்கை எழுத்தாளர்களுக்கு ஒரு தனி செக்ஷனே இருக்கு. கைலாசபதி, செ. யோகநாதன், எஸ்.பொ, மௌனகுரு, சாந்தன், எல்லார் புக்ஸும் இருக்கு. மலையாளம் லாங்வேஜ் தெரியாட்டியும், தகழி, வைக்கம் பஷீர், முகுந்தன், பாலச்சந்திரன் சுள்ளிக்காடு எல்லார் புஸ்தகமும் வாங்கி அடுக்கியிருக்கேன்....”

அவர் அடுக்கிக் கொண்டே போக, அறையைச் சுற்றி அலைபாய்ந்த என்னுடைய கண்களில், ஓர் அலமாரிக்கு மேலேயிருந்து எட்டிப்பார்த்த மூங்கில்க் குச்சியொன்று இடறியது.

“அது என்ன சார்?” என்று நான் கேட்கவும், “ஓ இதுவா?” என்று சிரித்தபடி அவர் அதைக் கையில் எடுத்தார்.

“இது எங்க வீட்டுக் குட்டிச் சாத்தான ஹாண்டில் பண்றதுக்கு” என்றார்.

“புள்ளைங்க சேட்டை அதிகமாப் போறபோது கைல சாட்டைய எடுத்துரணும்ங்கற பாலிஸி உள்ளவன் நான். சாட்டைக்கி பதிலா இந்தப் பிரம்பு. ஒரு கடைல அடுக்கி வச்சிருந்தான். ஒண்ணேயொண்ணு வாங்கிட்டு வந்தேன். கைல புடிக்கிறதுக்கு வசதியா ஹாண்டில்லாம் வச்சுக் கலை நயத்தோட செஞ்சிர்க்கான் பாருங்க.”

“சார், இந்தப் பிரம்ப வச்சு அந்தக் கொழந்தய நீங்க அடிப்பீங்கன்னா சொல்றீங்க?” என்று நான் பதறியதற்கு, “ஐயோ, நீங்க தப்பாப் புரிஞ்சிக்கிட்டீங்க சார், நா அடிக்கவெல்லாம் மாட்டேன்” என்று ஆறுதலாய்ச் சொன்னார்.

“புள்ளையப் பெத்தவங்க அடிக்கலாம். நாம அடிச்சா நல்லாயிருக்குமா? பய குறும்பு எல்லை மீறிப் போற போது அவனோட அப்பன்ட்ட நா போட்டுக் குடுத்துருவேன். அவன் வச்சு விளாசிருவான். போன வாரம் அவன் விளாசினதுல முதுகுல வரி வரியா விழுந்துருச்சு. எனக்கே பாவமாப் போச்சு.”

“புத்திசாலித்தனமா நீங்க இன்டைரக்ட் டாக்ஸஸ் போட்ருக்கீங்க!”

“இன்டைரக்ட் டாக்ஸு? என்ன சொல்றீங்க?”

“மறைமுக வரிகள்.”

“ஹோ ஹோ ஹோ! எழுத்தாளர் சார், வித்யாசமா எழுதற மாதிரி, பேச்சுலயும் வித்யாசமாத்தான் பேசறீங்க.”

அவர் கொடுத்த நற்சான்றிதழைக் கசக்கிப் போட்டு விட்டு, ஹாண்டில் வைத்த இந்த மூங்கில்ப் பிரம்புக்கு இலக்கான முகமறியாத அந்த மழலைக்காக மனம் கசிந்தேன்.

என்னுடைய லேட்டஸ்ட் சிறுகதைத் தொகுதியைப் பிரித்து, அவர் ஹைலைட்டர் கொண்டு அதில் கோடிட்டு வைத்திருந்த வரிகளைத் திரும்பத் திரும்பப் படித்துப் பூரித்துப் போனார்.

“ஒங்கக் கிட்ட எனக்குப் புடிச்சது ஒங்க ஸ்டைல் தான் சார். அதோட, ஒங்களோட வட்டார வழக்குப் புலமை. மெட்ராஸ்க் கதை எழுதினா மெட்ராஸ் ஸ்லாங்ல எழுதறீங்க, திருநெல்வேலிக் கதைன்னா என்ன டேய், என்ன வேய்ன்னு திருநெல்வேலித் தமிழ். பரமக்குடிக் கதைன்னா வாப்பூ போப்பூ, யாழ்ப்பாணக் கதை எழுதினா யாழ்ப்பாணத் தமிழிலை கதைக்கிறீங்கள். ஸிம்ப்லி ஸூப்பர்ப். ஆமா, நா எந்த ஊர்க்காரன்னு நீங்க கேக்கலியே.”

“கேக்கல.”

“அப்பக் கேளுங்க.”

“இந்தப் பிரம்ப நீங்க எந்தக் கடைல சார் வாங்கினீங்க?”

“ம்?”

“இந்தப் பிரம்பு வாங்கின கடை.”

என்னைப் புதிராய்ப் பார்த்து விட்டு அந்தக் கடையின் பெயரையும் லொகேஷனையும் சொன்னார்.

விடைபெற்றுக் கொண்டு கிளம்புகிற போது “இங்க உள்ள புஸ்தகங்கள்ள ஒங்களுக்கு வேணுங்கறத நீங்க எடுத்துக்கோங்க” என்று தாராளமயமானார்.

“திருப்பிக் குடுக்க வேணாம், நீங்களே வச்சிக்கோங்க.”

“இப்ப எனக்குத் தேவை ஒங்க புக்ஸ் இல்ல சார்.”

“வேற?”

“ஒங்கப் பிரம்பு. அதக் குடுக்க முடியுமா ப்ளீஸ்.”

“நீங்க அதுலயே குறியாயிருக்கீங்க. எடுத்துக்கோங்க. ஒங்க வீட்லயும் சேட்டக்காரச் சின்னப்பசங்க இருக்காங்க போல.”

கையில் பிரம்போடு, அவர் சொன்ன அந்தக் கடையை நோக்கிப் போகிற போது, புராதனமான பிரம்புக் கதைகள் நினைவுக்கு வந்தன.

வாப்பா எங்களையெல்லாம் அடித்துத்தான் வளர்த்தார்.

நறுக்கென்று மண்டையில் குட்டுவார் அல்லது முதுகில் ரெண்டு போடுவார்.

வாப்பாவிடம் அடிவாங்கி வளர்ந்தவன், என் பிள்ளையைக் கை ஓங்குவதில்லையென்று சபதம் கொண்டேன். கை ஓங்குவதற்கு அவசியமே ஏற்படவில்லை.

வாப்பாவின் அடிகள் எல்லாம் கை வேலை தான். பிரம்பெல்லாம் கிடையாது.

பிரம்புப் பிரோகத்தைப் பார்த்தது, அனுபவித்தது எல்லாம் பள்ளிக்கூடங்களில்தான். அய்யாச்சாமி செட்டியார் ஆயிர வைசிய உயர்நிலைப் பள்ளியில், பரமக்குடியில், ஆறாங்கிளாஸ் படித்துக் கொண்டிருந்த போது, பேனாக்கள் திருடிப் பிடிபட்ட என் க்லாஸ்மேட் வெங்கடாசலத்தை அய்ஸம்ளியில் வைத்து, ரெண்டு கையையும் நீட்டச் சொல்லி ஹெட் மாஸ்டர் சங்கரநாராயணன் பிரம்பு கொண்டு விளாசினார், கை வலிக்கும் மட்டும். அவருடைய கை வலிக்கும் மட்டும்.

இருபத்தஞ்சு முப்பது அடிகள் இருக்கும். ஒரு முனகல் இல்லாமல் வெங்கடாசலம் அத்தனையையும் பெற்றுக் கொண்டான். ஆனால் அத்தனை ஆசிரியர்கள், சக மாணவ மாணவிகள் முன்னால் நேர்ந்த அந்த சிறுமையால் அவன் மனசு கன்றிப் போனது முகத்தில் தெரிந்தது.

அன்றைக்குப் புதிதாய்ப் பிறந்த வெங்கடாசலத்துக்கு ஸ்டெல்லா டீச்சர் அருணாச்சலம் என்று ஞானஸ்நானம் செய்து வைத்தார்கள்.

வாப்பா மாற்றலாகி ஒவ்வொரு ஊராய்ப் போகிற போது, பிள்ளைகளும் பின்னாலேயே போவோம், புஸ்தகக் கட்டுகளைச் சுமந்து கொண்டு, அம்மாவின் முந்தானை யைப் பற்றிக் கொண்டு.

பரமக்குடிக்குப் பிறகு, ரெண்டு ஊர்களைக் கடந்து, பத்தாங் க்லாஸ்க்கு மதுரை செயின்ட் மேரிஸ் ஸ்கூல்.

ஆங்கில ஆசிரியர் அருளுக்குப் பிரம்பு ரொம்பப் பிரியமான வஸ்து.

கால் வருஷப் பரீட்சை விடைத்தாள்களை மாணவர்களுக்கெல்லாம் கையளித்த வைபவத்தில் அவனவனைக் கையை நீட்டச் சொல்லி, பிழைகளுக்கு நேர் விகிதத்தில் பிரம்பு கொண்டு வாரி வழங்கினார் அருள். ஆங்கிலத்தில் நான் சராசரிக்கு மேம்பட்டவனானாலும், என்னுடைய முறை வந்த போது. என்னுடைய தகுதிக்கு அதிகமாகவே எனக்குப் பூசை கிடைத்தது. உள்ளங் கைகள் ரெண்டும் நெருப்புப் பட்டுக் காந்துகிற மாதிரி எரிச்சல்.

ஆசனத்துக்குத் திரும்பி வந்து அமர்ந்து. விடைத்தாளைப் பிரித்துப் பார்த்தால், அது, ரமேஷ் பாபுவுடையது.

ரீஸஸ்ப் பீரியடுக்கு மணியடித்து, மாணவர்க ளெல்லாரும் வெளியே போன பின்னால், அருள் சார் என்னை அருகில் அழைத்தார்.

“அது ஒன்னோட பேப்பர் இல்லியா?”

“இல்ல சார்.”

“இப்பத்தான் கவனிச்சேன். ஒன்னோட பேப்பர் அடீல இருக்கு. அது ஒம்ப் பேப்பர் இல்லன்னு அப்பவே சொல்லியிருக்கலாமேடா தம்பி.”

கையைப் பிடித்து இழுத்து அருள் சார் என்னை அணைத்துக் கொண்டதோடு ஒரு படி மேலே போய்க் கன்னத்தில் ஒரு முத்தம் பதித்தார்.

பிரம்படி பட்ட போது என் கண்ணில் திரளாத கண்ணீர், அவருடைய அரவணைப்பில் திரண்டது.

அந்த அசம்பாவிதத்துக்குப் பிறகு அருள் சார் பிரம்பைப் பூரணமாய் பகிஷ்காரம் பண்ணிவிட்ட நல்ல சங்கதி நடந்தது.

பள்ளிக்கூடங்களில் பிரம்பு ராஜ்யம் நடந்து கொண்டிருந்தது நம்முடைய பள்ளிப் பிராயத்தில் தான், இப்போதெல்லாம் அந்த அராஜகம் அஸ்தமித்து விட்டது என்று நினைத்துக் கொண்டிருந்த போது, ஒரு நவநாகரீக ஃப்லாட்டில் பிரம்பைப் பார்த்த பாதிப்போடு அந்தக் கடையை சமீபித்தேன்.

கையில் பிரம்போடு உள்ளே புகுந்த என்னைக் கடைக்காரர் எதிர் கொண்டார்.

“என்ன சார், அந்தப் பீஸ்ல மிஸ்ட்டேக் இருக்கா? மாத்தித் தரச் சொல்லட்டுமா?”

“மாத்தித் தர வேண்டாம் சார், இது நல்லாவே அடிக்கிது. இது நல்லா விக்கிதா சார்?”

“அமோக வியாபாரம்ல! புள்ளைங்கள சாப்புட வக்ய, படிக்க வக்ய, பயங்காட்டன்னு எல்லாரும் வாங்கிட்டுப் போறாங்க.”

“ஸ்டாக் நெறைய இருக்கா சார்?”

“அது, அது பாட்டுக்குக் கெடக்கு. இது நம்ம சொந்தத் தயாரிப்பாச்சே!”

“ஓ, சொந்தத் தயாரிப்புங்களா!”

“ஆமா சார். இந்தப் பிரம்பு வேற எந்தக் கடைலயும் கெடைக்காது பாத்துக்குங்க.”

“ரொம்ப நல்ல சமூக சேவை பண்ணிட்டிருக்கீங்க சார்.”

“ரொம்பப் புகழ்றீங்க சார். சார், இப்ப ஒங்களுக்கு என்ன வேணும் சார்?”

“பிரம்பு தான், வேற என்ன!”

“அதான் கைல வச்சிர்க்கீங்களே, இன்னும் வேணுமா, வெரிகுட், வெரிகுட். ஒரு பீஸ் போதுமா சார்?”

“ஒங்கக் கடைல ஸ்டாக் எவ்ளோ இருக்கும்?”

“அது இருக்கும். ஒரு பதிமூணு பதினாலு டஜன். எதுக்குக் கேக்றீங்க?”

“அவ்ளவையும் ஒரு ரேட் போட்டு எனக்குக் குடுங்க.”

“சார் ஸ்கூல் ஏதும் நடத்தறீங்களா? ஸ்கூலுக்குக் கூட டஜன் கணக்குல தேவைப்படாதே!”

“ஸ்கூல் இல்ல சார், எல்லாம் ஓன் யூஸ் தான். என்ன சார் டிஸ்க்கவுன்ட்?”

“டிஸ்க்கவுன்ட்டெல்லாம் குடுக்க முடியாது சார். ஏன்னா, இது ஹாட் கேக். பீஸ் பத்து ரூவா. வேணும்னா ஃபுல் அமவுன்ட் குடுத்து வாங்கிக்குங்க. ஆமா, இத்தனப் பீஸ் நீங்க எதுக்கு வாங்கறீங்கன்னு எனக்குப் புரியலியே, வெளிநாட்டுக்கு எக்ஸ்ப்போட் பண்ற ஐடியாவா சார்?”

“ஆமா, இத எக்ஸ்ப்போட் பண்றது இப்ப முக்கியம்ல? நா எதுக்கு பல்க்கா வாங்கறேன்னு தெரிஞ்சா நீங்கக் கோவப்படுவீங்க.”

“ஐயோ, எனக்குக் கோவமெல்லாம் வராது சார். சும்மா சொல்லுங்க.”

“இந்தப் பிரம்பையெல்லாம் மொத்தமாப் போட்டுக் கொளுத்தப் போறேன்.”

“ஐயையோ, ஏன் சார்?”

“ஏதோ என்னாலான சின்ன சமூக சீர்திருத்தம். ஒரு அடையாள எதிர்ப்பு. சின்னக் கொழந்தைங்கள அடிக்கிற அநாகரிகம் இதோட ஒழியணும்ங்கற நல்ல எண்ணம் தான்.”

“அதெப்டி சார் ஒழியும்? அடுத்த வாரம் எங்கக் கடைல புது ஸ்டாக் வந்துருமே!”

“அடுத்த வாரம் நா திரும்ப வருவேன். அந்த ஸ்டாக்கையும் மொத்தமா வாங்கிக் கொளுத்துவேன்.”

“அதுக்கடுத்த வாரம், வேற ஸ்டாக் வந்துருமே!”

“அதையும் வாங்கிக் கொளுத்துவேன்.”

“அதுக்கடுத்த வாரம்?”

“அதையும் கொளுத்துவேன்.”

“அதுக்கடுத்த வாரம்?”

“கொளுத்த மாட்டேன்.”

“தோத்துப் போய்ப் பின் வாங்கிருவீங்க.”

“இல்ல.”

“அப்ப?”

“ஒங்கக் கடையவே கொளுத்திருவேன்.”

**சமநிலைச் சமுதாயம், செப்டம்பர்** 2010

# முதலையொன்று பல்லியான கதை

“என்ன டேய், கத எழுத ஒக்காந்தாச்சா?”

“கத இல்ல”

“அப்ப என்ன, பால்க்கணக்கா எழுதுதா? பொய் ஏம்ல சொல்லுத”.

“கத இல்ல. குறு நாவல்”.

“அட, எல்லா எழவும் ஒண்ணு தான மக்கா!”

“எழவு கிழவுன்னு தரக்குறைவாப் பேசாத. நா ஸீரியஸ்ஸு எழுதப்போறேன். என்னோட வீரியத்தக் கொறச்சிராத”.

“நீ ஸீரியஸ்ஸுத்தான் எழுதுவா. வேற என்னா சிரிப்புக் கதையா எழுதப் போறா? வழக்கம் போல சொந்தக்கத சோகக் கத தான?”

“சோகக் கதயா இருக்கலாம். ஆனா சொந்தக்கத இல்ல. இந்த வாட்டி படற்கைல எழுதப் போறேன். ஓப்பனிங் ஸீன். நம்மக் கதாநாயகன் காலேஜ்க்குப் போறான். கார்ல காலேஜ்க்குப் போறான். ப்ஸல்ஃப் டிரைவிங். திருச்சி ஜில்லாவுலயே அந்தக் காலத்ல காரோட்டிக்கிட்டுக் காலேஜ்க்குப் போன ஸ்ட்டுடன்ட் இவன் ஒருத்தனாத் தானிருக்கும். லைஸன்ஸ் எடுத்து நாலு மாசந்தான் ஆச்சி. வாப்பா தான் டிரைவிங் சொல்லிக் குடுத்தது. வாப்பாட்ட இவனுக்கு ரொம்பச் செல்லம். சின்ன வயசுல கணக்குல நூத்துக்குப் பதினஞ்சி மார்க் வாங்கிட்டு வந்ததுக்கு, அரபி படிக்கிறப்ப திக்கித் திக்கிப் படிச்சதுக்கு, கள்ளத்தனமாக் காஃபி குடிச்சதுக்கெல்லாம் நறுக் நறுக்னு தலைல குட்னவர் தான் வாப்பா. ஆனா, இப்ப தோளுக்கு மேல வளந்த பெறவு ரொம்ப ரொம்பச் செல்லம். ஒரே பையன். இவம்மேல வாப்பாவுக்கு ரொம்ப எதிர்பார்ப்பு இருந்திச்சி. எம் எஸ் ஸில இவனச் சேத்து வுடறப்பவே இந்தப் பயல எப்டியாச்சும் ஐ ஏ எஸ் ஆக்கிப் பாத்துரணும்னு விபரீதக் கற்பனையெல்லாம் வாப்பா வளத்து வச்சிருந்தார். நம்மப் பய காரோட்டிக்கிட்டுக் காலேஜ்க்குப் போற வழியில, பஸ் ஸ்டாப்ல ஒரு தேவதையப் பாத்தான்”.

“ஒடனே லிஃப்ட் குடுத்துருப்பானே?”

“அதெப்டி ஒனக்குத் தெரியும்?”

“எல்லாந் தெரியும். அவள அவளோட சீத்தாலக்ஷ்மி ராமசாமிக் காலேஜ்ல போய் எறக்கி வுட்டுட்டு இவன் இவனோட ஜமால் முஹம்மது காலேஜ்க்குப் போனான், அவகூட சினிமாக்குப் போனான், பஸ் ஸ்டாண்ட்ல ஒக்காந்து பேசிட்டிருந்தான், மாம்பழச்சாலை ல,

காவேரிக் கரைல ஒக்காந்து பேசிட்டிருந்தான், அவளோட காலேஜ் டேக்குப் போனான். எல்லாமே தெரியும் டேய்".

"ஆனா, அவன் அவளத் தொட்டுக் கூடப் பாக்கலன்னு தெரியுமா?"

"அதுவுந் தெரியும், அதோட, அந்தப் புள்ளயையே நெனச்சிக்கிட்டு பரிச்ச எழுதி, இந்தப்பய கோட் அடிச்சாங்கதும் தெரியும். ஒரு வாட்டி ரெண்டு வாட்டி இல்ல, மூணு வாட்டி எம் எஸ் ஸில கோட் அடிச்சி, ஸூப்பரா ஒரு ஹாட் ட்ரிக் அடிச்ச வெவரமும் தெரியும்".

"ஹாட் ட்ரிக் அடிச்சது வாஸ்தவந்தான். ஆனா, அதுக்காக இந்தப்பய கவலையேப் படல. ஏன்னா, அந்தப் பொண்ணு அப்டியொரு அப்ஸரஸ். அந்த அப்ஸரஸ் இவனப் பாத்து சிரிச்சா, இவங்கூட ஃப்ரண்ஸியா இருந்தாங்கத இன்னுங் கூட இவனால நம்ப முடியல. அவளோட சிநேகமாயிருந்த அந்த ரெண்டு வருஷம் ஒரு வசந்த காலம்".

"அதெல்லாஞ் சரிதாண்டேய். ஆனா, இந்தப் பயல ஐ ஏ எஸ் ஆக்கிரணும்னு எதிர்பார்ப்புகளோடயிருந்த அந்த வாப்பா எவ்ளோ வருத்தப்பட்டிருப்பார்னு இந்த சனியன் நெனச்சிப் பாத்தானா?"

"சரி, அதுக்கென்ன செய்ய முடியும். அவனவனுக்கு எதெது நடக்கும்னு அல்லா எழுதி வச்சிருக்கானோ அதான் நடக்கும். நாம இவனப் பத்தி நெனச்சது தப்புன்னு வாப்பா புரிஞ்சிக்கிட்டார். தூத்துக்குடியில ஸ்பிக் கம்ப்பெனில போய் வேலக்கிச் சேத்து விட்டார்".

"ஜெனரல் மானேஜர் வேலைல சேத்து விட்ருப்பார்".

"இல்ல. சேர்மனா சேத்து விட்டார். ஏல அந்தராத்மா, அப்பயிருந்து பாத்துட்டிருக்கேன். நீ ஸேம் ஸைட் ஃபௌல் பண்ணிட்டே இருக்கா. பொத்திக்கிட்டு இருக்கதாயிருந்தா இரி. இனிமே நீ வாயத் தொறந்தா ஒரே மிறி தான்".

"எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணுண்டேய். மக்கா, நீ திருநவேலிக்காரத் துலுக்கண்டு காட்டிட்டாப் பாத்தியா. எவங்கதயையோ சொல்லுதேன்னுப்புட்டு நீ ஒன்னோட சொந்தக் கதயச் சொல்லிக்கிட்டிருக்கா. நானும் கோட்டிக்காரங் கணக்காக் கேட்டுட்டிருக்கேம்லா, அதச் சொல்லு".

"அப்பவே சொன்னேம்ல டேய், நா படற்கைல எழுதுதேம்னு".

"என்னத்தப் படற்கைல எழுதுதா, எல்லாம் எனக்குத் தெரிஞ்ச கத தான மக்கா".

"ஆனா, முடிவு ஒனக்குத் தெரியாதே!"

"சொல்லு. முடிவு என்னான்னு சொல்லிப்புட்டண்டா நா பேசாம எஞ் சோலியப் பாக்கப் போயிருவேம்லா?"

"அது சரி, முடிவ இப்பவே சொல்லிப்புட்டா பெறவு நா எதுக்கு மாங்கு மாங்குன்னு ஒக்காந்து எழுதிட்டி ருக்கேன்! நா ஒனக்காக எழுதல. தமிழ் நாட்ல உள்ள ஆறரைக் கோடித் தமிழ் மக்கள், அப்பறம் இலங்கைத் தமிழர்கள், மலேசியத் தமிழர்கள், சிங்கப்பூர்த் தமிழர்கள், கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் புலம்

பெயர்ந்த தமிழர்கள், இணையதளத் தமிழர்கள் இவங்களுக்காக எழுதுதேன். ஒனக்கு இன்ட்ரஸ்ட் இருந்தா முடிவு வரக்யும் காத்திரு. இல்லாட்டி ஜகா வாங்கு".

"சரி சரி, நீ எழுது. நா வெய்ட் பண்றேன். ஆனா ஒன்னோட சோகத்தத் தமிழம்மேல எறக்கி வக்யாத. கொஞ்சம் ஹ்யூமரா எழுதப் பாரு".

"ட்ரை பண்ணுவோம். ஆனா நீ அதிகப் பிரசங்கித்தனமாப் பேசிட்டேயிருக்கப்படாது. நீ தொண தொணன்னுட்டு இருந்தா எனக்கு எழுத ஓடாது. பேசாம வாயப் பொத்திக்கிட்டிருக்கணும் சரியா?"

"உத்தரவு".

"ஆமா, நா எங்க விட்டேன்".

"யார்ட்ட கேக்க?"

"ஒன்ட்ட தாம்ல".

"பேசாம வாயப் பொத்திட்டிருக்கணும்ன?"

"இத மட்டுஞ் சொல்லிப்புட்டு வாயப் பொத்திக் கிருவியாம்".

"ஒங்க வாப்பா ஒன்ன ஸ்பிக் கம்ப்பெனிலச் சேர்மனா சேத்து வுட்டாரு".

"என்ன இல்ல. நம்மக் கதாநாயகன. என்னோட வாப்பா இல்ல. அவனோட வாப்பா. சேர்மனா இல்ல. க்ளார்க்கா. மாசம் நானுத்தியம்பது ரூவா சம்பளம். தூத்துக்குடி கிரேட் காட்டன் ரோடுல பள்ளி வாசல் காம்ப்பவுண்டுக்குள்ள ரூம். ஸிங்கிள் ரூம்".

ஸ்பிக்ல ரெண்டு அருமையான ஃப்ரண்ஸ் கெடச் சாங்க. சங்கர், கலைமணின்னு. இந்த மூணு பேரும் சேந்து கம்ப்பெனிய ஒரு கலக்குக் கலக்கிட்டிருந்தாங்க. இந்த மூணுபேத்துக்கும் அங்க த்ரீ மஸ்க்கட்டீர்ஸ்னு பேரு. மூணு பேரும் சிவாஜி கணேசன் ரசிகங்கங்கது ஒரு பெரிய ஒத்துமை. சங்கர் பிராமணப் பையன். ஆனா ரொட்டி சால்னா திங்கிற பிராமணன். பூவோட சேந்த நாரும் மணக்கும்னு இவனுங்கக் கூட சேந்து மட்டன் திங்கப் பழகிட்டவன். நம்பப் பயலோட ரூம்பு பள்ளிவாசலுக்குள்ளண்டு சொன்னேம்லா, ரும்புக்கு வெளிய தண்ணி பம்ப்பு. அங்க நின்னு தான் டவல் கட்டிக்கிட்டுக் குளிக்கணும். ஒரு நா நைட்ல மூணு பேரும் சார்லஸ் த்யேட்டர்ல சினிமா பாத்துட்டு, சங்கர் நம்மப் பய ரும்புலயே தங்கிட்டான். பள்ளி வாசல் காம்ப்பவுண்டுக்குள்ள. காலைல குளிக்கைலதாம் பிரச்சன. நம்ம ஆள் சங்கர்ட்ட, சங்கரா ஒரு விஷயம் சொன்னாத் தப்பா எடுத்துக்க மாட்டியேன்னான் மெதுவ்வா. சங்கர், சும்மா சொல்லு மச்சிங்கவும் இவஞ் சொன்னான், ஓப்பன்ல நின்னு தாங் குளிக்கணும். எல்லாரும் பாப்பாங்க. குளிக்கிறப்ப மட்டும் நீ பூணூலக் கழட்டி......வச்சுட்டு........ இவஞ் சொல்லி வாயக் கூட மூடல, சங்கர் ஆக்ஷன்ல எறங்கிட்டான். இதச் சொல்றதுக்கு ஏம் மச்சி இவ்ளோ யோசிக்கிறன்னு பூணூலக் கழட்டி இவங்கழுத்ல மாலையா மாட்டிவுட்டுட்டுக் குளிக்கப் போய்ட்டான்.

சங்கர் ஸ்பிக்ல வேலக்கிச் சேர்றப்ப வெறும் பி யூ ஸி தான். வேல பாத்துக்கிட்டே கரஸ்ப்பாண்டன்ஸ் கோர்ஸ்ல பி காம் படிச்சான். மூணு வருஷக் கோர்ஸ ரெண்டு வருஷத்ல முடிச்சான். அப்பறம் வெங்கடேஸ்வரா யுனிவர்ஸிட்டில எம் காம். எம் காம் பரிச்ச எழுத திருப்பதிக்கிப் போயிருந்தப்ப அங்க பரிச்ச எழுத வந்த ஒரு பொண்ண

ஐடியாப் பண்ண கதயெல்லாம் சங்கர் நம்மக் கதாநாயகன்ட்ட சொல்லியிருக்கான். இந்தக் கதக்கி அது தேவையில்ல, அதனால நா அதப்பத்தி எழுதல. உலகத் தமிழர்கள் யாரும் கோவிச்சிக்கப்படாது ப்ளீஸ். மச்சி மச்சின்னு பேசறப்பவே புரிஞ்சிக்கிட்டிருந்திருப்பீக, சங்கர் மெட்ராஸ்க்காரன்னு. எம் காம் முடிச்சப்பறம், என்னமோ அக்கவுன்ட்ஸ் கோர்ப்ஸல்லாம் படிச்சிப் பாஸ் பண்ணான். சும்மா சொல்லப்படாது, பொதுவா பிராமணப் பசங்களுக்கே ஐ க்யூ ஜாஸ்தி தான். அக்கவுன்ட்ஸ் எக்ஸூம்ஸ் எல்லாம் பாஸ் பண்ண பெறவு சங்கர் மெட்ராஸ்க்கு ட்ரான்ஸ்ஃபர் வாங்கிட்டு வந்து, அதே ஸ்பிக் கம்ப்பெனில எங்கயோ உச்சாணிக் கொப்புக்குப் போய்ட்டான்.

இந்த மூணு பேத்ல கலைமணிக்கித்தான் மொதல்ல கல்யாணம் ஆச்சி. கலைமணிக்கெல்லாம் சம்பளத்துக்கு வேல செய்யணும்னு தலையெழுத்தே இல்ல. அவங்க அப்பா தூத்துக்குடில பெரிய உப்பள ஓனர். கலைமணிக் கல்யாணம் ரொம்ப அமர்க்களமா நடந்துச்சி. யாரு சொன்னாகன்னு தெரியல, கல்யாணத்துக்கு வாழ்த்துக் கவிதை எழுத வேண்டிய வேல நம்ம ஆள் தலைல விழுந்திரிச்சி.

இவனும் பேனாவக் கையில தூக்கிக்கிட்டான். ஸ்டேஷனரி செக்ஷன்ல இண்டன்ட் போட்டுப் பேப்பரும் வாங்கியாச்சி. பெறவு என்ன, கவிதை எழுதிப்புட வேண்டியது தான!

ஆனந்தப் பண்பாடும் சிங்காரப் பறவைகளே

கல்யாணத் தமிழ் பாடுங்கள்

அட, வந்துருச்சே டேய். சரி, அடுத்த வரி?

“ஆனந்த” ங்கதுக்கு எதுகையா வரணும். எங்க பாப்பம். ஹ.

வானத்தை விட்டிறங்கி இங்கு எங்கள் கலைமணியின் மணக்கோலம் காண வாருங்கள்

அப்பறம் என்ன!

ஆறு ஸ்டான்ஸூப் போட்டு, ஒண்ணே முக்காப் பக்கத்துக்கு வச்சி மொழக்கிட்டான். Front and back பிட் நோட்டீஸ் அடிச்சி எல்லார் கைலயும் ஒவ்வொண்ணு குடுத்தாச்சி.

அட, நம்மட்ட கூட என்னமோ ஒரு தெறம இருக்கே டேய்னு இவம் மண்டக்கி எட்டவும், கத எழுதிப் பாத்தா என்னன்னு ஒரு ஆச வந்திச்சி.

பேப்பர்தான் இண்டன்ட் போட்டு வாங்கிக்கலாமே!

கத எழுதிக் குமுதத்துக்கு அனுப்பி வச்சான். அடுத்த மாசமே பத்திரிகைல வந்துருச்சி. எம்பது ரூவா மனியாடர் வேற! நம்மப் பயலுக்குக் கையும் ஓடல காலும் ஓடல.

அப்பறம், ஆனந்த விகடன், கல்கி, கண்ணதாசன், கணையாழின்னு வண்டி போய்க்கிட்டே இருந்திச்சி. ரெட் ஸிக்னலே கெடையாது. த்ரூவா கிரீன் ஸிக்னல் தான்.

அஞ்சாவது கதக்கி இலக்கியச் சிந்தனை ப்ரைஸ் வேற! எங்ஙனயோ போய்ட்டியே டேய்ன்னு காலரத் தூக்கி விட்டுக்கிட்டான். என்னவேய் பெரிய ஐ ஏ எஸ்! ஒரு ஐ ஏ எஸ்க் காரனக் கூப்ட்டு என்னப் போல ஒரேயொரு கத எழுதச் சொல்லு பாப்பம்!

காலரத் தூக்கி விட்டுக்கிட்டு நிக்கிறப்ப தான் கல்யாணக் காய்தம் ஒண்ணு வந்திச்சி.

யாருக்குக் கல்யாணம்ங்கிக, வேற யாருக்கு, நம்மக் கதாநாயகனோட தேவதைக்கித் தான்.

காலரத் திரும்ப மடக்கி விட்டுட்டு, பேப்பரும் பேனாவும் எடுத்துக்கிட்டு ஒக்காந்தான். என்னத்துக்கு? தேவதைய நெனச்சி ஒரு சோகக் கவிதை எழுதத்தான்! வேற என்ன செய்ய முடியும்! தலைப்பு : காதலிக்குக் கல்யாணம்.

கவிதை எழுதிப் பாக்கெட்ல வச்சுக்கிட்டுக் கொஞ்ச நேரம் அழுதான். அந்தக் கவிதைப் பேப்பர் சட்டப் பாக்கெட்லயே எப்பவும் இருந்திச்சி. அப்பப்ப அத எடுத்துப் படிச்சிக்குவான், அதுக்கு ஒரு முத்தமும் குடுத்துக்குவான். மறுபடி மடிச்சிப் பாக்கெட்ல வச்சிக்குவான்.

அதெல்லாஞ் சரி தான், கிறுக்குப் பய ஞாயித்துக் கெழம திருநவேலிக்கி, வூட்டுக்குப் போறப்பவும் அதப் பாக்கெட்ல வச்சிக்கிட்டாப் போவான்?

போனான்.

அந்தப் பேப்பர் வாப்பாக் கைல மாட்டிக்கிச்சி. பெறவு என்ன, ரப்ச்சர் தான். வாப்பாப் பாத்தாரு. சீ, இந்தப் பயல இப்டியே வுட்றப்படாதுன்னு, மாமாப் பொண்ண டக்ன்னு பேசி முடிச்சிட்டாரு.

நம்ம ஆளுக்கு நிக்கா முடிஞ்சிது. மாமா பெரிய பிஸினஸ் மேன். இந்த பிசாத்து வேலய வுட்டுப்புட்டு வாங்க மருமவனே மெட்ராஸ்ல கட வச்சித் தர்றேன்னு இவன மெட்ராஸ்க்குப் புலம் பெயர வச்சிட்டாரு. மாமா

ப்ஸட்டப் பண்ணிக்குடுத்த பிஸினஸ இவன் ஜோரா டெவலப் பண்ணான். மூவாயிரம் சதுர அடில அண்ணா நகர்ல அட்டகாசமா ஒரு ஏஸி டிப்பாட்மெண்ட் ஸ்டோர். நம்மப் பயலுக்கு லைஃப் எங்கயோ எகிறிப் போயிருச்சி. கழுத்துல ட்டை கட்டாம தொர வெளிய கெளம்ப மாட்டாக. மடிப்புக் கலையாத உடுப்பு என்ன, அவுக இங்லீஷ்ல அசத்தறது என்ன, கார் என்ன, எடுபிடி ஆட்கள் என்ன, ஃபுல் ஸூட் என்ன, ரோட்டரி க்ளப் என்ன, அரசியல் ப்ரேவேசம் என்ன, ஃபில்ம் சென்ஸூர் போர்டு மெம்பரானது என்ன, பூர்ஷ்வாத்தனமான இலக்கிய மீட்டிங்ஸ் என்ன, அடேங்கப்பா, ஒரே டமால் டுமீல் தான். இப்டியே ஆஹா ஓஹோன்னு போய்க்கிட்டிருந்த வாழ்க்க திடீர்னு என்னச்சுன்னா...

“ஸ்டாப். ஸ்டாப். அங்ஙனயே பிரேக் போடு”.

“யார் டேய் அது நடுவுல?”

“நாந்தாம் மக்கா, ஒன்னோட அந்தராத்மா”.

“ஏல, ஒன்னிய வாயத் தொறக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கேம்லா?”

“நா வாயத் தொறக்கலண்டா நீ ஒம்பாட்டுக்குக் கதைய வளத்துக்கிட்டே போவா.. நீ எங்கிட்டு வாறான்னு தெரியுது. ஒம் பிஸினஸ் டௌனானக் கதையச் சொல்லி இப்ப ஒப்பாரி வக்யப் போறா”.

“எம் பிஸினஸ் இல்ல. நம்மக் கதாநாகயனோட பிஸினஸ்”.

“அட அதத்தாம்ல சொல்லுதேன். ஏல, நாஞ் சொல்லதக் கேளு. இந்த பிஸினஸ் நொடிச்சிப்போன கத, வூட்ட வித்தது, கார வித்தது, கடனாளியானது, அவமானப்பட்டது, கடேசிக் காலத்ல வாப்பாவயும் அம்மாவயும் சரியா கவனிக்க முடியாமக் கஷ்டப்பட்டது இந்த சங்கதியயெல்லாம் ஒரு பத்துப் பதினஞ்சி கதைல நீ பொலம்பித் தள்ளிட்டா. திரும்பத் திரும்ப அந்த வெட்டி வெள்ளாவியவே வச்சிட்டிருக்காத. அதுக்கு மேக்கொண்டு விஷயம் என்னமும் இருந்தாச் சொல்லு. சொல்லிப்புட்டுக் கதைய நறுக்னு முடி”.

“அப்டியா சொல்லுத?”

“அப்டித்தான் சொல்லுதேன். நீ என்ன தொடர் கதையா எழுதுதா? குறு நாவல், தெரிஞ்சிக்க. அரச்ச மாவையே அரச்சிட்டிருந்தா கத நீண்டுக்கிட்டே போயிரப் போவுது”.

“நீ சொல்லதுலயும் ஒரு பாய்ன்ட் இருக்கத்தாஞ் செய்யுது. சரி, நீ சொல்லிப்புட்டேல்லா, இனிமே நீ வாயத் தொறக்கப்படாது”.

“கொட்டாவி வந்தா மட்டும் தொறப்பேன்”.

சரி நா எங்க வுட்டேன்? நீ வாயத் தொறக்காத. நானே ஞாபகப்படுத்திக்கிருதேன். அதான், நம்மக் கதாநாயகனுக்கு பிஸினஸ் டவுன் ஆகி, கடைய மூடியாச்சி, ஆட்ட பாட்டமெல்லாம் ஓஞ்சி போயி அடங்கி ஒடுங்கிக் கெடக்கான். மழ விட்டாலும் தூவானம் விடலங்க மாதிரி கடைய மூடி ரெண்டு வருஷங் கழிச்சி ஒரு ஃபோன் வருது, இன்க்கம்ட்டாக்ஸ் டிப்பாட்மென்ட்லயிருந்து. டாக்ஸ் அரியர்ஸ் ஒரு மூவாயிரம் ரூவா கட்டணுமாம். கடைய மூடி ரெண்டு வருஷங்கழிச்சி எப்டித்தான் ரூட் போட்டு இவனப் புடிச்சாகளோ! வாலெட்ல எப்பவும் எட்டாயிரம், பத்தாயிரம்னு சலவ நோட்டு வச்சிக்கிட்டு அலைறவனுக்கு இந்த மூவாயிர ரூவா இப்பப் பெரிய அமௌன்ட். இங்க அங்கப் பொரட்டி, ஆழ்வார்ப்பேட்டைல பழைய ஆடிட்டரப் போய்ப் பாத்துப் பணத்தக் கட்ட ஏற்பாடு பண்ணிட்டு வந்தான். கெட்ட நேரம் அத்தோட போச்சா, ஒண்ர லச்சம் ரூவா கட்டணும்னு ஒரு நோட்டீஸ் வருது. ஈ எஸ் ஐ லயிருந்து. ஒண்ர லச்சத்துக்கு இவன் எங்க போவான்? போனான். எங்க போனான்? இவனுக்குத் தெரிஞ்ச ஒரு வக்கீல்ட்ட போனான். கோடிகோடியாக் கரன்ஸியக் குமிச்சி வச்சிருக்க க்ரிக்கெட் ப்ளேயருக் கெல்லாம் வெளி நாட்டுக் கார் இம்ப்போட் பண்ணதுக்கு டியூட்டிய வைவ் பண்ற அரசாங்கம், நொடிச்சிப் போன ஒரு எக்ஸ் பிஸினஸ் மேன இப்டி ஹிம்சிக்கிறது என்ன ஞாயம்னு பொலம்பிக்கிட்டே போனான். வக்கீல் கேஸ் போட்டார். வாய்தா வாய்தான்னு கேஸ் இழுத்துக்கிட்டே கெடக்கு.

கேஸ் ஒரு பக்கம் கெடக்கட்டும், நாம கேஷ்க்கு வழியப் பாப்போம்னு. நம்மக் கதாநாயகன் ஒரு சினிமா டைரக்டரப் போய்ப் பாத்தான். இவன் எழுதி, பத்திரிகைகள்ள வந்த கதைகளயெல்லாம் போய்க் காட்னான். சரி, வசனம் எழுதச் சான்ஸ் தறேன், பாட்டெழுதச் சான்ஸ் தறேன்னு டைரக்டர் இவன அலைய விட்டார். டைரக்டர் வீடு வளசரவாக்கத்ல. அண்ணா நகர்லயிருந்து கௌம்பி ஷாட் கட்ல இந்தப் பாவி நடந்தே போவான்.

பூந்தமல்லி ஹைரோடக் கட் பண்ணி, நெற்குன்றம், மதுரவாயல் வழியா வளசரவாக்கம். இவம் போன நேரம் டைரக்டர் சார் வீட்ல இல்லன்னா, வெராண்டாவுல கெடக்கற பெஞ்ச்ல மணிக்கணக்ல ஒக்காந்தேயிருக்கணும்.

அப்டி ஒரு நாள் ஒக்காந்திருக்கைல தான், ப்ஸல் ஃபோன்ல ஒரு எஸ்ப்ஸம்மெஸ் வந்துச்சி. ஒரு க்விஸ் போட்டியாம். சினிமா சம்மந்தப்பட்டது. பழைய படங்கள். ஜெயிச்சா அஞ்சாயிரம் ரூவாயாம். ஃபோன்ல அம்பது ரூவாய்க்கிச் சார்ஜ் இருந்தது. அட் ய டைம் அம்பது ரூவாக்கித் தான் டாப் அப் பண்றது. இன்னிக்கிப் போட்டுப் பாத்துர்றது தான். இந்த அம்பது ரூவாய அஞ்சாயிரமா மாத்திர்றது தான்னு முடிவு பண்ணிப்பிட்டான். கேள்வி எல்லாமே எம்ஜியார்ப் படத்லயிருந்து தான்.

மொதக் கேள்வி, எம் ஜி ஆர் பிறந்த ஊர் எது? ஏ. கல்கத்தா. பி. கண்டி, ஸி. பாலக்காடு.

சின்னப்புள்ள கூட சொல்லிரும் “பி”ன்னு. தட்டி விட்டான்.

சரியான பதில். வாழ்த்துக்கள்.

அடுத்த கேள்வி. எம் ஜி ஆரும் சிவாஜியும் சேர்ந்து நடித்த ஒரே படம் எது? ஏ. கூண்டுக்கிளி. பி. வண்ணக்கிளி ஸி. பஞ்ச வர்ணக்கிளி.

கேள்வி என்ன டேய் இவ்ளோ ஈஸியா இருக்கு! இன்னிக்கி அஞ்சாயிரம் ஐயாக்குத் தான்.

அமுக்கு ஏ.

எம் ஜி ஆர் நடித்த திருடாதே படத்துக்கு இசையமைத்தவர் யார்?

ஏ. கே வி மஹாதேவன் பி. விஸ்வநாதன் ராமமூர்த்தி ஸி. எஸ்.எம்.சுப்பையா நாயுடு.

இது கொஞ்சம் கஷ்டமான கேள்விதான். அதாவது மித்தவனுக்குக் கஷ்டம். நமக்கு என்ன டேய்! அமுக்கு ஸி.

வரிசையா வந்த எல்லாக் கேள்விக்கும் நம்ம ஆள் ஃபிங்கர் டிப்ஸ்ல பதில் வச்சிருந்தான்.

எம் ஜி ஆரும் தேவிகாவும் இணைந்து நடித்த ஒரே படம் எது?

உலகம் சுற்றும் வாலிபன் படத்தின் டைரக்டர் யார்?

எம் ஜி ஆரும் சரோஜா தேவியும் இணைந்து நடித்த முதல் படம் எது?

சின்ன வயசுல சினிமாவுக்குப் போனா, ஸ்க்ரீன்ல சிவாஜி மூஞ்சி தெரிஞ்சாத்தான் படம் பாத்த மாதிரி இருக்கும். எம் ஜி ஆர்ப் படமெல்லாம் பாக்கவே கூடாது. ஹராம். சரி சரி, பாக்காத எம் ஜி ஆர்ப் படத்லயே இந்த மொழக்கு மொழக்குதியே டேய், சிவாஜி படத்ல கேள்வி கேட்டா, போட்டி நடத்றவன் போண்டியாயிருவான்!

எம் ஜி ஆர் நடித்த கடைசிப்படம் எது?

ஏ. இதயக்கனி. பி. பல்லாண்டு வாழ்க ஸி. மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்.

அப்பா, இதான் கடேசிக் கேள்வி. தட்டி விட்டான் ஸிய. வாழ்த்து வந்துச்சி. பின்னாலேயே அடுத்த கேள்வியும் வந்துருச்சி. அப்ப இது கடேசிக் கேள்வி இல்லியா? அடப் பாவி மக்கா!

கண் போன போக்கிலே கால் போகலாமா என்கிற பாடல் இடம் பெற்ற படம் எது? ஏ. பணம் படைத்தவன் பி. பணத் தோட்டம் ஸி. பணக்காரக் குடும்பம்.

இவன் ஏ ய அமுக்னவொடன ப்ஸல்ஃபோன் செத்துப் போச்சி. சார்ஜ் காலி. அம்பது ரூவா அவுட்.

இவன் வந்த நேரத்துக்கு இந்த டைரக்டர் வூட்ல இருந்திருந்தா அம்பது ரூவா அம்போன்னு போயிருக்காது.

எல்லாம் நேரம் டேய்.

ப்ஸல்லத் தூக்கிப் பாக்கெட்ல போட்டுக்கிட்டுத் திரும்பி ஷாட் கட்ல நடந்தான்.

வக்கீல், அடுத்த வாய்தா டேட் எப்பன்னு ஃபோன் பண்ணிக் கேட்டுக்கச் சொல்லியிருந்தார்.

எங்கயிருந்து ஃபோன் பண்ண!

ரெண்டு ரூவா குடுத்து எஸ் ட்டி டி பூத்லயிருந்து தான் பண்ணனும்.

அடுத்த மாசம் பதினெட்டாந் தேதி டேட் போட்டி ருக்குன்னாரு வக்கீல்.

“தீர்ப்பு நம்ம பக்கந்தாஆவும். அடுத்த மாசம் கேஸ நடத்திப்புடுவோமா, என்ன சொல்றீங்க?”

தீர்ப்பு நம்ம பக்கந்தா ஆவுமா? அப்பக் கேஸ நடத்திப்புட வேண்டியது தான்.

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடி வெல்லும் டேய்!

இவன் பலம்மாத் தலையாட்டினான்.

“என்னா, ஒண்ணுஞ் சொல்ல மாட்டங்கீங்க?”.

ஃபோன்ல மண்டையாட்னா அவருக்கு என்னமாத் தெரியும், மரமண்ட! வாயத் தொறந்து சொல்லேம்ல.

“நடத்திரலாம் சார். நடத்திரலாம் சார். சார், நமக்கு சாதகமாத் தீர்ப்பு ஆயிருமா சார்?”

“எனக்கு நம்பிக்கயிருக்கு. நாஞ் சொன்ன டாக்குமென்ட்ஸ் எல்லாம் ரெடி பண்ணி வச்சிக்கிருங்க ”.

எல்லாம் ஏற்கனவே ரெடி பண்ணி வச்சாச்சி வேய்.

விஸிலடிச்சிக்கிட்டே வூட்டுக்கு வந்து, அந்த டாக்குமென்ட்ஸ் எல்லாம் போட்டு வச்சிருந்த ஃபைல எடுத்துப் பொரட்டிப் பாத்தான். இவனோட மாஜி டிப்பாட்மென்ட் ஸ்டோரோட அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர் கண்ல பட்டுச்சி.

பேர்களயெல்லாம் வாசிச்சிப் பாத்தான். அந்தப் பேர்களுக்குண்டான மொகங்களையும் மனசுக்குள்ள நெனச்சிப் பாத்துக்கிட்டான்.

சையத் ஸிராஜ், சவுந்தர பாண்டியன், அஷ்ரஃப் அலி, ஜெய்க்குமார், செல்வராஜ், புகழேந்தி, விவேகானந்தன், சுமதி, சாமுண்டீஸ்வரி, தமிழரசி, அனுசூயா, சுஜாதா, மஞ்சுளான்னு லிஸ்ட் நீளமாப் போவுது.

அத்தன பேத்துக்கும், ஹ, இவுக மொதலாளி!

ஹ்ம்ம்ன்னு ஒரு பெருமூச்சு விட்டுக்கிட்டான்.

பெருமூச்சு விடறது சரி டேய், அடுத்த மாசம் கேஸ் நடத்தணும்ண்டா வக்கீலுக்குக் ஃபீஸ் குடுக்கணும்லா! மவராசன் எம்புட்டுக் கேப்பார்ன்னு தெரியலியே.

தெரிஞ்ச ஆள் தான். இவனோட நெலமையும் தெரிஞ்ச ஆள்தான். அப்டி ஒண்ணும் அதிகமாக் கேட்டுப்புட மாட்டார். மிஞ்சிப்போனா ஒரு ரெண்டாயிரம் ரூவாக் கேப்பார்.

ரெண்டாயிரம் ரூவான்னு சுளுவாச் சொல்லுத, ஏல, ப்ஸல் ஃபோன ரீச்சார்ஜ் பண்ணதுக்கு அம்பது ரூவா இல்லாம அல்லாடிட்டுக் கெடக்கா, ரெண்டாயிரம் ரூவா எப்டிக் குடுப்பா!

கஷ்டந்தான். ரொம்ப ஸீரியஸ்ஸு யோசன பண்ணான்.

இந்த டைரக்டர் சரிப்பட்டு வரமாட்டார், சினிமாக் கனவயெல்லாம் மறந்துரணும். ஒடனடியா மாசச் சம்பளத்துக்கு எதாவது ஒரு கம்ப்பெனில வேலக்கிச் சேரணும்.

பத்து வருஷம் மொதலாளியாயிருந்து ஆட்கள வச்சி வேல வாங்கினவன், மாசா மாசம் எல்லாருக்கும் சம்பளம் போட்டவன், இப்ப இன்னொரு எடத்ல சம்பளத்துக்கு வேல செய்யவா!

மாசா மாசம் சம்பளம் போட்டவன்தான். இப்ப சோத்துக்கு வழியில்லாமல்லா இருக்கான்!

சரி, எங்கயாச்சும் வேலக்கி ட்ரை பண்ணித்தான் ஆகணும். இல்லாட்டி டப்பா டான்ஸ் ஆடிரும். என்ன வேல கெடக்யும்?

இப்ப எங்கப் பாத்தாலும் கம்ப்யூட்டராத்தான் இருக்கு. கம்ப்யூட்டருக்கும் நம்மப் பயலுக்கும் ஸ்நானப்ராப்தியே கெடையாது.

சரி, ஒரு மாசம் ரெண்டு மாசத்ல ஒங்க ஆஃபீஸ்லயே கம்ப்யூட்டர் கத்துக்கிருதேன் மொதலாளின்னு சொல்லி வேலக்கிச் சேந்துக்கிர வேண்டியதுதான்னு ஒரு முடிவுக்கு வந்தான்.

என்ன, ஒரு ஏழாயிரம் எட்டாயிரம் சம்பளம் தரமாட்டனா? சமாளிச்சிரலாம்.

தூத்துக்குடில வேல பாக்றப்பவே, டைப்பிங் கத்துக்க மச்சின்னு சங்கர் சொன்னான்.

நம்மப் பயலுக்குக் கொழுப்பு. வெள்ளப் பேப்பரக் கைல சுருட்டிப் புடுச்சிக்கிட்டுக் காலங்காத்தால டைப்ரைட்டிங் க்லாஸ்க்குப் போற பசங்களயும், தாவணிப் பொண்ணுங்களயும் பாத்தாலே இவனுக்கு ஒரு எளக்காரம்.

சின்ன வயசுல கொழுப்பெடுத்துப் போய் மெத்தனமா இருந்துட்டமேன்னு நெனச்சி வருத்தப்பட்டுக்கிட்டே நம்மக் கதாநாயகன் அண்ணாநகர் போகன்வில்லாப் பார்க் ரோட்டுல மெதுவா நடந்து போய்க்கிட்டிருக்கான். ஆமா, ஏல என்ன நீ வாயேத் தொறக்கல!

“நீ தானடேய் வாயத் தொறக்கக் கூடாதுன்னுருக்கா”.

“கொட்டாவி கூடவா வரல?”

“கொட்டாவியா! அதெப்டி டேய் வரும்! கத முடியப் போவுது. கடேசி வரியில ஒரு கொக்கி போட்டுக் கதய முடிப்பா. வெடுக்னு மனச ஒரு சுண்டு சுண்டி இழுப்பா. அத எதிர்பாத்துத்தான் ஒக்காந்துட்டிருக்கேன். சரி, அதுக்கு முந்தி நீ கோவிச்சிக்க மாட்டன்னா ஒரே ஒரு விஷயம் கேட்டுக்கட்டுமா மக்கா?”

“கேளு டேய்”.

“பெறவு ஒந்தேவதை......”.

“அவ சமயபுரத்ல சாமிகும்புட்டுக்கிட்டு இருப்பா”.

“பெறவு அவ கண்ல படவேயில்லியா?”

“அடேய் அந்தராத்மா, பொழுதன்னிக்கும் எங்கூடத் தான் இருக்க, தெரியாத மாதிரிக் கேக்கியே டேய்”.

“எனக்குத் தெரியும் மக்கா, ஆறரைக் கோடித் தமிழ் மக்களுக்குத் தெரியாதுல்லா? அவுகளுக்காகச் சொல்லு”.

“அவ மெட்ராஸ்க்கு வந்தா, நாங்க மீட் பண்ணோம். பாவம் அவளோட ஹஸ்பண்ட் செத்துப் போய்ட்டாராம். ரெண்டு பெண் கொழந்தைங்க. படாத பாடு பட்டுக் கொழந்தைங்கள வளத்துப் படிக்க வச்சிருக்கா. இந்த ஆணாதிக்க ஒலகத்ல தன்னந்தனியா எதிர் நீச்சல் போட்டு ஜெயிச்சிருக்கா. அது ஒரு பெரிய சோகமான ஸக்ஸஸ் ஸ்டோரி டேய், தனியா ஒரு நாவலே எழுதலாம். ஆமா, நீ என்னா என்னோட தேவதைன்னு சொல்லிட்டிருக்கா? நம்மக் கதாநாயகனோட தேவதை”.

“ஆமா ஆமா. நாம படற்கைலல்லா கத எழுதிட்டிருக்கோம். மேல எழுது. நா மேலக்கூடிப் பாக்கேன். முடிவு நெருங்கிட்டுண்டு நெனக்யேன். ஒரு வேல கெடக்யணுமேன்னு யோசனையோட நம்மக் கதாநாயகன் மெதுவ்வா நடந்து போய்க்கிட்டிருக்கான், பெறவு?”

ஆமா. நடந்து போய்க்கிட்டிருக்கான். வூட்ல ஒரு பழைய கைனட்டிக் ஹோண்டா கெடக்கு. பெட்ரோல் போடக் காசு வேணும்லா! வேலக்கிச் சேந்தாத் தான் வண்டிய வெளிய எடுக்க முடியும். அப்டியே நடந்து போய்க்கிட்டிருக்கைல அவம் பக்கத்ல ஒரு ஸ்கூட்டர் வந்து நிக்கி. இவன் யோசனையா இருக்கானா, ஸ்கூட்டர் வந்து நின்னத கவனிக்கல. ஸ்கூட்டர்லயிருந்து எறங்கினவர் இவனப் பாத்து, சார் சார்ன்னு கூப்புடுதார். நம்மள எவம்ல சார்ன்னு கூப்புடப் போறான்னு இவன் தல குனிஞ்ச மேனிக்யே நடந்துட்டிருக்கான். அந்த ஆள் திரும்பவும் சார் சார்ங்கவும் இவன் தல நிமுந்து பாத்தான். அந்த ஆள் ஹெல்மட்டக் கழட்டுதாரு. பாத்தா, சவுந்தர பாண்டியன்! இவனோட கடைல அக்கவுன்ட்டன்ட்டா வேல பாத்த மனுஷன்!

தெறமையான அக்கவுன்ட்டன்ட், அருமையான மனுஷன். எத்தன வருஷமாச்சி இந்த ஆளப் பாத்து! இவனுக்கு ஒரே சந்தோஷம்.

“சவுந்தர பாண்டியன் சார், எத்தன வருஷம் சார் ஆச்சி ஒங்களப் பாத்து! எப்டி சார் இருக்கீக?”

“என்னா சார் நீங்க, வார்த்தக்கி வார்த்த என்ன சார் போட்டுப் பேசறிங்க. நீங்க நல்லா இருக்கீங்களா சார். எங்க சார் இந்தப்பக்கம்”?

“சும்மா கால் போன போக்ல போய்க்கிட்டிருக்கேன். ஆமா நீங்க எங்க இங்க?”

“டியூட்டி முடிஞ்சி வீட்டுக்குப் போய்க்கிட்டிருக்கேன் சார்”.

“வெரி குட். எங்க வேல பாக்றீக”.

“இங்கப் பக்கத்ல தான் சார். ஓ பிளாக்ல ஆ∴பீஸ். ஒங்களுக்குத் தெரிஞ்ச பையனோட கம்ப்பெனி தான்”.

“எனக்குத் தெரிஞ்ச பையனா?”

“ஆமா சார். ஜெய்க்குமார்னு நம்மக் கடைல ஸேல்ஸ்மனா இருந்தானே, அந்தப் பையன். சொல்லாம கொள்ளாம ஒரு வாரம் வேலக்கி வராமயிருந்துட்டான்னு ஒரு நாள் நைட்ல, ஸிராஜ் சாரும் நீங்களும் நானும் காரப் போட்டுக்கிட்டு வந்து இங்க ஓ பிளாக்ல அவனோட வீட்டக் கண்டு பிடிச்சி அவன வாண் பண்ணிட்டுப் போனோம். அவனோட அம்மா கூட, மன்னிச்சிருங்க சார்ன்னு நம்மகிட்ட அழுதாங்க, நீங்க மறந்திருக்க மாட்டீங்க”.

“ஓ! அந்த ஜெய்க்குமாரா?”

“ஆமா சார். நல்ல ஸ்மார்ட்டான பையன். நாம கடைய மூடுனதுக்கப்பறம் அவன் என்னென்னமோ கம்ப்யூட்டர் கோர்ஸ் எல்லாம் பண்ணி, பாங்க் லோன் போட்டு இருவது கம்ப்யூட்டரோட ஒரு கம்ப்பெனி ஆரம்பிச்சான். லோனெல்லாம் இப்ப ப்ஸ்ட்டில்

பண்ணியாச்சி. முப்பது பேர வச்சி வேல வாங்கறான். நா அங்க ஜாய்ன் பண்ணி ஆறு மாசமாச்சி".

"ஒங்களுக்குக் கீழ வேல பாத்த ஒரு பையன்ட்ட நீங்க வேல பாக்கதுக்கு மனசுக்குக் கஷ்டமாயிருக்குமே சார்".

"அதுக்கென்னா சார் செய்றது! வவுத்துப் பாட்டப் பாக்கணுமே! இங்க எனக்கு ஒரு மரியாதக் கொறைவும் கெடையாது. ஆனா ஒரு விஷயம். முந்தி அவன் என்ன சார் சார்னு கூப்ட்டுட்டிருந்தான். தப்பு. அவன் இவன்னு பேசப்படாது. சம்பளம் தர்ற மொதலாளியாச்சே! முந்தி அவர் என்ன சார் சார்ன்னு கூப்ட்டுட்டிருந்தார். இப்ப நா அவர சார் சார்ங்கறேன். ஆறு மாசத்ல எல்லாம் பழகிப் போச்சு சார். ஒங்களப் பாத்தது ரொம்ப சந்தோஷம். அப்ப நா கௌம்பட்டுமா சார்".

சவுந்தரபாண்டியன் ஹெல்மட்ட மாட்டிக்கிட்டு ஸ்கூட்டர ஸ்டாட் பண்ணப் போன சம்யத்ல நம்மக் கதாநாயகன், சார் ஒரு நிமிஷம் ங்கவும் அவர் இவனப் பாக்கார். ஹெல்மட்டக் கொஞ்சம் கழட்டுங்களேன் ங்கான் இவன்.

அவர் ஹெல்மட்டக் கழட்டிக் கைல வச்சிக்கிட்டு, சொல்லுங்க சார் ங்கார்.

சொல்லக் கூச்சப்பட்டுக்கிட்டு இவன் யோசனை யாயிருக்கவும், என்னமோ சொல்ல வந்தீங்களே, சொல்லுங்க சார் ங்கார் சவுந்தர பாண்டியன்.

சரி, சொல்ல வந்தத சொல்லிப்புடுவோம்னு நம்மக் கதாநாயகன் வெக்கத்த வுட்டு வாயத் தொறக்கான்.

"சவுந்தர பாண்டியன் சார், நாளக்கி நீங்க வேலக்கி வர்றப்ப, ஜெய்க்குமார் சார்ட்ட சொல்லி, எனக்கும் ஒரு வேல....."

**யுகமாயினி, செப்டம்பர் 2010**

# உயிரெலாம் பாசம்

அன்றைக்குப் பார்த்து நெல்லை எக்ஸ்ப்ரஸ் செம லேட். ஜங்ஷனில் இறங்கி, எத்திராஜன் மூணு ஏ பஸ் பிடித்து வீடு வந்து சேர்வதற்கு மணி பதினொண்ணு ஆகிவிட்டது. அவர் அனுமதி தந்தால் ஆஃபீஸ் ஜீப் வந்து ஸ்டேஷனில் காத்து நிற்கும். ஆனால், அரசாங்க சலுகைகளை சொந்த உபயோகத்துக்கு துஷ்ப்ரயோகம் செய்யலாகாது என்று கொள்கை வைத்திருக்கிற ரொம்ப வித்தியாசமான அதிகாரி எத்திராஜன்

“என்னப்பா ஆச்சு?”என்கிற கேள்வியுடன் இவரிடம் ஸூட்கேஸைப் பெற்றுக் கொண்ட உமாவுக்கு இவர் ஒரு எதிர்க் கேள்வி வைத்திருந்தார்.

“புரோக்கர் வந்தாரா?”

“வரலியே” என்று, தனக்கொரு பதிலுக்காக உமா காத்திருக்க, திரும்பவும் ஒரு கேள்விதான் வந்து விழுந்தது.

“ஒங்கம்மா எங்க?”

“யாரு, சித்தியா, இருப்பாங்க, கிச்சன்ல” என்று உமா சொல்லிக் கொண்டிருக்கும் போதே அடுக்களையிலிருந்து வெளிப்பட்ட வசந்தியிடமும் அதே கேள்விதான் இருந்தது.

“என்னங்க ஆச்சு?”

“புரோக்கர் வந்தாரா?”

“புரோக்கரா? யார் புரோக்கர், என்ன புரோக்கர், எதுக்கு புரோக்கர்?”

“முந்தாநாளே மெட்ராஸ்லயிருந்து ஃபோன் பேசினேன், பார்ட்டிகளப் பாத்துப் பேசிட்டு இன்னிக்கிக் காலைல வரச் சொல்லியிருந்தேன்.”

“நீங்க என்ன சொல்றீங்கன்னே புரியல. போன காரியம் என்னங்க ஆச்சு?”

“சொல்றேன். ரெண்டு பேரும் கொஞ்சம் பொறுமை யாயிருங்க, குளிச்சிட்டு வந்து சொல்றேன்.”

எத்திராஜன் பாத்ரூமுக்குள் போய் விட்டார்.

வசந்தியும் உமாவும் காத்திருந்தார்கள்.

தவிப்போடு காத்திருந்தார்கள்.

தனித் தனியாய்க் காத்திருந்தார்கள்.

குளித்து முடித்து, டிஃபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த எத்திராஜனின் முகத்தையே ரெண்டு பேரும் ஊடுருவிக் கொண்டிருக்க, அவர் விவரங்களை எடுத்து வைத்தார். சென்னை, பாண்டிச்சேரி, சிதம்பரம், காஞ்சிபுரம் எல்லா ஊர்களிலுமுள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளையும் விசாரித்தாகி விட்டது. இருபத்தஞ்சு லட்சத்துக்குக் குறைந்து மெடிக்கல் ஸீட் எங்கேயும் கிடைக்காது. இப்போதே பல தகப்பன்கள் ஸூட்கேஸ்களில் கரன்ஸியை அடைத்துக் கொண்டு க்யூவில் நிற்கிறார்கள். லேட் பண்ணினால் ரேட் கூடிக்கொண்டே போகும். ஆகையால், உமாவுக்கு மெடிக்கல் ஸீட் வாங்க வேண்டுமானால் குறைந்தது இருபத்தஞ்சு லட்சம் வேண்டும், உடனடியாய்.. அதற்கு, இந்த வீட்டை விற்றாக வேண்டும், உடனடியாய். உமா, வசந்தி, இப்போது புரிந்ததா? இதுக்குத்தான் புரோக்கர்.

“வேண்டாம்ப்பா” என்று அவரோடு மாறுபட்டாள் உமா.

“எனக்காக இந்த வீட்ட விக்ய வேண்டாம்ப்பா. அப்டியொண்ணும் காசு குடுத்து ஸீட் வாங்கி நா மெடிக்கல் காலேஜுக்குப் போக வேண்டியதில்ல. எனக்கு மெடிஸனே வேண்டாம். நா இங்கயே சாராட்டக்கர் காலேஜ்ல பிஎஸ்ஸி படிக்கிறேம்ப்பா.”

“ஒளராத உமா” என்று மகளை மறுத்தார் எத்திராஜன்.

“எனக்கு மட்டும் வீட்ட விக்கிறது சந்தோஷமா என்ன? காசு குடுத்து ஸீட் வாங்கறதுலயும் எனக்கு சம்மதமில்ல, அதுக்காக இந்த வீட்ட விக்கிறதுலயும் எனக்கு சந்தோஷமில்ல. இறந்துபோன ஒங்கம்மா வாழ்ந்த வீடாச்சேம்மா இது! ஆனா உமா, சாகக் கெடக்றப்ப, எம் பொண்ண பெரீய்ய டாக்டர் ஆக்குவேன்னு சத்யம் பண்ணிக் குடுங்கன்னு எங்கையப் புடிச்சி சத்யம் வாங்கிட்டில்லம்மா ஒங்கம்மா உசிர விட்டா! அந்த சத்யத்தக் காப்பாத்தணும்னா எப்பாடு பட்டாவது ஒனக்கு மெடிக்கல் ஸீட் வாங்கியே ஆகணும். அதுக்கு இந்த வீட்ட வித்துப் பணம் பண்றதத் தவிர வேற வழியே இல்ல. மெரிட்ல ஒனக்குக் கெடக்யும்னு நிச்சயமில்ல. அதுக்குன்னு காத்திருந்துப் பே ஸீட்டக் கோட்ட விட்றக் கூடாது.”

உமா யோசனையாய்த் தலை கவிழ்ந்திருக்க, வசந்தி வாயைத் திறந்தாள்.

“மெரிட்ல கெடக்கிறது நிச்சயமில்லன்னு எப்டிங்க சொல்றீங்க? ஆயிரத்தி நூத்தி நாப்பது மார்க்குங்க! தொண்ணுத்தியஞ்சு பர்ஸன்ட்! அந்தத் தொண்ணுத்தியஞ்சு பர்ஸன்ட் வாங்கறதுக்கு இவ எப்டி ஸ்ட்ரெய்ன் பண்ணிப் படிச்சா. எவ்ளவு ஸின்ஸியரா ப்ரிப்பேர் பண்ணினாங்கறது எனக்கில்லங்க தெரியும்!”

உமா தலை நிமிர்ந்தாள்.

“எனக்கு யாரும் இங்கப் பாராட்டுப் பத்திரம் வழங்க வேண்டாம்” என்று ஒரு சாட்டையைச் சொடுக்கி வசந்தியைத் தலை கவிழச் செய்து விட்டு, டைனிங் டேபிளை விட்டு நீங்கினாள்.

அவள் போனபின்னால், எத்திராஜனின் ஒரு கை வசந்தியின் தோளில் படர்ந்தது.

“இந்தா, டமால்னு மூட் அவுட் ஆய்ட்டியே, அவ என்ன புதுசாவா ஒன்ன மட்டந்தட்றா?”

வசந்தி தலையை உயர்த்திக் கண்களின் ஈரத்தின் ஊடாய்க் கணவனைப் பார்த்தாள்.

“என்ன ஏங்க இந்தப் பொண்ணு இப்டி ட்ரீட் பண்றா. நா பெத்த கொழந்த மாதிரி தானேங்க அவள நா கவனிச்சிக்கறேன். செல சமயம் ரொம்ப வேதனையா இருக்குங்க. அவ ஃப்ரண்ஸ் முன்னால வச்சி ரொம்ப அசிங்கமாப் பேசிர்றா.”

“ஓக்கே, ஓக்கேம்மா. அவளுக்கு இன்னும் மெச்யூரிட்டி பத்தாது. இப்பத்தானே ப்ளஸ் ட்டு முடிச்சிருக்கா. காலேஜ்க்குப் போனா, பெரியவளானா எல்லாம் சரியாப் போயிரும். நானும் அவளுக்கு அட்வைஸ் பண்றேன். கண்ணத் தொடச்சிக்கம்மா.”

மகளுக்கு எத்திராஜன் எத்தனையோ தடவை அட்வைஸ் பண்ணிவிட்டார். எட்டு வயசில் இவளை விட்டு விட்டுப் போய்விட்ட அம்மாவின் ஸ்தானத்தை, அப்புறம் வந்த வசந்திக்குக் கொடுக்க உமா உடன்படவே இல்லை. சின்னப் பெண்ணாயிருக்கும் போது மாற்றாந்தாயைத் தவிர்த்துக் கொண்டிருந்தவள், வளர வளர அவள்மேல் ஒரு வெறுப்பை வளர்த்துக் கொண்டாள். அப்பாவின் அறிவுரைகள் இந்த விஷயத்தில் மகளிடம் எடுபடவில்லை. சித்தி என்று குறிப்பிடக் கூடாது, வசந்தியை அம்மா என்று அழைக்க வேண்டுமென்கிற எத்திராஜனின் வற்புறுத்தலுக்கு, உமா சொல்லுவாள், “சித்தின்னு சொல்றதே அதிகம்ப்பா. என்னோட ஃப்ராண்ஸ் எல்லாம் இது யார்ப்பா, ஒன்னோட அக்காவான்னு கேக்றாங்க.”

*

உமா தூங்கின பின்னால், ராத்திரியின் இனிமையான தனிமையில் வசந்தி கணவனிடம் தயங்கித் தயங்கிக் கேட்டாள், “ஏங்க, வீட்ட வித்துத்தான் ஆகணுமா... என்னோட ஜ்வல்ஸ் இருக்கே, அதயெல்லாம் வித்துட்டோம்னா போதுமாயிருக்காதா......”

மனைவியை அணைத்துக் கொண்டு கூந்தலை அளைந்தார் எத்திராஜன்.

“எல்லா நகைகளயும் வித்தாலும் நாலோ நாலரையோ தான் தேறும். நமக்குத் தேவை இருவத்தஞ்சு லச்சமாச்சே! வீட்ட வித்துதானே ஆகணும் வசந்தி. அப்பவும் அமௌன்ட் பத்லன்னா, நகையப் பத்தி யோசிப்போம்.”

“குடுக்கற தொகையச் செக்காவோ, டிடியாவோ குடுங்க. அப்பறம் ஏமாந்துரக் கூடாது.”

“செக்காவது டிடி யாவது! அதெல்லாம் செல்லாது. ஒன்லி ஹாட் கேஷ்.”

“கேஷ்ன்னா கவனமாயிருக்கணுங்க. வாங்கற பணத்துக்கு ரசீது குடுப்பாங்கல்ல?”

“துண்டுச் சீட்டு கூடத் தரமாட்டான். எல்லாம் கணக்குல வராத பணம். அன் அக்வுன்ட்டட்.”

“கணக்குல வராதுன்னா, இது லஞ்சம் மாதிரியா?”

“லஞ்சம் மாதிரியாவா! லஞ்சமே தான்! அதுல ஒனக்கு சந்தேகமே வேண்டாம். அங்கீகரிக்கப்பட்ட, பகிரங்க லஞ்சம்”.

“லஞ்சம்னா நீங்க எப்டீங்க இத ஹாண்டில் பண்ணப் போறீங்க? லஞ்சம் வாங்கறது தப்புங்கறது ஒங்க பாலிஸி. லஞ்சம் வாங்கறது தப்புன்னா, லஞ்சம் குடுக்கறதும் தப்பு தானேங்க?”

“தப்புங்கறது ரொம்பச் சின்ன வார்த்தை வசந்தி, லஞ்ச சமாச்சாரமே ஒரு பாவச் செயல். இருவத்தி மூணு வருஷ சர்வீஸ்ல லஞ்சம் வாங்காத, தப்புத்தண்டாவுக்குப் போகாத, நேர்மையான கவண்மெண்ட் சர்வன்ட்னு பேர் வாங்கிட்டு, இப்ப இந்தப் பாவகாரியத்தப் பண்ண வேண்டியிருக்கே கடவுளேன்னு எனக்கு உறுத்தலாத்தான் இருக்கு. ஆனா, லஞ்சம் வாங்கறத விட லஞ்சம் குடுக்கறது சின்னப் பாவந்தான்னு எனக்கே நா சமாதானஞ் சொல்லிக்கிறேன். ஒரு நிர்பந்தத்துக்காக, ஒரு நல்ல காரியத்துக்காக செய்ற காம்ப்ரமைஸ் தான் இதுன்னு ஆண்டவன்ட்ட மன்னிப்புக் கேட்டுக்க வேண்டியது தான், என்ன சொல்ற!.”

“என்ன சொல்ல, நானும் எனக்கே நான் சமாதானஞ் சொல்லிக்கிட்டு ஆண்டவன்ட்ட மன்னிப்புக் கேட்டுக்க வேண்டியது தான்.”

“ஒன்னோட வருத்தம் எனக்குப் புரியுது வசந்தி. லக்ஷ்மி வியாதில விழுந்து செத்துப்போனது ஒரு கத்துக்குட்டி டாக்டரோட தப்பான ட்ரீட்மென்ட்டால தான். அதனால தான் தன்னோட ஒரே மகள ஒரு பெரீய்ய டாக்டரா ஆக்கணும், உண்மையான டாக்டரா ஆக்கணும்னு அவளுக்கொரு வெறி வந்துச்சு. என்ட்ட சத்யம் வாங்கிக்கிட்டு செத்துப்போய்ட்டா. அந்த சத்யத்தக் காப்பாத்த என்ன விலையானாலும் நா குடுத்தே ஆகணும் வசந்தி.”

“நீங்க மட்டுமில்லீங்க, நானுந்தான். லக்ஷ்மியக் காவோட லட்சியத்த நிறைவேத்தறதுக்கு நாம ரெண்டு பேரும் சேந்தே முயற்சியெடுப்போம். உமாவ டாக்டராக்கறதுல என்னோட பங்களிப்பப் பாத்து உமா என்ன அம்மான்னு ஏத்துக்கணும். அந்த நம்பிக்கைல தாங்க நா வாழ்ந்துட்டிருக்கேன். “

*

அடுத்த நாள் காலையில் எத்திராஜன் ஆஃபீஸுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த நேரத்தில் புரோக்கர் வந்து சேர்ந்தார்.

“என்ன வேய், மெனக்கெட்டு மெட்ராஸ்லயிருந்து ஃபோன் போட்டு ஞாயித்துக் கெழம வாரும்யான்னு சொன்னா, நீர் சாவகாசமா திங்கக்கெழம வந்து தலையக் காட்டுதீரு? பார்ட்டி ஏதாவது அமஞ்சிதா? ரெண்டு வாரத்துக்குள்ள கிரயம் பண்ணியாகணும் வேய். நீர் என்ன செய்வீரோ ஏது செய்வீரோ, இருவத்தஞ்சு லச்சம் எனக்கு அர்ஜன்ட்டா வேணும்” என்று எத்திராஜன் துரிதப் படுத்தியதற்கு ரொம்பவும் சலித்துக் கொண்டார் புரோக்கர்.

“என்ன செய்யச் சொல்லுதீக சார். வெள்ளிக்கெழம நீங்க போன் போட்டீக, சனிக்கெழமயே நா ரெண்டு பார்ட்டிட்டப் பேசி வச்சிர்ந்தேன். நீங்க இருவத்தஞ்சு தான சொல்லுதீக, நா நுப்பதுக்குக் கொக்கி போட்டு

வச்சிர்ந்தேன். அடுத்த நாளே ரெண்டு பயபுள்ளயும் பல்ட்டி அடிச்சிருச்சு. ஒங்க அவசரம் அவனுவளுக்குத் தெரிஞ்சிபோச்சின்னு நெக்யேன். பயலுவ சுதாரிச் சிட்டானுவோ. ஒர்த்தன் இருவதுன்னு முடிச்சக் குடுவேய்ங்கான், அடுத்தவன் பய்னெட்டு தான் தருவேங்கான், திருநவேலியில, பாளையங்கோட்டையில இதான் ரேட்டுங்கான்.

போங்கலன்னு வந்துட்டேன். எப்டிப்பட்ட வீடுய்யா இது! சார்வாள், இந்த மாறி வீடு மட்டும் மெட்ராஸ்ல அண்ணா நகர்லயோ அடயார் ஏரியாலயோ இருந்துச்சின்னா இன்னிக்கி ரேட்டுக்கு ரெண்டு கோடி!"

புரோக்கரை வெறுமையாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, ஜீப்பில் ஏறிப் போய்விட்டார் எத்திராஜன்.

ராத்திரி தூக்கம் பிடிக்கவில்லை.

"இருவதுக்குத் தான் வீடு போகும் போலத் தெரியுது வசந்தி, எப்டி மேனேஜ் பண்ணப் போறோம்னு தெரியல. ஒன்னோட ஜ்வல்ஸ் கூடத் தேவப்படும்னு நெனக்கிறேன்...." என்று மனைவியின் காதில் போட்டு வைத்தார். வசந்தி யோசனையில் ஆழ்ந்தாள்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

வீட்டுக்கு ஒரு விலை வரவில்லை. வீடு விலை போகாமலிருந்தது உமாவுக்கு உள்ளூர திருப்தி. அவள் பிறந்து வளர்ந்த வீடு. அம்மா வாழ்ந்த வீடு. தான் டாக்டராக வேண்டும் என்று அம்மாவின் ஆசீர்வாதம் இருந்தால் வீட்டை விற்காமலேயே எப்படியும் அது நடந்தே தீரும் என்கிறதில் உமா நம்பிக்கையோடிருந்தாள்.

அவள் பொருட்டு வசந்தி லோக்கல்க் கோவில் களுக்கும், கிறிஸ்தவ, கத்தோலிக்க ஆலயங்களுக்கும், பொட்டல் புதூர் தர்கா, ஆத்தங்கரைப் பள்ளிவாசலுக்கும் போய் வந்து கொண்டிருந்ததைக் குறித்து உமா அலட்சியமாயிருந்தாள். அம்மாவுக்குத் தந்த வாக்கைக் காப்பாற்ற இயலாமற் போய்விடுமோ என்று அப்பா அமைதியிழந்திருப்பதை அனுதாபத்தோடு அவதானித்தாள்.

வெள்ளிக்கிழமை சாயங்காலம் வசந்தி நெல்லையப்பர் கோவிலுக்குப் போயிருந்த வேளையில், அவள் பேருக்கு வந்த கடிதம் உமாவுக்குக் கிட்டியது.

திருச்சியிலிருந்து சித்தியின் அப்பா.

கிழம் ரெண்டு மாசத்துக்கொரு தடவை வந்து ரெண்டு நாள் டேராப் போட்டு விட்டுப் போகும். ஹோண்டா ஸிட்டி காரில் வந்து தோரணையாய் இறங்கும். ஒனக்குன்னு வாங்கிட்டு வந்தேன் உமாக்குட்டீன்னு எதையாவது கொடுத்துத் தின்னச் சொல்லும்.

உமா அவரைக் கண்டு கொள்ளவே மாட்டாள்.

இவள் தன்னைத் தாத்தா என்று பிரியமாய்க் கூப்பிடவில்லையென்று "தாத்தா" வுக்கு ரொம்ப வருத்தம்.

"அம்மா" வுக்கே அங்கீகாரங் கிடைக்காத போது இவர் எங்கே தாத்தா ஆவது!

கையிலிருந்த கவர் உமாவுக்கு ஒரு குறுகுறுப்பை ஏற்படுத்தியது. இவளை கவனிக்க வீட்டில் யாருமில்லை யென்கிற சுதந்திரம் கொடுத்த தைரியத்துக்குப் பின்னால், அடுத்தவர் கடிதத்தைப் பிரிப்பது தப்பில்லையா என்கிற குற்றவுணர்ச்சி ஒளிந்து கொண்டது.

தந்தைக்கும் மகளுக்குமிடையே அப்படி என்னதான் செய்திப் பரிமாற்றம் நடக்கிறது என்று பார்த்து விடுகிற ஆவலில், கவனமாய்க் கவரைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தாள். ம்க்ஷமம் உபய ம்க்ஷமம், பல்லவி அனு பல்லவியெல்லாம் ஸ்கிப் பண்ணிவிட்டு சரணத்துக்கு வந்தாள். இவளுடைய பெயர் அங்கே பிரஸ்தாபிக் கப்பட்டிருந்தது ஆர்வத்தை அதிகப்படுத்தியது.

.... உமா இன்னும் உன்னை அம்மா என்று கூப்பிட மறுக்கிறாள், இன்னும் உன்னை உதாசீனம் செய்கிறாள் என்று வருத்தப்பட்டு எழுதியிருந்தாய். சின்ன வயதில் தாயைப் பறிகொடுக்கிற எந்தக் குழந்தையும் தன் தந்தையின் ரெண்டாவது மனைவியை அம்மா என்று வந்து கட்டிக் கொள்ளாதம்மா. அதற்கு நீண்ட காலம் ஆகும். மாப்பிள்ளை சொல்கிற மாதிரி, உமாவுக்கு இன்னும் மெச்யூரிட்டி பத்தாது. காலேஜுக்குப் போய், விவரம் தெரிந்த பெண்ணாய் அவள் வளர்ந்து விட்ட பிறகு அவளிடம் மனமாற்றம் ஏற்படும் என்று நம்புவோம்.

தவிரவும், உனக்கென்று குழந்தைகள் பிறந்தால் உமா மேல் இருக்கிற பிரியத்துக்கு பாதகம் ஏற்படலாமென்று, நீ குழந்தையே வேண்டாமென்று ஆப்பரேஷன் செய்து கொண்ட தியாகமெல்லாம் உன் மகளுக்குத் தெரியாது மகளே.

அவசியமேற்பட்டால், மாப்பிள்ளையிடம் சொல்லி இந்த விஷயத்தை உமாவுக்குப் புரிய வைப்போம்.

நம்முடைய செல்வத்துக்கும், செல்வாக்குக்கும், ஒரு கோடீஸ்வரக் குடும்பத்தில் உன்னைக் கொடுத்திருக்கலாம். ஆனால் நீயோ, எத்திராஜன் என்கிற ஒரு நடுத்தர அரசாங்க அதிகாரியின் நேர்மையையும் நாணயத்தையும் கை சுத்தத்தையும் கேள்விப்பட்டு, அதை நேரடியாயும் உறுதிப்படுத்திக் கொண்டு, ரெண்டாந்தாரமானாலும் பரவாயில்லை, ஒன்பது வயசுப் பெண்ணுக்குத் தகப்ப னானாலும் பரவாயில்லை, அவரைத்தான் மணப்பேன் என்று பிடிவாதம் பிடித்து, நினைத்ததை முடித்து விட்டாய்.

உன் முடிவு எப்போதுமே எனக்கு சந்தோஷம் தான் மகளே.

நீ சராசரிக்கு மேம்பட்ட பெண்.

நீ ஒரு வித்யாசமான பெண்.

நீ மனந்தளரக் கூடாது மகளே.

உமாவுடைய மெடிக்கல் ஸீட்டுக்கும் வீடு விற்பனையாக இழுத்துக் கொண்டிருப்பதற்குமுள்ள தொடர்பைப் பற்றி எழுதியிருந்தாய். எனக்கு நம்பிக்கையிருக்கிறது. உன் மகளுக்கு மெரிட்டிலேயே மெடிக்கல் ஸீட் கிடைத்துவிடும். ஆனால் அதற்காக நாம் ரிஸ்க் எடுக்கவும் முடியாது. ஆகையால் உன்னுடைய திட்டத்துக்கு நான் உடன்படுகிறேன். அப்பாவிடம் உரிமையெடுத்துக் கொண்டு இப்படியொரு உதவியை நீ கோரமாட்டாயா என்றுதானேயம்மா நான் காத்திருக்கிறேன். நீ கேட்டுக் கொண்ட மாதிரியே நம்ம தில்லை நகர் வீட்டைக் கிரயம் முடிக்க ஏற்பாடு செய்து விட்டேன். இப்போதிருக்கும் ராஜா காலனி வீட்டை உமா பேருக்கு ரிஜிஸ்டர் பண்ணவும், அவள் மேஜர் ஆகும் வரை மாப்பிள்ளையை கார்டியனாய்ப் போடவும் ஏற்பாடு செய்து விட்டேன். இந்த செயல்பாடுகளுக்கு மாப்பிள்ளையை சம்மதிக்க வைப்பது உன் சாமர்த்தியம்.....

கடிதத்தை வாசிக்க வாசிக்க உமாவுக்குள் உணர்ச்சிகள் சிலிர்த்தன. சில வரிகளை ரெண்டு முறை, மூணு முறை வாசித்தாள்.

விவரங்கள் உமாவின் ஜீரண சக்திக்கு மீறினவையாயிருந்தன. காலேஜுக்குப் போய், விவரந்தெரிந்த பெண்ணாய் வளர்ந்துவிட்ட பிறகு ஏற்பட எதிர்பார்க்கப்படுகிற மனமாற்றம், இப்போதே ஏற்படுவதற்கு நியாயங்கள் இருப்பது உமாவுக்குப் புரிய ஆரம்பித்தது. அந்தக் கடிதத்தை நெஞ்சோடு அழுத்திக் கொண்டு கொஞ்ச நேரம் கண்களை மூடி நாற்காலியில் இருந்தாள். பிறகு, கடிதத்தை உறையில் போட்டு ஒட்டினாள்.

கேட்டில் ஆட்டோ ஒன்று வந்து நின்றது. வசந்தி இறங்கினாள். அவள் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வரக்கூட அவகாசங் கொடுக்காமல் உமா அவளிடம் ஓடினாள்.

"தாத்தாட்டயிருந்து ஒங்களுக்கு லெட்டர் வந்திருக்கு அம்மா" என்றாள்.

**-மல்லிகை மகள், அக்டோபர் 2010**

**(சித்தியம்மா!)**

# வேகமும் விவேகமும்

92 வயசில் ஒரு பழம் பெரும் எழுத்தாளர் வாழ்க்கையை முடித்துக் கொண்டார் என்று தகவல் கிடைத்து நாங்கள் ரெண்டு பேர் அவர் வீட்டுக்கு, அம்பத்தூருக்குக் கிளம்பினோம். நாங்கள் ரெண்டு பேர் என்றால், நானும் நம்மத் தோழரும்.

தோழரும் ஓர் எழுத்தாளர் தான், இறந்து போன எழுத்தாளரைப் போல, என்னைப் போல. என்னைப் போல முழு நேர எழுத்தாளராய் இல்லாமல், தோழர் பார்ட் டைம் எழுத்தாளர். மற்ற நேரத்தில் அவர் ஒரு தொழிலதிபர். சொந்த ஃப்லாட், சொந்தக் கார் சகிதமான எழுத்தாளர் கம் தொழிலதிபர்.

தோழரின் காரில் அண்ணா நகரிலிருந்து கிளம்பி, அம்பத்தூர் எஸ்டேட் ரோடில் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி, மறைந்த எழுத்தாளர் வீட்டையடைந்து மரியாதை செய்து விட்டு, அதே விவகாரமான ரோடு வழியே திரும்பிக் கொண்டிருந்த போது தான் பின்னாலிருந்து ஓர் அலறல் கேட்டது. மனித அலறல் அல்ல, ஒரு வாகனத்தின் அலறல். பின்னால் திரும்பிக் கண்ணாடி வழியே பார்த்தால், ஒரு மாநகரப் பேருந்து பேரிரைச்சலோடு வந்து கொண்டி ருந்தது, எங்கள் காரைப் பின்னாலிருந்து முட்டித் தூக்கியெறிந்து விடுகிற வேகத்தில்.

ஹாண் அலறியபடியே இருந்தது. ஒதுங்கி எனக்கு வழிவிடுடா மடையா என்கிற ஆத்திரமான அலறல். இங்கே அங்கே ஒதுங்க வசதியில்லாத குறுகலும், குண்டும் குழியுமான சாலையில், இதற்கு மேல் வேகங் கூட்ட முடியாது என்று ஓடிக் கொண்டிருந்த தோழரின் மாருதியைக் கலவரப்படுத்துகிற மாதிரி விரட்டிக் கொண்டிருந்தது பஸ்.

ஓவர்ட்டேக் செய்ய விட மாட்டாயாக்கும், அவ்வளவு திமிராடா உனக்கு?

ஒரு ரெண்டு நிமிஷ விரட்டலுக்குப் பின்னால், வலது புறத்தில் ஒதுங்கக் கிடைத்த சமவெளியில் காரை ஓரங்கட்டின போது ஆத்திரமடங்காத பஸ், இடது புறமாய் முந்தி, எங்கள் காரை முரட்டுத்தனமாய் வலது புறத்தில் நெருக்கி ஒதுக்கியது.

ஜன்னலிலிருந்து எட்டிப் பார்த்த டிரைவர் காரின் மேல் காறித்துப்பினார்.

தொடர்ந்து, ஒரு நல்ல எழுத்தாளன் எழுதக் கூசுகிற கொடூரமான வசவுகளை ஆக்ரோஷமாய்த் துப்பினார். அந்த வசவுகளை உள்வாங்கிக் கொள்ளவும் முடியாமல், திருப்பித் தரவும் முடியாமல் நாங்கள் ரெண்டு பேரும் உறைந்து போனோம்.

சைடு கொடுக்காத வாகனத்தைக் குதறிப் போட்டு விட்ட திருப்தியோடு மாநகரப் பேருந்து புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறந்த போது தான் உணரப்பட்டது, அது ஒரு தொடர் பேருந்து என்று.

மினி ரயில் போன்ற ஒரு ரெட்டை பஸ்ஸை, என்னமோ ஆட்டோ ஓட்டிக் கொண்டு போவது போல சர்வ அலட்சியமாய் விரட்டிக் கொண்டு போகிற டிரைவர் மேலே கோபமும், பஸ்ஸுக்குள்ளே இருக்கிற பயணிகள் மேலே அனுதாபமும் பிறந்தது.

ஓரங்கட்ட நெருக்கப்பட்ட இறுக்கத்திலிருந்தும், கீழ்த்தரமான வசவுகளை வாங்கிக் கட்டிக் கொண்ட அவமானத்திலிருந்தும் மீண்டு, வண்டியைக் கிளப்ப, நம்மத் தோழருக்குப் பல விநாடிகள் பிடித்தன.

சுய நினைவு திரும்பிய போது, தோழர் கொதி கொதியென்று கொதித்தார்.

“என்ன சார் அவன், ஈஸ்ட் கோஸ்ட் ரோட்ல ஓட்ற மாதிரி இந்த அம்பத்தூர் எஸ்டேட்க்குள்ள பறந்துக்கிட்டுப் போறான்! ட்ரெய்லர் பஸ் ஓட்ற மாதிரியா ஓட்றான்? ட்டு வீலர் ஓட்ற மாதிரி ஓட்றான், ராஸ்க்கல்.”

“அவந்தான் காட்டுத்தனமா நம்மள வெரட்டிட்டு வர்றானே, ஒழிஞ்சு போறான்னு நீங்களாவது ஸ்லோ பண்ணி ஓரமா ஒதுக்கி நிறுத்தி அவன ஓவர்ட்டேக் பண்ண விட்ருக்கலாம்” என்று நான் வாயைத் திறந்தது தப்பாப் போச்சு.

தோழர் என்னைப் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டார்.

“நீங்க என்ன சார் அந்த ரவுடிப் பயலுக்கு ஸப்போட் பண்றீங்க. எவ்ளோ அசிங்கமா ஆத்தா அம்மான்னு திட்னான் அவன்! நீங்க வாயத் தொறந்து ஏதாவது திருப்பிக் குடுப்பீங்கன்னு பாத்தா, நீங்க கப்சிப்னு ஒக்காந்திருக்கீங்க.”

“ஒங்கள மாதிரி தான் நானும் வாயடச்சிப் போய்ட்டேன் தோழர்” என்று சமாளித்தேன் நான்.

தோழர் சமாதானமடையவில்லை.

“என்ன வாயடச்சிப் போனீங்க போங்க. நாந்தான் ரைட் ஸைடுல இருந்தேன். ஸ்ட்டீரிங் புடிச்சிக் கிட்டிருந்தேன். நீங்க அந்த டிரைவரோட பார்வைல இருந்தீங்க. அவன் நம்ம மேல காறித்துப்பினான். அப்பக் கூட நீங்க சும்மா தான் இருந்தீங்க.”

“அவன் துப்பினான்னு நாம அண்ணாந்து திருப்பித் துப்பினா, அது நம்ம மேலதான விழும். அவனோட கல்ச்சர் அது. நீங்க சொன்ன மாதிரி அவன் ஒரு ரெளடி டிரைவர். அவன் லெவலுக்கு நாம எறங்க முடியாது. விடுங்க தோழர். இத ஒரு கெட்ட கனவா நெனச்சு மறந்துருங்க.”

“மறக்கவாவது! நா யார்னு அந்த ரெளடிப்பயலுக்குக் காட்டாம விடப் போறதில்ல சார். இன்னிக்கே லெட்டர் எழுதப் போறய்ன்.”

“யாருக்கு?”

“மாநகரப் போக்குவரத்துச் சேர்மனுக்கு. பஸ்களை யெல்லாம் புதுசு புதுசா விட்டுட்டு ரெளடிப்பசங்கள வேலக்கி வச்சிருக்கீங்களேய்யான்னு கேட்டு எழுதப் போறேன். போலீஸ் கமிஷனருக்கு ஒரு காப்பி. போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு ஒரு காப்பி. என்னோட எழுத்தாளர் லெட்டர்ப் பேட்லயே எழுதப் போறேன். என்னோட பேர்

அவங்களுக்கெல்லாம் தெரிஞ்சிதான் இருக்கும். ஒங்கள விட நா பாப்புலரான எழுத்தாளன் தானே சார்!"

"நிச்சயமாத் தோழர். கார் வச்சிருக்கிற எழுத்தாள ராச்சே நீங்க!"

"பாருங்க. என் பேனாவோட பவர் என்னன்னு காட்றேன் பாருங்க. அந்த ரௌடி டிரைவர ஒரு வழி பண்ணிட்டுத் தான் மறு வேல."

"ஆனாலும் தோழர்...."

"ஆனாலும்?"

"படைப்பாளிக்குப் படபடப்புக் கூடாது தோழர்."

"ஒங்க அட்வைஸ்க்கு ரொம்பத் தாங்ஸ் சார். ஒங்க வீட்டுக்குப் போற சந்து வந்துருச்சு, நீங்க எறங்கிக்கிருங்க, நா போய் மேக்கொண்டு ஆக வேண்டியதப் பாக்கறேன், இன்னும் ஒங்க அட்வைஸ் தேவப்பட்டா ராத்திரிக்கி ஃபோன் பண்ணிக் கேட்டுக்கறேன்."

மறுபேச்சுப் பேசாமல் நான் இறங்கிக் கொண்டேன்.

*

ராத்திரி ஃபோன் வந்தது தோழரிடமிருந்து. குரலில் வெக்கை தணிந்திருந்தது.

"சார், காலைல ஒங்ககிட்ட நா கொஞ்சம் கடுமையாப் பேசிட்டேன், ப்ளீஸ் மன்னிச்சிருங்க."

"நோ நோ, நா அதப் பெருசா எடுத்துக்கவே இல்ல தோழர். காலைல நீங்க இருந்த மனநிலைல யாராயிருந்தாலும் அப்டித்தான் பேசியிருப்பாங்க. லெட்டர் எழுதப் போறேன்னீங்களே, எழுதிட்டீங்களா?"

"ம்ம்! வந்த வேகத்ல காலைலேயே எழுதி, டிடிபி பண்ணி, ஃபோட்டோக் காப்பி எடுத்து, கவர்ல போட்டு அட்ரஸ் எழுதி, ஸ்டாம்ப் ஒட்டி, ரெடியா வச்சிருக்கேன்."

"போஸ்ட் பண்ணலியா?"

"நாளக்கிக் காலைல மொதல் வேல அதான். இன்னுங்கூட எனக்கு மனசு ஆறல சார், இந்த மாதிரி அவமானங்களெல்லாம் நமக்குப் பழக்கம் இல்ல பாத்திங்களா, மனசு ரொம்ப சங்கடப்படுது. ராத்திரி தூங்க முடியுமான்னு தெரியல."

"ராத்திரி தூங்கறதுக்கு முன்னால சாமி கும்புட்டுட்டுத்தான படுப்பீங்க?"

"அஃப்க்கோர்ஸ், கர்த்தர ஜெபம் பண்ணிட்டுத்தான் ராத்திரி படுப்பேன்."

"இன்னிக்கி ஜெபம் பண்ற போது நா சொல்ற மாதிரி ஜெபம் பண்றீங்களா?"

"சொல்லுங்க."

“கர்த்தரே, இன்னிக்கி என்னை அசிங்கப்படுத்தின டிரைவரை நீர் மன்னியும், அவனை மன்னிக்கக்கூடிய பெலத்தை எனக்குத் தாரும் கர்த்தரே ன்னு வேண்டிக்குங்க.”

“நோ! நானாவது அவன மன்னிக்கிறதாவது! நீங்க உருப்படியா ஏதாவது சொல்வீங்கன்னு பாத்தா...”

“நீங்க உருப்படியா, நிம்மதியாத் தூங்கறதுக்கு வழி சொல்றேன் தோழர். நீங்க ட்ரை பண்ணிப் பாருங்க, அப்புறம் காலைல எனக்கு ஃபோன் பண்ணுங்க.”

அரை மனசோடு தோழர் ரிஸீவரை வைத்து விட்டார்.

ஆனால், நான் நினைத்த மாதிரியே காலங்காத்தால ஃபோன் வந்து விட்டது. உற்சாகம் உச்சத்திலிருக்கிற குரல்.

“சார், நைட்ல நல்லாத் தூங்கினேன் சார்.”

“அப்டியா தோழர்? ரொம்ப சந்தோஷம். நா சொன்ன மாதிரி ஜெபம் பண்ணீங்களா?”

“அதத்தான சார் சொல்ல வர்றேன். நீங்க சொன்ன மாதிரியே மனப்பூர்வமா ஜெபம் பண்ணினேன். அந்த டிரைவரக் கர்த்தரும் மன்னிச்சிட்டார், நானும் மன்னிச்சிட்டேன். இப்ப எம்மனசு சங்கடமோ சஞ்சலமோ இல்லாம லேசா இருக்கு சார். இப்பக் காலைல மொதல் வேலையா....”

“மொதல் வேலையா?”

“நேத்து எழுதின லெட்டர்ஸையெல்லாம் கிழிச்சிப் போட்டுட்டேன். அப்புறம் சார்....”

“அப்புறம் தோழர்?”

“ஒங்க அட்வைஸ்க்கு ரொம்ப ரொம்பத் தாங்ஸ் சார்.”

**கவிதை உறவு, அக்டோபர் 2010**

# டோக்கன் ஸ்ட்ரைக்

கோடை வெக்கைக்கு ஏஸி ரொம்ப இதமாய் இருந்தது.

ஒஸி ஏஸி.

பாங்க்கில் கூட்டம் இருந்தாலும் எனக்கென்று ஒரு ஆசனம் காலியாய்க் கிடந்தது.

இந்த மாதிரி சின்னச் சின்ன அதிர்ஷ்டங்கள் எப்போதாவது அடிக்கிறதுண்டு. ஆறுதலாய் உட்கார்ந்து கொண்டதும், சார் டோக்கன் எடுத்துட்டீங்களா என்றார் பக்கத்து ஸீட்காரர்.

“இன்னும் வித்ட்ரால் ஸ்லிப்பே ஃபில் பண்ணல” என்று புன்னகைத்தேன் நான்.

“கூட்டந்தான் இருக்கே, எப்டியும் ஒரு அர மணி நேரம் வெய்ட் பண்ண வேண்டியிருக்கும். ஒரு பத்து நிமிஷம் ஒக்காந்து ஏஸிக் காத்த உள்ள இழுத்துட்டு வேலய ஆரம்பிக்கலாம்னு இருக்கேன்”.

“நீங்க சாவகாசமா வேலய ஆரம்பிக்கலாம். ஆனா இங்கப் பன்னெண்டு மணிக்கி டோக்கன் ஸ்ட்ரைக்காச்சே!”

“பன்னெண்டு மணிக்கி பாங்க்ல ஸ்ட்ரைக்கா!”

“பயப்படாதீங்க. டோக்கன் இஸ்யூ பண்ற மிஷின் பன்னெண்டு மணிக்கி ஸ்ட்ரைக் பண்ணிரும்னு சொல்ல வந்தேன். இன்னிக்கி சனிக்கிழமையில்ல, டோக்கன் மிஷின் பன்னெண்டு மணிக்கி ஸ்டாப் ஆயிரும். அஞ்சு நிமிஷந்தான் இருக்கு. ஒங்க ஸீட்ட நா பாத்துக்கறேன். போய்ட் டோக்கன் எடுத்துட்டு வந்துருங்க”.

பட்டனை அழுத்தி, டோக்கன் மிஷினிலிருந்து ஒரு டோக்கனை உருவிக் கொண்டு, வித்ட்ரால் ஸ்லிப் ஒன்றையும் எடுத்து நிரப்பிக் கொண்டு இருக்கைக்கு வந்த போது, அந்த இருக்கையை ஆக்கிரமிக்க வந்த ஒரு பெண்ணிடம், “நம்ம ப்ரண்ட் வர்றாரும்மா. ஸீட் போட்டுட்டுப் போயிருக்கார்” என்று இந்த ஆள் சொல்லிக் கொண்டிருப்பது தெரிந்தது.

உட்கார வேண்டுமென்று எனக்கு அவசியமில்லை. என்னுடைய ஸீட்டை அந்தப் பெண்மணிக்கு விட்டுக் கொடுத்திருந்தால், என்னுடைய அக்கவுன்ட்டில் ஒரு புண்ணியம் க்ரெடிட் ஆகியிருக்கும்.

பரவாயில்லை. அந்தப் பெண்ணுக்கு முந்தைய வரிசையில் ஒரு ஸீட் கிடைத்து விட்டது.

அதுசரி, இந்த ஆளுக்கு நான் ஃப்ரண்டாமே? இந்த மூஞ்சியைப் பார்த்த ஞாபகமே இல்லையே!

“சார், என்னப் பாத்த ஞாபகம் இருக்கா?”

“ம்ம்.... எங்கேயோ பாத்த மொகமாத்தான் இருக்கு, எங்கேன்னு சட்னு ஞாபகத்துக்கு வரல”.

“ஒங்கப் பழைய கஸ்டமர் சார் நான். ஒங்க டிப்பாட்மெண்ட் ஸ்டோருக்கு அடிக்கடி வருவேன். நீங்கக் கடைய க்லோஸ் பண்ணதுக்கு முந்தின நாள் கூட வந்தேன்”.

“ம்”.

“அந்தக் கடைய ஒரு பத்து வருஷம் நடத்தியிருப் பீங்களா?”

“ம்”.

“கடைய மூடி அஞ்சு வருஷம் இருக்கும்ல?”

“ம்”.

“ஒங்கக் கடைய எனக்கு ரொம்பப் புடிக்கும் சார். சம்மர்ல தினமும் நா ஒங்கக் கடக்கி வருவேன். நம்ம வீட்ல அப்ப ஏஸி போடல. ஏதும் பர்ச்சேஸ் பண்ண வேண்டியது இல்லன்னாலும், ஒங்க ஏஸிக்காக வந்து ஒரு ரெண்டு அவர் சுத்திப் பாத்துட்டுப் போவேன்”.

உன்னைப் போல எத்தனை பேர் வந்து சும்மா சுற்றிப் பார்த்துவிட்டுப் போனார்களோ. கடையை நான் மூடிவிட நேர்ந்ததற்கு உன்னைப் போன்ற ஓஸி ஏஸி ஆசாமிகளும் ஒரு காரணம் என்பது இப்போது புரிகிறது.

“சார் இப்ப என்ன செஞ்சிட்டிருக்கீங்க?”

“ம்? பத்திரிகைகளுக்குத் கத எழுதறேன்”.

“பத்திரிகைகளுக்கு எழுதி என்ன சார் வருமானம் வரும், சினிமாவுக்கு எழுதறீங்களா?”

“ம்? ஆமா”.

“ஆமா” என்று அனிச்சையாய் வாயில் வந்து தொலைத்து விட்டது.

“வெரிகுட், எத்தனப் படத்துக்கு எழுதியிருக்கீங்க, எந்தப் படத்துக்கு இப்ப எழுதிட்டிருக்கீங்க” என்று இந்த ஆள் ஒரு கேள்வியை வைத்திருந்தால் நான் திணறிப் போயிருப்பேன்.

“வெரிகுட்” என்கிற ஒரே வார்த்தையோடு டாப்பிக்கை மாற்றிவிட்டார்.

“பசங்கள்ளாம் சம்மருக்கு ஊட்டிக்கிப் போய்ட்டு வரணும்னு சொல்லுது. வீட்ல கேஷ் இருக்கு. இருந்தாலும் எக்ஸ்ட்ராவா ஒரு பத்தாயிரம் எடுத்து வச்சிக்கிட்டா நல்லது தானேன்னு பணம் வித்ட்ரா பண்ண வந்தேன்”.

அவர் சொல்லி வாயை மூடும் முன், 375 ரூபாய் என்று எழுதி வைத்திருந்த என்னுடைய வித்ட்ரால் ஸ்லிப்பைக் கமுக்கமாய்ப் பாஸ் புக்குக்குள் பதுக்கிக் கொண்டேன்.

பின்னே என்ன செய்வது!

“ஆமா பெரிய பண்ண, நானும் ஒங்களப் போலப் பணம் எடுக்கத்தான் வந்தேன். ஆனா, ஒங்களப் போலப் பத்தாயிரம் இல்ல. முன்னூத்தியெழுவத்தஞ்சி. பத்திரி கைக்கிக் கதயெழுதி சம்பாரிச்ச காசு. முந்தா நாள் வந்து செக்க டெப்பாஸிட் பண்ணிட்டுப் போனேன். இன்னிக்கித் தொடச்சி எடுத்துட்டுப் போக வந்திருக்கேன். இந்தக் காச எடுத்துட்டுத் தான் வீட்டுக்குப் போற வழில என்னத்தயாச்சும் வயித்துக்குள்ள போட்டுட்டுப் போகணும். அதுக்கு முன்னால ஒரு கூல் ட்ரிங்க் கூடக் குடிக்கலாம். முகப்பேர்லயிருந்து அண்ணா நகருக்கு வெயில்ல நடந்து வந்த களைப்பு. காலைலயும் டிஃபன் சாப்புடாத பசி வேற. வீட்ல போய், ஸ்கூட்டரத் தொடச்சி உருட்டிட்டு வந்து அம்பது ரூவாய்க்கிப் பெட்ரோல் போடணும். போன வாரம் பெட்ரோல் இல்லாம நின்னு போன வண்டிய எக்மோர்லயிருந்து வேகாத வெயில்ல வெந்து போய் உருட்டிட்டு வந்த கதயெல்லாம் ஒங்களுக்கென்ன தெரியும் பெரிய பண்ண. அப்பறம், அம்பது ருவாய்க்கிட் டாப் அப் பண்ணி ப்ஸல்ஃபோன சூழ்ச்சியாப் பாக்கெட்ல வச்சிக்கணும். மொத்தத்ல, அடுத்த கதக்கி சன்மானம் வர்ற வரக்யும் இந்த முன்னூத்தியெழுவத்தஞ்சில தான் நம்மக் கதய ஓட்டியாகணும்” என்கிற நம்முடைய விசன வசனத்தை யெல்லாம் இந்த ஆளிடம் ஒப்பிக்கவா முடியும்!

டோக்கன் நம்பர் 328, கவுன்ட்டர் நம்பர் த்ரீ என்று ஓர் அறிவிப்புக் கேட்டது.

“ஒங்க நம்பர் என்ன சார்” என்று கேட்டார்.

அப்போது தான் டோக்கனைப் பார்த்தேன். 375 என்று இருந்தது.

அட!

இப்படியொரு ஒற்றுமையா!

இன்னிக்கிப் பெரிசா ஒரு அதிர்ஷ்டம் அடிக்கத்தாம் போவுது பாய்!

என்னத்த அடிக்கப் போவுது.

டோக்கன் நம்பரும் வித்ட்ரா பண்ணுகிற பணமும் ஒன்றாக இருந்தால் ஒரு பத்தாயிரம் பரிசு என்று இந்த பாங்க்கில் ஒரு ஸ்க்கீம் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! இருந்தால், நானுங்கூட இந்த சம்மருக்கு ஊட்டிக்குப் போய்விட்டு வரலாம். ஹ்ம்.

“என்ன சார், டோக்கன வச்சிப் பாத்துக்கிட்டே ஒக்காந்திருக்கீங்க?”

“இது, அதாவது, முன்னூத்தியெழுவத்தஞ்சிங்க”.

“எனக்கு 364. எப்டியும் இன்னும் ஒரு பத்து நிமிஷம் ஆகும். மணி பன்னெண்டு ஆச்சு. நா போய் டோக்கன் மிஷின் பக்கத்ல நின்னுக்கப் போறேன்”.

“எதுக்கு சார்?”

“ஒரு சோஷல் சர்வீஸ் செய்யத்தான். வாங்க, நீங்களும் வந்து வேடிக்கையப் பாருங்க”.

என்ன சோஷல் சர்வீஸ், என்ன வேடிக்கை என்று புரியாமலேயே நானும் எழுந்து கொண்டேன்.

பெரியவர் ஒருவர் வந்து டோக்கன் மிஷினில் பட்டனை அழுத்தினார். டோக்கன் வரவில்லை. திரும்ப ஒருமுறை அழுத்திப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கினார்.

பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த இந்த ஆள் அவரிடம் பேச்சுக் கொடுத்தார்.

“என்ன சார் டோக்கன் வரலியா?”

“வரலியே சார்”.

“வராது. பன்னெண்டு மணிக்கி மிஷன் ஆஃப் ஆயிரும்”.

“மூணுமணிக்குத்தானே சார் ஆஃப் ஆகும்?”

“அது மத்த நாள். இன்னிக்கி சனிக்கிழமயில்ல?”

“ஐயையோ, பென்ஷன் பணம் எடுக்கவேயில்ல. இன்னிக்கி எப்டியும் எடுத்துருவோம்னு வந்தா, வேஸ்ட்டாப் போச்சே”.

“பரவாயில்ல சார். நாளக்கி ஸண்டேயும் இந்த பாங்க் இருக்கே”.

“பாங்க் இருக்கும். திரும்ப ஒரு தடவ இந்த வெயில்ல பொறப்பட்டு வரணுமே....”.

“நீங்க வரவேண்டாம் சார்”.

“வரவேண்டாம்னா?”

“இந்தாங்க, இந்த டோக்கனப் புடிங்க. இத யூஸ் பண்ணிக்கிருங்க. ஒங்கள மாதிரி லேட் கமர்ஸ்க்காகவே நா எடுத்து வச்சிருக்கேன்”.

என்னைப் பார்த்துக் கண்ணடித்துவிட்டு, டோக் கனைப் பெரியவரிடம் நீட்டினார்.

“ரொம்பத் தாங்ஸ் சார்” என்று அவரிடமிருந்து டோக்கனைப் பெற்றுக் கொண்டு பெரியவர் முன்னால் நகர்ந்து போய் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

அடடே, இதுதான் இவர் சொன்ன சோஷல் சர்வீஸு! நல்ல சமூக சேவையாய் இருக்கிறதே!

ஆனால், இவ்வளவு நீட்டி முழக்காமல், கொஞ்சம் முந்தியே இவர் அந்த டோக்கனைப் பெரியவருக்குத் தந்திருக்கலாம்.

என்னைப் பார்த்துக் கண்ணடிக்காமல் கூடத் தந்திருக்கலாம்.

“எப்டி?” என்று திரும்பவும் கண்ணடித்தார்.

“ரொம்ப நல்ல காரியம் சார்” என்றேன்.

“இன்னொரு நல்ல காரியமும் இன்னிக்கிப் பண்ணப் போறேன். அது நீங்க சம்மந்தப் பட்டது”.

“நா சம்மந்தப்பட்டதா?”

“ஆமா. இன்னிக்கி ஒங்களுக்கு என்னோட தான் சாப்பாடு”.

போட்டாரே ஒரு போடு!

சாப்பாடு என்கிற வார்த்தை உச்சரிக்கப்பட்டதும் உடம்புக்குள்ளிருக்கிற சாப்பாட்டிலாக்கா சமாச்சாரங்க ளெல்லாம் பரபரப்படைந்தன.

இவ்வளவு நேரம் நான் கண்டு கொள்ள மறந்திருந்த பசி, என் குடலைப் பிறாண்டி, “சின்னப் பண்ண, நா இங்க இருக்கேன்” என்று நினைவூட்டியது.

என்னது, சின்னப்பண்ணையா?

பெறவு? அந்த ஆள் பெரிய பண்ணன்னா நீ சின்னப்பண்ண தான? முன்னூத்தியெழுவத்தஞ்சி ரூவால்ல சன்மானம் வாங்கியிருக்க!

சன்மானத்தை ஓரங்கட்டிவிட்டுத் தன்மானம் தலைதூக்கியது.

“சாப்பாடெல்லாம் வேண்டாம் சார், ஒங்களுக்கெதுக்கு செரமம்”.

“செரமமொண்ணுமில்ல சார். பக்கத்து ஹோட்டேல்ல தான் சாப்புடப் போறோம்”.

“பக்கத்து ஹோட்டேல்னா?”

“இந்த பாங்க்குக்குப் பக்கத்து பில்டிங் சார். சாப்பாடு ஸூப்பராயிருக்கும். நீங்க சாப்ட்டதில்லியா”.

சாப்பிட்டதில்லை. சாப்பிடுகிறதாயுமில்லை.

சென்னையிலேயே இருபது இருபத்தஞ்சு கிளைகள் உள்ள சங்கிலித் தொடர் ஹோட்டல் இது. ஒரு மேஜர் உணவு விடுதி.

ஆனால் இதன் உரிமையாளர், அறுபதைக் கடந்தும் ஒரு மைனர். பணபலத்தாலும் படைபலத்தாலும் திருமணமான பெண்களை வளைத்துப் போடுகிற அவருடைய பாலியல் வக்கிரங்கள் ஒரு கொலையில் முட்டிக் கொண்டு நின்ற போதுதான் அவருடைய

அந்தரங்கங்கள் அம்பலமாயின. காவல் துறையால் கைது செய்யப்பட்ட காமக் கொடூரக் கோடீஸ்வரர். உள்ளே போகவும் வெளியே வரவுமாயிருப்பார். இப்போது உள்ளேயா வெளியேவா என்று யாருக்குமே தெரியாது.

கோடிகளும் கேடிகளும் கை வசமிருந்தால் எந்த பஞ்சமா பாதகத்தையும் செய்துவிட்டுத் தப்பிவிடலாம் என்று நிரூபித்துக் கொண்டிருக்கிற இந்த சமூக விரோதியின் நிறுவனத்தை சமுக விழிப்புணர்வுடைய ஒவ்வொரு இந்தியனும், என்னைப்போலப் புறக்கணித்தால், துபாயிலும் அமெரிக்காவிலும் கனடாவிலும் இந்த உணவு விடுதி கிளைகள் திறந்திருக்க முடியாது.

அந்த ஹோட்டேல்காரரின் மகன் கூட ஒரு போலி பாஸ்ப்போட் விவகாரத்தில் கைதானது டிவியில் அல்லோகோலப்பட்டது. இப்போதெல்லாம் டிவியில் பாத்திரம் கழுவுகிற சோப் விளம்பரத்தில் இந்த நிறுவனத்தை முன்னிலைப்படுத்திக் காட்டி அமர்க்களப் படுத்துகிறார்கள்.

எழும்பூர் ரயில் நிலையத்தில், இந்த ஹோட்டேல்க் காரர்கள் வழங்கியிருக்கிற போர்டுகளைத்தான் ரிஸர்வேஷன்ச் சார்ட்கள் ஒட்டுவதற்குப் பாவிக்கிறார்கள். வெட்கக் கேடு.

இந்தத் தமிழர்கள் ஏன் இப்படி சொரணை கெட்டுக் கிடக்கிறார்கள், ஊட்டிக்குப் போகவிருக்கிற இந்த டோக்கன் சேவகர் உட்பட, என்று வேதனையாயும் விநோதமாயும் இருக்கிறது.

ஒத்த சிந்தனையுள்ள சில சிந்தனையாளர்களையும் இலக்கியவாதிகளையும் இனங் கண்டு, ஒன்று திரட்டி மறியல் போராட்டங்கள் நடத்தினால் தான் சரி வருமா?

“என்ன சார், எங்க யோசனையாயிருக்கீங்க, பசிச்சிருச்சா? இன்னொரு எக்ஸ்ட்ராட் டோக்கன் வச்சிருக்கேன். ஆள் யாரும் வரலியே” என்று இவர் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தபோதே ஆள் வந்து விட்டது. ஆள் இல்லை, ஆட்கள். ஒரு கணவன் மனைவி ஜோடி. அந்தக் கணவன் பொத்தானை அழுத்தியதுமே இந்த ஆள் குரல் கொடுத்து விட்டார்.

“மணி பன்னெண்டு எட்டு ஆச்சு. டோக்கன் வராது”.

“ஒன்னால தாண்டி லேட்” என்று கணவன், மனைவியின் மேல் கோபத்தை உமிழ்ந்தான்.

“சீக்கிரம் ரெடியாகுன்னா ரெடியாகிறியா, இப்பப் பார், வந்தும் பிரயோஜனமில்ல”.

“நீங்க தானேங்க சொன்னீங்க, மூணு மணி வரக்யும் பாங்க் இருக்குன்னு?”

“நா சொன்னா? இன்னிக்கி சனிக்கெழமன்னு நீ ஞாபகப்படுத்த வேண்டாமா?”

“அது சரி, ஒங்களுக்கு காலண்டர் பாக்கத் தெரியாததுக்கு நானா பழி?”

“யாருக்குடி காலண்டர் பாக்கத் தெரியாதுன்ற? நா என்ன முட்டாளா?”

முஷ்டியை உயர்த்திய கணவனைத் தடுத்தாட் கொண்டார் நம்ம ஆள்.

“சார், சண்ட போடாதீங்க. டோக்கன் தான வேணும், இந்தாங்க”.

“சார், ரொம்பத் தாங்ஸ் சார், ஏது சார்?”

“ஒங்களுக்குன்னு தான் எடுத்து வச்சிருந்தேன். ஒங்களுக்கு அர்ஜன்ட் போலயிருக்கு”.

“ஆமா சார். இன்னிக்கி அஞ்சாந் தேதி, ஹவுஸ் ஓனர் அக்கவுன்ட்ல வீட்டு வாடக ரெமிட் பண்ணியாகணும். இல்லாட்டி நாளக்கிக் கேஷத்தூக்கிட்டு அந்த ஆள் வீட்டுக்கு, மைலாப்பூருக்கு ஓடணும். பாதி ஸண்டே வேஸ்ட் ஆயிரும்”.

தன் பங்குக்கு அந்த மனைவியும், ரொம்ப நன்றிங்க சார் என்று நெளிந்து விட்டு நகர்ந்ததும், இவர் என்னிடம் ஒரு கேள்வியை வைத்தார்.

“நீங்க எத்தன டோக்கன் சார் எடுத்தீங்க?”

“ம்? ஒண்ணு தான்”.

“ஒண்ணேயொண்ணு, ஒங்களுக்கு மட்டும் எடுத்துக்கிட்டீங்க. என்ன மாதிரி ரெண்டு டோக்கன் எக்ஸ்ட்ரா எடுத்து வச்சிருந்தா யாருக்காவது பிரயோஜனப் படும்ல? எழுத்தாளர்ங்கறீங்க, இந்த மாதிரி வித்யாசமான சிந்தனையெல்லாம் வரலியே!”

ஆமா, வரலியே என்று நான் யோசித்தபோது ஒருவன் வந்தான், வேர்க்க விறுவிறுக்க. டோக்கன் மிஷினை அவன் நெருங்கும் முன்பே இவர் இடைமறித்தார்.

“டோக்கனெல்லாம் இப்ப வராது தம்பி. மணி என்ன ஆச்சு பாத்தியா?”

“பன்னெண்டு பத்து சார்”.

“தெரியுதில்ல, டைம்க்கு வர வேண்டாமா? பன்னெண்டு மணியோட டோக்கன் க்லோஸ்”.

“சார், இது எமர்ஜன்ஸி சார்”.

“எமர்ஜென்ஸின்னா கொஞ்சம் முந்தி வந்திருக்கணும். நா எக்ஸ்ட்ரா டோக்கன்ஸ் வச்சிருந்தேன். ஒரு மூணு நிமிஷம் முந்தி வந்திருந்தா ஒனக்குக் குடுத்திருப்பேன்”.

“இப்ப என்ன சார் செய்றது?”

“என்ன செய்ய முடியும், மானேஜர் ரூம்ல நாக் பண்ணிட்டு உள்ள போ. ஒன்னோட எமர்ஜன்ஸியச் சொல்லு”.

மானேஜர் ரூமுக்குள்ளே போனவன், வெளிறிய முகத்தோடு வெளியே வந்தான்.

“மானேஜர் ஹெல்ப் பண்ண முடியாதுன்னுட்டார் சார், இப்ப என்ன செய்றதுன்னு தெரியலியே”.

“அப்டி என்ன தம்பி எமர்ஜன்ஸி?” என்று நான் அவனுடைய கவனத்தை ஈர்த்தேன்.

“மதுரைல எங்கம்மாக்கு நாளக்கிக் காலைல ஆப்ரேஷன் சார். இங்க, மெட்ராஸ்ல இருக்கிற எங்க சித்தப்பா தான் பணம் தர்றார். இப்பத்தான் அவரால அரேய்ஞ்ஜ் பண்ண முடிஞ்சது. மதுரக்கிப் போகலாம்னா எனக்கு ப்ரபேஷன் பீரியட், ஆஃபீஸ்ல லீவ் கெடக்யல. ஸண்டேயும் எனக்கு ஆஃபீஸ். எங்கப்பா அக்கவுன்டல இப்ப ரெமிட் பண்ணாத்தான் சரியாயிருக்கும். மதுரைல அப்பாவோட பாங்க் ஈவ்னிங் கூட இருக்கு. அவர் இன்னிக்கே பணம் எடுத்துக்குவார். அவசரமா வந்தும் முடியாமப் போச்சே. அப்பா வேற டென்ஷன்ல இருப்பார்”.

“அதுக்கு என்னப்பா செய்ய முடியும், அப்பாட்ட ஃபோன்ல பேசு. காலைல காசு அனுப்பிர்றேன்னு சொல்லு. அம்மாவுக்காக ஆண்டவன்ட்ட வேண்டிக்க. இப்ப அதான் செய்ய முடியும்” என்று அந்த இளைஞனுக்கு அறிவுரை சொல்லிவிட்டு, இந்த ஆள், “என்ன சார் நாஞ் சொல்றது?” என்று என்னைப் பார்த்தார்.

“என்ன மாதிரி தொலை நோக்குப் பார்வையோட நீங்களும் ஒண்ணு ரெண்டு டோக்கன் எக்ஸ்ட்ரா எடுத்திருந்தீங்கன்னா இப்ப இந்தப் பையனுக்கு ஹெல்ப் பண்ணியிருக்கலாம்”.

“காலைல எட்டு மணிக்கி ஆப்ரேஷன்” என்று கண்ணீர் துளிர்த்த கண்களோடு இளைஞன் கையைப் பிசைந்து கொண்டு நிற்க, டோக்கன் நம்பர் 364, கவுன்ட்டர் நம்பர் ஸிக்ஸ் என்கிற அறிவிப்புக் கேட்டது.

“நம்ம நம்பர் வந்துருச்சு” என்று இவர் ஆறாம் நம்பர்க் கவுன்ட்டரை நோக்கி நடக்க, நான் வெளி வாசலை நோக்கி நடந்தேன், என்னுடைய டோக்கனை அந்த இளைஞனின் கையில் கொடுத்து விட்டு.

**தாமரை, நவம்பர் 2010**

# என்னுயிர்த் தோழி

அத்தியாயம் ஒண்ணு

“வந்து.... இது சிறுகதையா நாவலா?”

“சிறுகதை தான், ஏன்?”

“அத்தியாயம் ஒண்ணு ரெண்டுன்னு வர்ற மாதிரி இருக்கே...”

“நாலு அத்தியாயம் வரும். ஏன், வரக்கூடாதா?”

“சிறுகதைல அத்தியாமெல்லாம் போட்டு எழுதறது வழக்கமில்லியே.”

“வழக்கமில்லாத காரியத்தச் செய்றது தான நம்ம வழக்கம்.”

“சரி சரி. கத ஆரம்பமாகட்டும்.”

கதை ஆரம்பமாகிறது.

எங்கே ஆரம்பமாகிறது?

பாளையங்கோட்டையில்.

முன் கேட்டுக்கு ரெண்டு பக்கமும் ஆரஞ்சுக் கலரிலும் ரோஸ்க் கலரிலும் காகிதப் பூக்கள் கூரைபோட்டிருந்த பாளையங்கோட்டை.

பிற்காலத்தில், அந்தக் காகிதப்பூ மரங்கள் காய்ந்து போன பின்னால், கேட்டுக்கு ரெண்டுபுறமும் அசோக மரங்கள் நின்றன, முக்கால்ப்பனை உயரத்துக்கு.

முழுப்பனை மரங்களெல்லாம் வீட்டை அடுத்திருந்த தோட்டத்தில் நின்றிருந்தன.

நொங்கு, பனங்கிழங்கு, தகன், இனிப்புச் சாறு இளஞ்சிகப்புக்கலரில் ததும்புகிற பனம்பழம் எல்லா வற்றையும் வழங்கிக் கொண்டிருந்த பனை மரங்கள்.

பனை மரங்களின் துணைக்குப் பல மரங்கள் இருந்தன.

பிள்ளைகள் நாங்கள் ஒதப்பழம் உலுக்கித் தின்கிற புளிய மரங்கள் இருந்தன.

புளிக்கு இணையான புளிப்புக் கொண்ட அரை நெல்லிக்காய் மரங்கள் இருந்தன.

பாட்டி, ஊறுகாய் போடுகிற நார்த்தங்காய் மரங்கள் இருந்தன.

ரத்தச் சிகப்பாய் வெடித்திருக்கிற பழங்களோடு மாதுளை மரங்கள் இருந்தன.

இருபது இருபத்தஞ்சு மைல் சுற்று வட்டாரத்தில் எங்கேயும் காணக் கிடைக்காத சீத்தாப்பழ மரங்கள் எங்கள் தோட்டத்தில் இருந்தன.

லயோலாக் கான்வென்ட்டில் வைத்து ஜெரோமிடம் இதையெல்லாம் சொல்லி, "பாக்க வர்றியா?" என்று கேட்டதற்கு, "வரல" என்று ஒரே வார்த்தையில் என்னுடைய உற்சாகத்தை உருக்குலைத்து விட்டான் பாவி.

"ஒங்கத் தோட்டத்ல மாங்கா மரம் இல்லியா? மாங்கா மரம் இல்லாதது என்னல தோட்டம்!"

மாங்கா மரத்தைக்குறித்து ஓர் ஏக்கத்தை என் மனசில் ஏற்படுத்திவிட்ட ஜெரோமும் நானும் பாதை விலகிப்போய்ப் பல வருஷங்கள் கழித்துத் தூத்துக்குடியில் வைத்து சந்தித்துக் கொண்ட விவரம் ஒரு கவிதையாய் வருகிறது, ரெண்டாவது அத்தியாயத்தில்.

அத்தியாயம் ரெண்டு

கல்லூரிப் படிப்பை ஒரு மாதிரி ஒப்பேற்றி விட்டுத் தென்கோடித் தூத்துக்குடியில் சின்னதாய் ஒரு உத்யோகத்தில் சேர்ந்தது, பிறகு கல்யாணமானது, பிறகு சென்னைக்குக் குடிபெயர்ந்தது, ஒரு தொழிலதிபனாய்ப் புது அவதாரம் எடுத்தது, side by sid ஓர் எழுத்தாளனாயும் கவிஞனாயும் சுமாரான உயரத்துக்குப் போனது போன்ற சங்கதிகளையெல்லாம் Fast forward டில் ஓட விட்டு விட்டு, அந்த ஜெரோம் கவிதைக்கு வருவோம்.

*மதர் அலெக்ஸ் தலைமையில்*
*சித்தி டீச்சராயிருந்த*
*பாளையங்கோட்டைக் கான்வென்ட்டில்*
*டபுள் ப்ரமோஷன் எனக்கு*
*ரெண்டிலிருந்து நாலுக்கு*
*நாலாங்கிளாஸில் நண்பனானான்*
*சேட்டைக்கார ஜெரோம்*
*முதல் பெஞ்ச்சிலிருந்த எனக்கு*
*டிமோஷன் பெற்றுத் தந்தான்*
*கடைசி பெஞ்ச்சுக்கு*
*கடைசிக்கி முந்தின பெஞ்ச்சிலிருந்த*
*தாவணி போட்ட விஜயலட்சுமியின்*
*தலைமுடியில் தாண்டவமாடிய*
*பேன்களைக் கணக்கெடுத்து*
*பெஞ்ச் மேலே ஏறி நின்றோம்*
*அவனும் நானும்*
*ராசகோபாலா எங்கம்மா*
*தோச வத்தாலே*

*நேக்குத் தந்தாலே*
*நோக்குத் தந்தாலோ*
*என்று*
*நையாண்டி இலக்கியம்*
*சொல்லித் தந்தான்*
*அஞ்சாங் கிளாஸுக்குப் பிறகு*
*ஆளைக் காணவேயில்லை அவன்*
*வருஷங்கள் பல கடந்து அவனைத்*
*தூத்துக்குடி பஸ் ஸ்டாண்டில்*
*எதிர்பாராமல் பார்த்தபோது*
*மலரும் நினைவுகளைப்*
*பகிர்ந்து கொள்கிற*
*மனசெனக்கு இருக்கவில்லை*
*அவன் டாக்டராயும்*
*நான் க்ளார்க்காயும்*
*ஆகிவிட்டிருந்ததனால்*
*வருஷங்கள் பலப்பல இன்னும்*
*ஓடிப்போய் விட்டன*
*கால ஓட்டத்தில்*
*கவிஞனாயும் எழுத்தாளனாயும்*
*டபுள் ப்ரமோஷன் வாங்கி நான்*
*உயரத்துக்குப் போய்விட்டேன்*
*அவன் பாவம்*
*இன்னும் டாக்டராய்த்தானிருப்பான்*

இந்த பூலோகத்தின் ஏதோவொரு நகரத்தில் ஒரு க்ளினிக் போட்டுக் கொண்டு ஜெரோம் உட்கார்ந்திருக்கக் கூடும். அல்லது, ஆர்ப்பாட்டமாய் ஒரு நர்ஸிங் ஹோமுக்கு முதலாளியாய்க் கூட இருக்கலாம். விஜயலட்சுமியின் கூந்தலில் பேன் பார்த்த பரவசமெல்லாம் மறந்து போயிருக்கும் அவனுக்கு. அவ்வப்போது மெட்ராஸுக்கு வந்து போய்க்கொண்டு தானிருப்பான், நரைமுடிக்கு

டை அடித்துக் கொண்டு. ஏர்ப்போட்டிலோ எக்மோர் ஸ்டேஷனிலோ, ஸ்பென்ஸர்ஸிலோ சத்யம் காம்ப்ளக்ஸிலோ, மவுன்ட் ரோடிலோ மெரினா பீச்சிலோ, ஜனவரிப் புத்தகத் திருவிழாவிலோ ஜல்லிக் கட்டிலோ எதிர்பாராமல் எதிரெதிரில் வந்தால் கூட அடையாளாந் தெரியுமா என்பது சந்தேகந்தான்.

ஹ்ம்.

அது சரி, மெட்ராஸ்ல ஏது டேய் ஜல்லிக்கட்டு என்று யாரோ குரல் கொடுப்பது, குறிக்கிடுவது தெரிகிறது.

ஒரு மொழி நயத்துக்காக, எதுகை மோனைக்காக எழுதப்பட்டது அது. குறுக்குக் கேள்வியெல்லாம் கேக்கப்படாது.

மாமனார் வீட்டு அன்பளிப்பாய், ஒண்ணேகால் கிரவுண்டில் ஷெனாய் நகரில் ஒரு சொந்த வீடு வாங்கிக் கொண்டு ப்ஸட்டில் ஆனபோது தான் நம்ம பால்ய காலத்து ஏக்கத்துக்கு ஒரு தீர்வு பிறந்தது.

மாங்கா மர ஏக்கம்.

வீட்டுக் காம்ப்பவுண்டுக்குள்ளே பெத்த பெரிய சைஸில் ஒரு மாமரம்.

மொட்டை மாடியின் மேல் கவிந்திருந்தன காய் சுமந்த கிளைகள்.

ஆவக்காய் ஊறுகாய்க்குப் பறித்ததும் அணில் கடித்ததும் போக, பழுக்கிற பருவத்திலிருந்த பருத்த காய்கள் பறிக்கப்பட்டு வினியோகிக்கப்படும், சென்னையிலிருக்கிற எல்லா உறவினர்களுக்கும். நம்மப் பங்குக் காய்கள் வைக்கோல்ப் படுக்கையில் கிடக்கும், பழுக்கிறோம் பழுக்கிறோம் என்று பொறுமையை சோதித்துக்

கொண்டு. பழுத்த பிறகு சுவைத்துப்பார்த்தால், ஆஹா, ராஜபாளையத்து சப்பட்டை மாதிரித் தித்திப்போ தித்திப்பு.

ஓய்வு நேரப் பகல்களில் ஆறுதலாய் உட்கார்ந்து கதை கவிதை எழுத வசதியாய், மொட்டை மாடியில் மாமர நிழல்.

ஆனால், அந்த மாம்பழத் தித்திப்பும் மாமர நிழலும் ரொம்ப நாள் நீடிக்கவில்லை. வியாபாரத்தில் நஷ்டப்பட்டு, வீழ்ச்சியடைந்து, எல்லாவற்றையும் இழந்து நின்றபோது, வீட்டையும் இழக்க வேண்டியிருந்தது.

கடைசிக் கடைசியாய் ஒரு கவிதை எழுதத்தான் முடிந்தது, மாமர நிழலில்.

*ஊருக்குத் தெரியும்*
*வீடு*
*விற்பனைக்கு என்று*
*பூரித்து நிற்குமிந்த*
*சினை மாமரம்*
*வீட்டோடு விற்பனையாகிவிடப் போகிறதை*
*அறிந்திருக்க நியாயமில்லை*
*போனமாசப் பூக்களெல்லாம்*
*பிஞ்சாகிக் காயாகிக்*
*கிளைகளெல்லாம் வழிகின்றன*
*இளமஞ்சள்க் கனிகளோடு*
*அடுத்த மாசம்*
*தாய்மைச் சிலிர்ப்போடு*
*மாமரம் பொங்கி நிற்கும்*
*அறுவடைக்கு அந்நியர் வருகையில்*
*என்னைத்தேடி ஏங்கி நிற்கும்*

*ஏக்கமும் துக்கமும் அம்மா*
*உனக்கு மட்டும் சொந்தமல்ல*
*உன் வாட்டத்துக்கிணையானதல்லவா*
*என்னுடைய சோகமும் என்று*
*அம் மாவிடம் எப்படிச் சொல்ல*
*அத்தியாயம் மூணு*

ரெண்டாம் அத்தியாத்தின் ஆரம்பத்தில், fast forward செய்த கல்லூரிக் காலத்தை ரீவைண்ட் செய்து, விலாவாரியாய் நினைத்துப்பார்த்துத் திரும்பவும் வாழ்ந்து பார்க்கிற அத்தியாயம் இது.

போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸிலிருக்கிற ஒரு பட்டதாரிப் பையன் எங்கேயாவது ஹோம் ஸிக் ஆவானோ?

நான் ஆனேன்.

MSc (Mathematics) படிக்கிற ஒரு இருபது வயசு மாணவன் எங்கேயாவது அம்மாவை நினைத்து அழுவானோ?

நான் அழுதேன்.

அம்மாவும் சகோதரிகளும் பாளையங்கோட்டையில்.

தன்னந்தனியாய் நான் மட்டும் திருச்சியில், வாப்பாவோடு.

நேர்மை நாணயம், தர்ம ஞாயம், சத்தியம் கை சுத்தம் போன்ற உன்னதப் பண்புகளோடு, கறார் கண்டிப்புக்கும் பிடிவாதத்துக்கும் உலகப் பிரசத்தி பெற்ற வாப்பா.

கலெக்டர்”ஸ் ஆஃபீஸ் ரோடில், மின் வாரிய ஸப் ஸ்டேஷனுக்குள்ளே, ஸுப்ரன்ட்டண்டிங் இஞ்ஜினி யருக்கான கெஸ்ட் ஹவுஸில் வாப்போவோடு வாழ்க்கை.

போரடிக்கிற வாழ்க்கை.

சாயங்காலம் நாலேகாலுக்குக் கல்லூரி விட்டதும் நேரே வீட்டுக்குப் போய் என்ன செய்ய.

எதிர்த்திசையில் போகிற பஸ்ஸொன்றில் ஏறிப் பாலக்கரை வழியாய் மெய்ன்காட் கேட். மெய்ன்காட் கேட் பஸ் ஸ்டாப்பில் அரை மணி நேரம் முக்கால் மணி நேரம் நின்றுப் பராக்குப் பார்த்து விட்டு சாவகாசமாய் வீடு போய்ச் சேருவோம் என்று நின்றிருந்த போதுதான், ஒரு நாள் அந்தக் கண்களை சந்திக்கிற அதிர்ஷ்டம் அடித்தது.

அந்த காந்தக் கண்கள் என்னைத்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்கிறதை உணர்ந்தபோது ஆச்சர்யமாயிருந்தது. என்னையா? நிஜம்மாகவா?

அந்த பம்பரக் கண்களுக்குரியவளின் முகத்தைப் பார்த்தேன்.

யம்மாடி! பி. சுசிலாவின் தேன் குரலுக்குப் பெண்ணுருவம் கொடுத்து உயிர்ப்பித்தால் எப்படி யிருக்குமோ அப்படியொரு கிறங்கடிக்கிற பேரழகு! அந்த வசீகர வதனத்தில் மலர்ந்திருந்த மோனாலிஸூப் புன்னகை, என்னை நோக்கி ஏவப்பட்டிருந்ததை நம்ப முடியாதவனாய் நின்றிருந்தேன்.

*

பதினேழாம் நம்பர் பஸ்.

மெய்ன்காட் கேட் ட்டு ஜங்ஷன், வழி தில்லை நகர், கலைக்டர் ஆபீஸ்.

அட, நம்ம ரூட் தான்!

டிரைவரை அடுத்திருந்த ஸைடு ஸீட்டில் நான்.

வலது பக்கம் பார்வையைத் திருப்பிய சமயமெல்லாம் அந்த வயாகரா விழிகளை எதிர் கொண்டு நிலைகுலைந்து போய்க்கொண்டிருந்தேன்.

கலெக்டர்"ஸ் ஆஃபீஸ் ரோடில் இறங்கிக் கொண்டாள்.

அட, நம்ம ஏரியா தான்!

வீட்டுக்கு வந்ததும் பாத்ரூமுக்குள்ளே போய்க் கண்ணாடியில் பார்த்துக் கொண்டேன் என் முகத்தை.

இந்த மூஞ்சியில், பார்க்கிற மாதிரி அப்படி என்ன இருக்கிறது என்று புரியவில்லை.

எனக்கு புரியாதது என்னமோ அந்தப் பேரழகிக்குப் புரிந்திருக்கிறது என்பது மட்டும் புரிந்தது.

*

மெய்ன்காட் கேட் பஸ் ஸ்டாப்பில் நின்றுப் பராக்குப் பார்க்கிற வேலை போய், பா(ர்)வைக்காகக் காத்திருக்கிற வேலை அடுத்த நாளிலிருந்து ஆரம்பம்.

தில்லை நகர் வழியாய்ப் போகிற பஸ்ஸில் ஏறாமல், உறையூர் வழியாய், சுற்று வழியில் போகிற ஒன்பதாம் நம்பரில் ஏறினால், கூடுதலாய் ஒரு பத்து நிமிஷம் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டே போகலாமே என்று நினைத்த போது, டெலிபதியில் என் எண்ணத்தை கிரகித்துக் கொண்ட மாதிரி அவள் ஒன்பதாம் நம்பரிலேயே ஏறினாள். வழக்கம் போல நமக்கு டிரைவரைப் பார்த்த மாதிரியான ஸைடு ஸீட்.. பார்வைப் பரிமாற்றம், மோனாலிஸூப் புன்னகை, மோஹனப் புன்னகைக் கட்டத்தையெல்லாம் கடந்து, சிரிப்பாய்ப் பெருகிப் போயிருந்தது. சிரிப்பு என்றால், எங்க வீட்டுச் சிரிப்பு ஒங்க வீட்டுச் சிரிப்பு அல்ல. பஸ்ஸில் போகிற அந்த முக்கால் மணி நேரமும் போட்டுத் தாக்கி என்னைப் பாடாய்ப் படுத்துகிற மந்திரச் சிரிப்பு. வழி மறித்துக் கொண்டு நிற்கிற ஸ்டாண்டிங் பயணிகளை ஊடுருவிக் கொண்டு என்மேல் பாய்கிற சிரிப்பு.

வாரம் ஒருமுறை ஷேவ் செய்து கொண்டிருந்தவன், வாரம் ரெண்டு முறை, வாரம் மூணு முறை என்று முன்னேறி, ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஷேவ் என்று மொழு மொழு

முகமானேன். ஷேவ் செய்யாத சோக தினங்களில் அவளுக்கு முகங்காட்டுவதற்குத் தயக்கம் காட்டினேன்.

“ஷேவ் பண்ணிக்காட்டிக்கூட நீங்க அழக்க்காத்தான் இருக்கீங்க, எப்பவுமே நீங்க ஃப்ரஷ்ஷாத்தானிருக்கீங்க” என்றாள், நாங்கள் பேசிக் கொள்ள ஆரம்பித்த பிறகு ஒரு நாள்.

“எப்பவுமே நீங்க ஹாண்ஸம்மாத்தான் இருக்கீங்க” என்று குரலைத் தணித்துச் சொன்ன போது அவளுக்கு வெட்கம் வேறு வந்து விட்டது. வெட்கமில்லை. நாணம்.

ஹாண்ஸம்! நான்! ஓஹ்ஹோ!

அதைச் சொல்வது யார்?

திருச்சி சீத்தாலக்ஷ்மி ராமஸ்வாமிக் காலேஜின், கிரீடம் தரித்த பியூட்டி க்வீன்!

இன்றைய புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், அரியலூர் மாவட்டங்களையும் உள்ளடக்கிய, ஒருங்கிணைந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் தலைமைப் பேரழகி!

அவளுடைய கல்லூரி ஆண்டு விழாவுக்கான அழைப்பிதழை சாமர்த்தியமாய் என்னிடம் சேர்ப்பித்து விட்டுக் காத்திருந்தாள். அழைப்பையேற்று நான் போனபோது க்லோஸ் அப்பில் சந்திப்பு நிகழ்ந்தது. முதன் முதலில் ஆங்கிலத்தில் ஆரம்பித்த உரையாடல், தமிழுக்குத் தாவியபோது அந்நியோன்னியம் அதிகமானது.

“ஸண்டே சினிமாக்குப் போலாமோ?” என்று அழைப்பு விடுத்தாள், ஒரு சந்திப்பின் போது.

“வெலிங்டன் த்யேட்டர்ல உத்தரவின்றி உள்ளே வா. பாக்யலக்ஷ்மி சொன்னா, நல்ல லவ் ஸ்டோரியாம்.”

போனோம்.

வாப்பா, ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டைக்குக் கேம்ப் போய், அங்கேயே நைட் ஹால்ட் போட்டு விட்டார் என்பது வலு வசதி.

**

“ஒங்களுக்கு எம்ஜியார் சினிமாப் பாட்டு பிடிக்குமா, சிவாஜி சினிமாப் பாட்டு பிடிக்குமா?”

“சிவாஜிப் பாட்டு தான். எம்ஜியார்ப் பாட்டு நேக்குப் புடிக்கவே புடிக்காது.”

“வந்து... நேக்குந்தான், எம்ஜியார்ப் பாட்டு புடிக்கவே புடிக்காது. ஆனா, ஒரேயொரு பாட்டு இப்ப ரொம்பப் புடிக்கிறது.”

“அது என்ன மேடம், அவ்ளோ விசேஷமான எம்ஜியார்ப் பாட்டு?”

“நாம் ஒருவரையொருவர் சந்திப்போமென

காதல் தேவதை சொன்னாள்

என் இடது கண்ணும் துடித்தது

உனைக் கண்டேன் இந்நாள் பொன்னாள்."

**

"நா ஒரு கிரீட்டிங்ஸ் அனுப்ச்சேனே கெடச்சதா? ஒங்கக் காலேஜ் அட்ரஸ்க்கு அனுப்ச்சேன்."

"ஓ, கெடச்சதே! அந்தக் கார்ட எடுத்து வச்சிக்கிட்டு என் சிநேகிதிகள்ளாம் ஒரே கிண்டல் தெரியுமா!"

"நாந்தான் அனுப்ச்சேன்னு அவங்களுக்கெல்லாம் எப்டித் தெரியும்? நா கார்ட்ல ஸைன் பண்ணவே இல்லியே?"

"ஸைன் பண்ணாட்டி என்ன, எல்லாம் கண்டு பிடிச்சிருச்சிங்க. அதான் கார்டு பளிச்ச்சின்னு இருக்கே, முஸ்லிம் கலர்ல!"

**

"ஹலோ, எனக்கு நீங்க ஒரு பெரிய்ய உதவி செய்யணுமே..."

"பெரிய்ய உதவியா? எவ்ளோப் பெரீசுன்னாலும் செய்வேன். ஒங்களுக்காக நா எதுவும் செய்வேன்னு தெரியாதா?"

"செய்வீங்க தான். ஆனா இந்த உதவி எனக்கில்ல."

"பின்ன?"

"ஒங்கக் காலேஜ்ல ஹிஸ்ட்ரி ஸ்ட்யூடன்ட்ஸ் யாராவது ஒங்க சிநேகிதிங்க இருந்தாங்கன்னா, ஹிஸ்ட்ரி க்வெஸ்ச்சன் பேப்பர்ஸ் வேணும்."

"யாருக்கோ."

"ஹோலி க்ராஸ்ல படிக்கிறாளே என்னோட கஸின் ஒருத்தி, அவளுக்கு."

"கஸின்னா?"

"மாமாப் பொண்ணு."

"ம்."

"என்ன, வாங்கித்தர முடியுமா?"

"நோ."

"நோன்னா?"

“பாருங்க, ஒங்களுக்குன்னா நா எதுவும் செய்வேன். ஒங்கக் கஸின்க்கெல்லாம் எங்கிட்ட ஹெல்ப் கேக்காதீங்க. ஒங்கக் கஸினப் பத்தியெல்லாம் ப்ளீஸ், எங்கிட்டப் பேசாதீங்க.”

*

இந்த மாதிரி நேரில் பார்க்கிறபோது பேசிக் கொண்டால்தான் உண்டு. மற்றபடி, மொபைல் ஃபோனோ எஸ்ப்ஸம்மெஸ்ஸோ, கம்ப்யூட்டரோ இ மெய்லோ எட்டியேப் பார்த்திருக்காத கடுமையான கற்காலம்.

லாண்ட் லைன் ஃபோன் கூட ஓர் அபூர்வமான வஸ்துவாய்த்தான் இருந்தது.

அவளுடைய வீட்டில் ஃபோன் கிடையாது. சாலையைக் கடந்து போய் ஆஃபீஸர்ஸ் க்ளப்பிலிருந்து தான் ஃபோன் பண்ண வேண்டும்.

பண்ணுவாள்.

பண்ணினாள்.

வாப்பாவின் மேஜையில் ரேடியோ. ரேடியோ அதுபாட்டுக்குக் கே.என்.செய்கலின் புராதனப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தது.

ரேடியோவுக்குப் பக்கத்தில் ஃபோன். ஃபைல் பார்த்துக் கொண்டிருந்த வாப்பா, டெலிஃபோன் மணியடிக்கவும், ரேடியோவை அணைத்து விட்டு ஃபோனை எடுத்தார்.

“ஹலோ.”

“ “

“ஹலோ?”

கட்.

அரை நிமிஷம் கழித்துத் திரும்பவும் மணி.

“ஹலோ?”

கட்.

முன்னறையில் உட்கார்ந்து, பாடப்புஸ்தகம் படிக்கிற மாதிரிப் பாவனை பண்ணிக் கொண்டிருந்த எனக்குக் குரல் கொடுத்தார் வாப்பா, மூன்றாவது முறை மணியடித்த போது.

“வந்து இது யார்ன்னு பார்ப்பா. ஒண்ணுமே சத்தமே கேக்கல.”

இந்த அழைப்புக்காகத் தானே வாப்போவ் நான் காத்துக்கிடக்கிறேன்!

ஓட்டமாய் வந்து ரிஸிவரை எடுத்தேன்.

“ஹலோ.”

“டாடி இருக்காரோ?”

“ம்”

“டாடி இல்ல. கரடி.”

“ம்.”

“ஸ்டடி லீவ் விட்டாச்சா?”

“ம்.”

“அதான் ஆளையேக் காணல.”

“ம்.”

“காலைல மீட் பண்ணுவோமா?”

“ம்.”

“ஒம்போது மணிக்கி, எங்க வீட்டுக்குப் பக்கத்து பஸ் ஸ்டாப்ல.”

“ம்.”

“எல்லாத்துக்கும் ம் தானா?”

“ம்.”

“அப்பாக்கிட்ட அவ்ளோ பயம்மா?”

“ம்.”

“வச்சிரட்டுமா?”

“ம்.”

“யார்ப்பா அது?”

“ராங் நம்பர் வாப்பா.”

“நீ ம் போட்டுட்டேயிருந்த?”

“அது, வாப்பா, கரடி....”

“கரடி?”

“கரடிக்கி இங்லீஷ்ல கூஷங்ஹழ் தானேன்னு கேட்டாங்க. நா, ம் போட்டேன்.”

“ம்.”

“இன்னிக்கி வியாழக்கிழம தானேன்னு கேட்டாங்க. இன்னொரு ம் போட்டேன்.”

“ம்.”

*

அடுத்த நாள் காலையில் பஸ் ஸ்டாப்பில் சந்தித்த போது, “அப்டியே மாம்பழ சாலைக்கிப் போய்க் காவேரிக் கரைல ஒக்காந்து பேசிட்டு வருவோமே” என்று கூப்பிட்டாள்.

“பரீச்சக்கிப் படிக்க வேண்டாமோ?”

“அதான் நீங்க கைல புக்ஸ் வச்சிருக்கீங்களே.”

“அப்பாவ ஏமாத்தறதுக்கு எடுத்துட்டு வந்தேன்.”

“நானும் புக்ஸ் வச்சிருக்கேன். முடிஞ்சா அங்க ஒக்காந்து படிப்போம்.”

“முடியிற காரியமா?”

“ஈங்ஸ்ண்ப் ற்ங்ம்ல்ற்ண்ய்ஞ் ற்ட்ங் ஹய்ஞ்ங்ப் மாதிரி இருக்கில்ல?”

“நானா ஏஞ்ஜல்? நீங்க தாம்மா ஏஞ்ஜலோ ஏஞ்ஜல்.”

“சரி, அப்ப ஒங்க ஏஞ்ஜல் சொல்றதக் கேளுங்க. வாங்களேன், ப்ளீஸ்.”

*

போனோம்.

சத்திரம் ஸ்டாப் வரைக்கும் பஸ்ஸில் போய் இறங்கி, அங்கேயிருந்து நடக்க வெண்டுமென்றாள்.

“ஐயையோ, அவ்ளோ தூரம் நடக்கவா! ஸ்ரீரங்கம் பஸ்ல போயிருவோமே?”

“ஐயே, வேண்டாம். காவேரிப் பாலத்ல நடக்க நல்லாயிருக்கும். வரக்ல பஸ்ல வந்துருவோம். போக்ல நடந்தே போவோமே, ப்ளீஸ்.”

நடந்தோம்.

நல்ல வெயில். அதனாலென்ன, என் ஏஞ்ஜலோ டல்லவா நான் நடந்து கொண்டிருக்கிறேன்!

பட்டும் படாமலுமான நெருக்கத்தில் காவேரிப் பாலத்தில் நடந்து கொண்டிருந்த போது, என்னுடைய புஜம் அவளுடைய படக்கூடாத இடத்தில் பட்டு விட்டதைக் கண்டே கொள்ளவில்லை, அவளும் நானும்.

மாமரங்கள் புடைசூழ, மாம்பழச் சாலைக்குள் பிரவேசித்துக் காவேரிக் கரையில், படித்துறையில் உட்கார்ந்தோம்.

அண்ணாந்து பார்த்தால், கன்னா பின்னாவென்று ஒரு மாமரம், அந்த மாமரப் பரிவாரங்களுக்கே மஹாராணி மாதிரி.

“யம்மாடியோவ், எவ்ளோப் பெரிசு!” என்று வாயைப் பிளந்தேன்.

அவள் ஆச்சர்யப்படவில்லை.

“நீங்க இப்பத்தான் ஃபஸ்ட் டைம் வர்றீங்கல்ல?” என்று சிரித்தாள்.

“நாங்க அடிக்கடி வருவோம்.”

“நாங்கன்னா?”

“எங்கக் காலேஜ் ஃப்ரண்ஸ். நா, பாக்யம், ராதா எல்லாரும் வருவோம்.”

“வந்து?”

“வந்து, குதியாட்டம் போடுவோம்.”

“டான்ஸ் ஆடுவீங்களாக்கும்?”

“ஓ, அதுவும் செய்வோம். நாங்க ஆட்டம் போடறதெல்லாம் இந்த மாமரத்துக்குத் தெரியும். இப்பக் கூட நம்மளத்தான் இந்த மரம் பாத்துட்டே இருக்கு பாருங்க.”

“ஐயையோ, அப்ப வாங்க நாம வேற எடத்துக்குப் போயிருவோம். நாம ரெண்டு பேரும் தனியா வந்திருக்கிறத இந்த மரம் யார்ட்டயாவது வத்தி வச்சிரப் போகுது!”

“வத்தி வக்ய என்ன இருக்கு, நாம என்ன தப்புக் காரியமா பண்ணப் போறோம்?”

“அதானே, நாம என்ன தப்புக் காரியம் பண்ணவா வந்திருக்கோம்? பரீச்சக்கிப் படிக்கத்தான வந்திருக்கோம்!”

“ரொம்ம்ம்பக் குறும்பு ஒங்களுக்கு.”

“ஆராதனா படத்ல வர்ற ரெண்டாவது ராஜேஷ் கன்னா மாதிரி, நானும் குறும்புக்காரன்ங்கறீங்க.”

“ஆராதனா பாத்தீங்களா?”

“ஸூரிம்மா. ஒங்களுக்குத் தெரியாமப் பாத்துட்டேன்”

“நானும் ஒங்களுக்குத் தெரியாமப் பாத்துட்டேனே!”

“நர், ஜங் ஹழ்ங் ங்ஸ்ங்ய். ஆராதனா நல்ல படம்ல?”

“நல்ல படந்தான். ஆனாலும், கல்யாணத்துக்கு முந்தி ரூப்புத்தேரா மஸ்தானா பண்றது சரியான்னு தெரியல. அந்த வேலையெல்லாம் கல்யாணத்துக்கப்புறந்தான் வச்சிக்கணும். ஆனாலும்...”

“ஆனாலும்?”

“ஆனாலும் அந்தப் படத்ல எனக்குப் புடிச்ச பாட்டு ரூப்புத்தேரா மஸ்தானா தான்.”

“தினமணிக் கதிர்ல சுஜாதாத் தொடர் கத இந்த வாரம் வாசிச்சீங்களா?”

“வாசிச்சேன், வாசிச்சேன். தப்புப் பண்றது தப்பேயில்லன்னு அந்தக் கதாநாயகி சொல்ற மாதிரி எழுதியிருக்கார்ல?”

“பட் நாட் வித் ஆர் எனிவே ன்னு சொல்றா. அசிங்கம்ல?”

“அசிங்கந்தான். நாமப் பேசறதயெல்லாம் இந்த மாமரம் கேட்டுட்டிருக்கு. அசிங்கம் வேண்டாம் வேற விஷயம் பேசுவோம்.”

“ஆன்மீகம் பேசணுங்கறீங்களா?”

“பேசலாம். தப்பில்ல. முஸ்லிம்ஸ் டெய்லி அஞ்சு நேரம் ப்ரே பண்ணனும்ல? நீங்க பண்ணுவீங்களோ?”

“அப்பா பண்ணுவார். நா அப்பப்ப. நீங்க கோவிலுக்கெல்லாம் போவீங்கல்ல?”

“ஓ, போவோமே, போன ஸண்டே கூட போயிருந்தோமே, குடும்பத்தோட.”

“எங்க, ஸ்ரீரங்கத்துக்கா?”

“இல்ல. சமயபுரம். சமயபுரந்தா எனக்குப் புடிக்கும்.”

“சமயபுரத்ல எனக்காக வேண்டிக்கிட்டீங்களா?”

“நமக்காக வேண்டிக்கிட்டேன்.”

*

மாமரத்து நிழலில் மாலை வரைக்கும் உட்கார்ந்திருந்தோம்.

பசியே தெரியவில்லை.

ஆள் நடமாட்டமே இல்லாத அந்தக் காவேரிப் படித்துறை வழியாய்ப்போன நாலஞ்சு சின்னப் பையன்கள், எம்ஜியார் ஜெயலலிதாடோய் என்று கூவிவிட்டு ஓடினார்கள்.

அப்போதுதான் எம் ஜி ஆர் மேலே எனக்கொரு பிரியம் ஏற்பட ஆரம்பித்தது.

“டைமாயிருச்சில்ல? கௌம்புவோமா?” என்று அவள் எழுந்து கொள்ள முனைந்த போது, நான் என்னுடைய டைரியை எடுத்து அவளிடம் நீட்டினேன்.

“இன்னிக்கி டேட்ல ஒங்க ஆட்டோகிராஃப் போடுங்க.”

புன்னகையோடு டைரியைப் பெற்றுக் கொண்டு, அதை மடியில் விரித்து வைத்துக் கொண்டாள்.

“நீங்க பாக்காதீங்க” என்றாள். என்னமோ எழுதினாள்.

“வீட்ல போய்த்தான் பாக்கணும்” என்று சிரித்தாள்.

“உத்தரவு மேடம்” என்று எழுந்து கொண்டேன்.

“பய் சொல்லிட்டுக் கெளம்புவோம்” என்றாள்.

“பய் சொல்லவா? யாருக்கு?”

“இந்த மாமரத்துக்குத்தான். அது ஒண்ணுதான இங்க இருக்கு, நம்மளையேப் பாத்துக்கிட்டு!”

“பய் பய் மாமரமே.”

“வெறும் பய் பய் தானா?”

“வேற என்ன சொல்லச் சொல்றீங்க?”

“மறுபடியும் வருவேன்னு சொல்லிட்டுக் கெளம்புங்க.”

சொல்லிவிட்டுக் கிளம்பினோம்.

வீட்டுக்கு வந்து, டைரியைப் பிரித்துப் பார்த்தேன்.

கண்ணில் ஒற்றிக்கொள்கிற மாதிரியான கையெழுத்தில், ஆங்கிலத்தில் அழகாய் எழுதியிருந்தாள், அந்த ஆங்கில இலக்கிய மாணவி.

" If winter comes, can spring be far behind! '

*

அடுத்த நாள் சனிக்கிழமை சாயங்காலம், மசூதிக்குப் புறப்பட்டார் வாப்பா, என்னையும் இழுத்துக் கொண்டு. கலெக்டர்”ஸ் ஆஃபீஸ் ரோடில் நெடுக நடந்து, கோர்ட் ரோடைக் கடந்தும் நடக்க வேண்டும்.

காரில் போகாமல் கால்நடையாய் நடத்திக் கூட்டிக் கொண்டு போகிறாரே என்றிருந்தது. ஆனால் அது எவ்வளவு நல்லது என்பது கோர்ட் ரோடில் போன போது புரிந்தது.

எதிரே நடந்து வந்து கொண்டிருந்தாள் நம்ம க்ளியோப்பாட்ரா.

சீருடை அணிந்த ஏழெட்டுப் பள்ளிக்கூட மாணவிகளுக்கு மத்தியில், ஒரு பட்டத்து ராணி மாதிரி, ஒயிலாய் வந்து கொண்டிருந்தாள். அவளுடைய கைப்பை தோளில்

தொங்கிக் கொண்டிருந்தது, வழக்கம் போல. கைகளில் புத்தகங்கள் வைத்திருந்தாள், மார்போடு அணைத்தபடி.

குடுத்து வச்ச புஸ்தகங்கள்.

ஸ்பெஷல் க்லாஸ்க்குப் போய் வந்திருப்பாள்.

வாப்பாவுக்கு இணையாய் நடந்து கொண்டிருந்தவன், அவளை முழுமையாய்ப் பார்க்கவும் முடியாமல், தவிர்க்கவும் முடியாமல் தவிப்பிலிருக்க, ரொம்பக் குளிர்ச்சியான ஒரு குறும்புச் சிரிப்போடு எங்களைக் கடந்து நடந்தாள்.

அடுத்த சந்திப்பில் அதைப்பற்றிக் கேட்டேன்.

“அப்பா கூட நா போகும் போது நீங்க அப்டியாம்மா சிரிக்கிறது?”

“ஏன், சிரிச்சா என்ன? எனக்கென்ன பயம் எங்க மாமா கிட்ட?” என்று என்னை ஓரக்கண்ணால் நோட்டமிட்டாள்.

*

பரீட்சைகளெல்லாம் நிறைவடைந்த கையோடு வாப்பாவுக்குத் திருநெல்வேலிக்கு மாற்றல் உத்தரவு வந்து விட்டது.

விடைபெற்றுக் கொள்கிற கட்டம்.

மோஹனப் புன்னகைகளெல்லாம் மறைந்து போய், சோகப் புன்னகைகளைப் பரிமாறிக் கொள்ளும் கட்டம்.

புகைப்படங்களையும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டு விடை பெற்றுக் கொண்டோம்.

“லெட்டர் எழுதுவீங்களா?”

“நீங்க எழுதினா, நானும் எழுதுவேன்.”

“நா கட்டாயம் எழுதுவேன்.”

*

எழுதினாள்.

ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சு கடிதங்கள் வந்தன.

ஆறாவது கடிதம் வரவில்லை. அவளுடைய கல்யாண அழைப்பிதழ் வந்தது.

அத்தியாயம் நாலு

மார்ச், 2011

நம்மக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் திருச்சியில் என்று கடிதம் வந்த போது, மனசு குதூகலித்தது.

குறுகுறுக்கவும் செய்தது.

அரசியல் வேலை ஒரு நாள் தான் என்றாலும், அதிகப்படியாய் ஒரு நாள் ஒதுக்கினேன், திருச்சிராப்பள்ளி விஜயத்துக்கு.

என் தேவதை வாழ்ந்திருந்த புனித மண்ணில் கடைசியாய் நான் கால் பதித்த பின்னால், இந்திய மத்திய அரசாங்கத்தின் எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் வந்து போய் விட்டன!

இந்த ஊரில் தான் இன்னும் இருக்கிறாளா, இல்லை புலம் பெயர்ந்து விட்டாளா?

பாக்கெட்டில் கிடக்கிற ப்ஸல்ஃபோனில் யார்யாருடைய நம்பர்களெல்லாமோ இருக்கின்றன. அவளுடைய நம்பர் மட்டும் இல்லை.

*

கட்சி வேலைகள் முடிந்ததும் காதல் வேலையை ஆரம்பித்தேன்.

காலாவதியாகிப்போன காதல்.

காலாவதியாகிப்போன?

தெரியவில்லை.

ட்டு லேட்.

*

முன்னொரு காலத்தில் வெறிச்சோடிக் கிடந்த கலெக்டர்”ஸ் ஆஃபீஸ் ரோடு இப்போது ஜனரஞ்சக மாயிருக்கிறது.

வாப்பா இப்போது இல்லை.

வாப்பாவோடு நான் குடியிருந்த கெஸ்ட் ஹவுஸும் கூட இப்போது இல்லை.

அதெல்லாம் தரைமட்டமாக்கப்பட்டு ஒரு புதிய கலெக்டர்”ஸ் ஆஃபீஸ், பயங்கரமான பரப்பளவில் நிற்கிறது.

வீட்டுக்குள்ளேயிருந்து நம்ம ஆள் எட்டிப்பார்க்க மாட்டாளா என்கிற அற்ப எதிர்பார்ப்போடு அவளுடைய வீட்டுக்கு முன்னால் ரெண்டு மூணு முறை நடை பயின்றேன்.

அந்த ஏரியாவில் அவள் வசிப்பதற்கான அறிகுறியே தென்படவில்லை.

*

அப்படியே அரிஸ்டோ ஹோட்டேல் வழியாய் நடந்து, மன்னார்புரம் வந்தேன்.

வாப்பாவுடைய மின்வாரிய அலுவலகம். காலேஜிலிருந்து தினம் தினம் மதியம் சாப்பாட்டுக்கு நான் வருகிற வாப்பாவுடைய அலுவலகம்.

வாப்பாவுடைய ஆஃபீஸ் அறை படு விசாலமானது. ஒட்டினாற்போல, அதே சைஸில் ஓர் உள்ளறை, அட்டாச்டு பாத்ரூமோடு. எல்லாம் சேர்ந்து மொத்தப் பரப்பு, இப்போது சென்னையில் நான் குடியிருக்கிற ஃப்லாட்க்கு முக்கால் பங்கு தாராளமாய் வரும். அபரிதமான நீள அகலங்களைக் கொண்ட மேஜைக்குப் பின்னால், நாற்காலியில் கம்பீரமாய் உட்கார்ந்து வாப்பா ஒரு மஹா ராஜா மாதிரித் தன்னுடைய கீழதிகாரிகளின் மேல் ஆதிக்கம் புரிந்து கொண்டிருப்பதைப் பெருமிதத்தோடு பார்த்தபடி நான் உள்ளறைக்குள் புகுந்து கொள்வேன்.

ஹிலால் மாமா வீட்டிலிருந்து வந்திருக்கிற மதிய உணவு, டிஃபன் காரியருக்குள்ளேயிருந்து, கமகமவென்று என்னை வரவேற்கும்.

மன்னார் புரத்தில், வாப்பாவின் அலுவலகக் கட்டிடத்துக்குப் பக்கவாட்டில் தான் என்னுடைய ஜமால் முஹம்மது காலேஜ்.

மலரும் நினைவுகளின் மனச்சுமையோடு, நான் படித்த கல்லூரியைப் பார்வையிட்டேன். என்னுடைய கல்லூரியை மட்டுமா பார்வையிட்டேன்? என் அவளுடைய கல்லூரியையும் கூடப் போய்ப் பார்த்தேன். எத்தனையெத்தனைக் காலை நேரங்களில், பஸ் ஸ்டாப்பிலிருந்து வாப்பாவுடைய நற்ஹய்க்ஹழ்க் 10 காரில் அவளைப் பிக் அப் பண்ணிக் கொண்டு வந்து இங்கே இறக்கி விட்டு விட்டு நான் என்னுடைய கல்லூரிக்கு லேட்டாய்ப் போயிருக்கிறேன்!

காரில், எனக்கு இடது பக்கத்தில் அவள். நான் கியர் மாற்றுகிற போதெல்லாம் என்னுடைய இடதுகை அவளுடைய முழங்காலில் படுவதைப் பொருட்படுத்த வேயில்லை, அவளும் நானும்.

அவளும் நானும்?

நான் பொருட்படுத்தவில்லை, சரி. அவள்?

தெரியவில்லை.

ட்டு ட்டு லேட்.

*

என்னுடைய எழிலரசியை முதன்முதலாய் தரிசித்த மெய்ன்காட் கேட் பஸ் ஸ்டாப்பில் ஒரு ரெண்டு நிமிஷம் நின்று, மவுன அஞ்சலி செலுத்தி விட்டு, சிங்காரத் தோப்புத் தெருவுக்குள் புகுந்தேன்.

இந்தத் தெரு வழியாய்த்தான் ராக்ஸி, வெலிங்டன் என்கிற ரெண்டு த்யேட்டர்கள் இருந்த வளாகத்துக்குப் போக வேண்டும்.

அவளோடு நான் உத்தரவின்றி உள்ளே வா பார்த்த வெலிங்டன் த்யேட்டர்.

அன்றைக்குப் படம் பார்க்கிற போது, த்யேட்டர் இருட்டில், அவளுக்குப் பக்கத்தில் ஆடாமல் அலுங்காமல் உட்கார்ந்திருந்தேன், படத்தை மட்டும் பார்த்துக் கொண்டு.

இவன் நம்மைத் தொட்டுப் பார்க்க மாட்டானா என்று எதிர்பார்த்திருந்திருப்பாளோ? இருட்டுக்குள், நான் அவளைத் தீண்ட வேண்டும் என்று விரும்பியிருப்பாளோ?

தெரியவில்லை.

ட்டு ட்டு ட்டு லேட்.

*

ராக்ஸி, வெலிங்டன் த்யேட்டர்கள் இருந்த வளாகம் ஒரு பொட்டல்க் காடாய்க் கிடக்கிறது இப்போது. “த்யேட்டரெல்லாம் இடிச்சிப் பல வருஷம் ஆச்சே சார்” என்று வருத்தப்பட்டார், அந்தப் பாதையில் கடை போட்டிருந்த ஒரு பெரியவர்.

சிங்காரத் தோப்புத் தெருவின் அடுத்த கோடியில், சின்னக் கடைத் தெரு.

அவளுடைய சிநேகிதி பாக்யலக்ஷ்மியின் வீடு சின்னக்கடைத் தெருவில் இருந்தது. அந்த ரெண்டாம் நம்பர்க் கட்டிடத்தில் இப்போது ஒரு ஜவுளிக் கடை இருக்கிறது.

அவளுடைய சிநேகிதிக் குழுவோடு பாக்யலக்ஷ்மி வீட்டுக்கு நானும் போன சாயங்காலம் நினைவிலிருக்கிறது.

“ஸூரி ப்ரின்ஸஸ், ஒங்க ரெண்டு பேரையும் தனியா விடாம நாங்களும் கூடவே வந்து தொந்தரவு குடுத்துட்டிருக்கோம்” என்று தோழிப் பெண்ணொருத்தி சீண்டிப் பார்த்த போது நம்ம ஆள் நறுக்கென்று ஒரு வாக்கியம் சொன்னாளே!

என்ன நறுக் அது?

"" It s ok, dont make it a habit. "

*

அன்றைய தினம் பாக்யலக்ஷ்மி சொன்ன உணர்ச்சிகரமான வசனம் கூட ஞாபகத்திலிருக்கிறது.

பாக்யலக்ஷ்மிக்கு அண்ணன் ஒருவன் இருந்தான்.

“எனக்கு ரெண்டு பிரதர்ஸ்” என்றாள் என்னிடம்.

“ஒண்ணுதானே” என்று நான் யோசித்த போது, “இன்னொண்ணு நீங்க” என்று என்னைக் காட்டி மெய்சிலிர்க்க வைத்தாள்.

ஹ்ம்.

லோக்கல் விஸிட் எல்லாம் முடிந்தது.

அடுத்தது க்ளைமாக்ஸ்.

மாம்பழச் சாலை.

அவ்ளோ தூரம் நடக்கவா! ஸ்ரீரங்கம் பஸ்ல போயிருவோமே?

“ஐயே, வேண்டாம். காவேரிப் பாலத்ல நடக்க நல்லாயிருக்கும். வரக்ல பஸ்ல வந்துருவோம். போக்ல நடந்தே போவோமே, ப்ளீஸ்.”

நடந்தேன்.

தன்னந் தனியாய்.

மதியம் ஒண்ணரை மணி வெயிலில்.

*

மாம்பழச்சாலை மாறிப் போயிருந்தது.

எங்களுடைய படித்துறைக்குப் போகிற பாதை மறிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீரங்கம் சாலையில் கொஞ்ச தூரம் நடந்து, அடுத்த படித்துறையில் இறங்கி, மணலில் நடந்து, உட்புறமாய் நம்மப் படித்துறையை சமீபித்தேன்.

அண்ணாந்து பார்த்தால், ஆஹா, அந்த மாமரம்!

அதே மாமரம்!

அதே ராஜதோரணையோடு, அதே பிரமாண்டத் தோடு, விசாலமாய்க் கிளைகளைப் பரப்பிக் கொண்டு, என்னைப் பார்த்தபடி நின்றது.

“நா வந்துட்டேன்” என்றேன், மாமரத்தை நோக்கி.

“மறுபடியும் வருவேன்னு அன்னிக்கி சொல்லிட்டுப் போனேன்ல, அதே மாதிரித் திரும்பி வந்துட்டேம்மா.”

“ஸூரிம்மா, ஆனாக் கொஞ்சம் லேட் பண்ணிட்டேன்” என்று அடுத்த வாக்கியத்தை உச்சரித்த போது பார்வை மங்கிப்போனது.

“லேட்டானாலும் பரவாயில்ல, நீ வந்தியே, அதுவே சந்தோஷம்” என்று மாமரம் பேசுவது புரிந்தது.

“ஆனா மகனே, நீ தனியா வந்திருக்கியேய்யா?”

ஆமாம். தனியாய்த்தான் வந்திருக்கிறேன்.

அவளுங்கூட இப்போது தனியாய்த்தானிருக்கிறாள் என்று எனக்குக் கிட்டியிருந்த ஒரு தகவலை முன்வைத்து நான் எழுதி வைத்திருந்த கவிதைக் காகிதத்தை சட்டைப் பாகெட்டிலிருந்து வெளியே எடுத்துப் பிரித்து, உரக்க வாசித்தேன்.

*கண்கள்*
*முதன்முதலாய் சந்தித்துக் கொண்ட போது*
*புன்னகைத்தாய் நீ*
*தோழி*
*ஒவ்வொரு சந்திப்பின் போதும்*
*புன்னகைத்தென்னைப் புளகாங்கிதப்படுத்தினாய்*
*கண்டம்விட்டுக் கண்டம் பாய்கிற*
*ஏவுகணை போல*
*அத்தனை ஜீவராசிகளையும் மீறி நீ*
*நெரிசலான பஸ்ஸுக்குள்ளே*
*புன்னகைத்தென்னைப்*
*பரலோகங் கொண்டு சென்றாய்*
*உன் புன்னகைகளைத் திருப்பித்தர எனக்கு*
*த்ராணியில்லாமல் போனதெதனால்*
*மதமா மொழியா கலாச்சாரமா*
*அல்லது*
*அப்பாக்கிட்ட அவ்ளோ பயம்மா*
*உன்னுடைய புன்னகைகளைப்*
*பிரதிபலிக்காமற் போனதற்கின்று*
*விசனப்படுகிறேன் தோழி*
*நாம் மணந்திருக்க வேண்டும்*
*வாழ்க்கையில் இணைந்திருக்க வேண்டும்*
*வேற்றுமைகளைப் புறமுதுகிடச் செய்து நாம்*
*வெற்றிக்கொடி நாட்டியிருப்போமா*
*என்றெனக்குத் தெரியவில்லை*
*ஒன்று மட்டும் தெரிகிறது*
*அன்று*
*அந்த சுபகாரியம் நிகழ்ந்திருந்தால்*
*மை ப்ரின்ஸஸ்*
*இன்று*
*நீ*
*விதவையாகியிருக்க மாட்டாய்*

கவிதைக்குக்கீழே, அவளுடைய பெயரை எழுதி, ஒரு கமாப் போட்டு, I luv you என்று எழுதிக் கையெழுத் திட்டேன்.

பிறகு, அவளுடைய பெயருக்கு அழுத்தமாய் ஒரு முத்த்த்தம் பதித்தேன்.

கண்களில் திரண்டிருந்த கண்ணீரை சுண்டித் தெறித்து விட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

மாமரத்துக்கு பய் சொல்லிவிட்டுத்தான்.

“திரும்ப எப்ப வருவ மகனே?”

“ம்? திரும்ப எப்ப வருவேன்? தெரியாதும்மா. ஆனா வருவேன். கட்டாயம் வருவேன். இன்ஷா அல்லா..”

*

மாம்பழச் சாலை பஸ் ஸ்டாப்பில் பஸ்ஸுக்காக நின்றிருந்த போது, தாகத்துக்கு ஒரு கொக்காக்கோலா குடிக்க வேண்டும் போலிருந்தது.

குளிர்ச்சியாய்த் திரவம் உள்ளே இறங்கவும், அவளைப் பற்றிய நினைவுகள் மேலெழும்பின.

தொடர்பு முற்றிலுமாய் அற்றுப் போய் விட்டதே கடவுளே!

எப்படி இருக்கிறாள் என்று தெரியவில்லை.

எங்கே இருக்கிறாள் என்று கூடத் தெரியவில்லை.

அந்த மாமரத்துக்கு ஒரு வேளை தெரிந்திருக்குமோ?

# தாய்க்குலம்

பழைய வண்ணாரப் பேட்டை, புது வண்ணாரப் பேட்டை, பழைய தண்டையார்ப்பேட்டை, புதுத் தண்டையார்ப்பேட்டை, எல்லாப் பேட்டைகளின் இண்டு இடுக்குகளிலெல்லாம் புகுந்து புறப்பட்ட பின்னாலும் அந்தப் பெண் கண்ணில் படவில்லை.

நல்ல வேளை ஞாயிற்றுக்கிழமை. வார நாட்களென்றால் இந்தப் பேட்டைகளிலெல்லாம் உள்ளே புகுந்தால் வெளியே வரவே முடியாது.

“டாளிங், வீட்டுக்குப் போவோமா?” என்று விண்ணப்பம் வைத்தேன்.

“நோ” என்று ஒரே வார்த்தையில் நிராகரித்தாள்.

“அந்தப் பொண்ணைக் கண்டு பிடிக்காம இன்னிக்கி ஆத்துக்குப் போறதாயில்லை. லஞ்ச் பாக் பண்ணிக் கொணாந்துட்டேன். மத்யானம் வரக்யும் தேடுவோம். அப்பறம் லஞ்ச் சாப்ட்டுட்டு, காருக்குள்ளயே கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிட்டுத் திரும்பவும் தேடுவோம்.”

தன்னுடைய தேடுதலில் ரொம்பத் தீவிரமாயிருந்தாள்.

இந்தத் தேடுதல் பற்றிய நச்சரிப்பு ஆரம்பித்து மூணு வாரம் ஆச்சு.

தினசரி ஒன்றில் வந்த அந்தப் பெண்ணுடைய ஃபோட்டோவை இவளிடம் காட்டின அன்று ஆரம்பித்த நச்சரிப்பு.

ஃபோட்டோவிலிருந்த பெண், சிக்கனமாய் உடையணிந்த சினிமா நடிகை இல்லை.

ஆரெம்கேவி பட்டுப்புடவைக்குப் போஸ் கொடுக்கிற விளம்பர மாடலும் இல்லை.

உழைத்து ஓடாய்ப் போவதற்கென்றே பிறவியெடுத் திருக்கிற ஒரு பெண்.

ஆண் வர்க்கத்துக்கென்றே படைக்கப்பட்டிருக்கிற ட்ரை சைக்கிள் ஒன்றை, ஒற்றைக் கையால் ஓட்டிக் கொண்டு போகிற பெண்.

மீன் பாடி வண்டி என்று மெட்ராஸில் மரியாதை யாய்க் குறிப்பிடப்படுகிற ட்ரை சைக்கிளை அந்தப் பெண் ஒற்றைக் கையால் ஓட்டிக் கொண்டு போவது சாகசம் புரிவதற்கோ, சர்க்கஸ் பண்ணுவதற்கோ அல்ல.

அவளுடைய மற்றக்கையில் ஒரு பச்சிளங் குழந்தை.

வலது கையில் குழந்தையை ஏந்தி, மார்போடணைத் தபடி, இடது கையால் ஹாண்டில் பாரைப் பற்றிக் கொண்டு, ட்ரை சைக்கிளின் பெடலை மிதித்தபடி வடசென்னை நெரிசலில் வயிற்றுப் பிழைப்பு தேடிப் பயணப்பட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண்ணின் அவலத்தைக் கேமராவில் கைப்பற்றி, அந்தப் புகைப்படக் கலைஞர் தன்னுடைய பத்திரிகையில் பிரசுரித்ததைப் பார்த்த எனக்கே மனசு பதைபதைத்தது என்றால், நம்ம ஆளுடைய கண்கள் பனித்துப் போனதில் ஆச்சர்ய மொன்றுமில்லை.

“கார், கரன்ஸி, பங்களா, பட்டுப்புடவையெல்லாம் பகவான் நமக்குக் குடுத்திருக்கிறது நீங்களும் நானும் மட்டும் அனுபவிக்கிறதுக்கான்னா?” என்று ஒரு கேள்வியை எதுகை மோனையில் என் முன்னால் வைத்தாள்.

“கார், கரன்ஸி, பங்களா மூணும் நீயும் நானும் சேந்து அனுபவிக்க. பட்டுப்புடவைகள் மட்டும் ஒனக்கே ஒனக்கு மட்டும் தான். அதுல எனக்கு ஷேர் கெடையாது” என்று நான் சிரிக்கப் பார்த்தது அவளுக்கு ஒத்துக் கொள்ள வில்லை.

“சிரிக்காதேங்கோ, நா ஸீரியஸ்ஸுப் பேசிண்டிருக்கச்ச நீங்க சிரிச்சிண்டிருக்கேளே” என்று சிணுங்கினாள்.

“இருக்கப்பட்டவா, தங்கட்ட இருக்கறதை இல்லாதவாளோட ஷேர் பண்ணிக்கிறது தானேன்னா ஞாயம்?”

“ஆஹா, ஆஹா! அதுவேதான் ஞாயம்” என்று அவளுடைய நியாயத்தை நான் ஆமோதித்தேன்.

“அப்பக் கெளம்புங்க.”

“எங்க?”

“நார்த் மெட்ராஸ்க்கு.”

“எதுக்கு?”

“ஷேர் பண்ணிக்கத்தான்.”

“என்னத்த ஷேர் பண்ணிக்கப் போற, யாரோட ஷேர் பண்ணிக்கப் போற?”

“அந்த ட்ரை சைக்கிள்க்காரப் பொண்ணோட தான்.”

“இப்பவேவா?”

“இப்பவே.”

“இரு இரு. நா ஃபாக்டரிக்கிப் போக வேண்டாமா? என்னோட வேலயப் பாக்க வேண்டாமா? இன்னிக்கி ஸேல்ஸ் டாக்ஸ் ஹியரிங் வேற இருக்கு. நா ஃப்ரீயா இருக்கும் போது போவோம். ஒரு ஸண்டே போவோம்.”

“நீங்க எப்ப ஃப்ரீ ஆகறது, நாம எப்பப் போறதுன்னா. அது வரக்யும் அந்தக் கொழந்தய ஒரு கைல சொமந்துண்டு அந்தப் பொண்ணு மெட்ராஸச் சுத்திச் சுத்தி

வந்துண்டிருக் கணுமா? இந்தக் கொழந்தயப் பாருங்கோன்னா, எவ்ளோ அழகா இருக்கு பாருங்கோன்னா!”

“உயர்ந்த மனிதன் படத்ல வி.கே.ராமசாமி சொல்ற டயலாக் தான் எனக்கு ஞாபகம் வருது.”

“அதென்ன டயலாக்காம்?”

“கழுத கூட குட்டியில அழகாத்தான் இருக்கும்னு சொல்லுவார் வி.கே.ஆர்.”

“போங்கோன்னா, நம்மக் கொழந்தயக் கழுதைன் னுல்லாம் சொல்லாதேள்.”

“எது, எது? நம்மக் கொழந்தயா?”

“ஆமான்னா, நம்மக் கொழந்த தான். அந்தக் கொழந்தய நாம அவளோட ஷேர் பண்ணிக்கலாம்னா, ப்ளீஸ்ன்னா!”

“ஐயோ, அபசாரம் அபசாரம்.”.

“கிண்டல்லாம் பண்ணாதேங்கோ. அப்டிப் பாத்தா ஒங்களை நா லவ் பண்ணிக் கட்டிண்டது கூட அபசாரம் தான். ஒங்கமேலக் கண்டதும் காதல் ஆச்சு. ஆனா இந்தக் கொழந்தயக் காணாமலேயே ஒரு பிரியம் ஏற்பட்டுப் போச்சுன்னா. நீங்க ஓக்கே பண்ணிடுவேள்னு தெரியும். என்னை எப்பக் கூட்டிண்டு போறேள்னு சொல்லுங் கோன்னா, லேட் பண்ணிடாதேங்கோ.”

*

ஞாயிற்றுக்கிழமை கிளம்பியாச்சு. வடசென்னையைச் சுற்றிச் சற்றி வந்து ஓய்ந்து போயாச்சு. காரை ஓரங்கட்டி விட்டு, “லஞ்ச் சாப்புடுவோமா” என்று பசிக்குரல் கொடுத்தேன்.

“அதுக்குள்ளேயா” என்று ஆட்சேபித்தாள்.

“மணி ரெண்டு தானேன்னா ஆறது!”

“அது சரி” என்று நான் ஸீட்டில் சரிந்தேன். ஸ்ட்டீரிங்கைக் கைவிட்டு விட்டு.

அடுத்த விநாடி இவள் பரபரப்பானாள்.

“ஏன்னா, அதோ பாருங்கோன்னா. பாருங்கோன்னா, அவொ வறா பாருங்கோ. அதே ட்ரை சைக்கிள், அதே அவொ, அதே கொழந்த. எறங்குங்கோன்னா. அவள ஸ்டாப் பண்ணுங்கோ. அவள நம்மக் காருக்குக் கூட்டிண்டு வாங்கோ. அந்தக் கொழந்தயத் தூக்கிண்டு வாங்கோ. நம்மக் கொழந்தயத் தூக்கிண்டு வாங்கோ.”

பேப்பரில் புகைப்படமாய் வந்த அதே பெண், இடது கையால் ஹாண்டில் பாரைப் பற்றியபடி, வலது கையில் குழந்தையை அணைத்தபடி ட்ரை சைக்கிளில் வந்து கொண்டிருந்தாள். அவசரமாய்க் காரிலிருந்து இறங்கி, சாலையைக் கடந்து போய் அவளை வழி மறித்தேன்.

“இன்னா சாமி, சரக்கு ஏத்தணுமா?” என்று பிரேக் பிடித்தாள்.

“அதில்லம்மா, என்னோட ஒய்ஃப் அந்தக் கார்ல ஒக்காந்திருக்காம்மா. அவ ஒன்னையும் கொழந்தயயும் பாக்கணும்னு பிரியப்படறா” என்று நான் முதல் காயை நகர்த்தினேன்.

“இந்தா சாமி, ஒத்து சாமி” என்று அவள் கோபித்தாள்.

“காத்தாலயிருந்து போணியாகம நா சுத்திக்கினு கீறேன் இந்தப் பச்ச மண்ணயும் சொமந்துக்கினு, நீ வேற பேஜார்ப் பண்ணாத. ஒத்து.”

“ப்ளீஸ்ம்மா ப்ளீஸ்ம்மா” என்று நான் ட்ரை சைக்கிளின் ஹாண்டில் பாரைப் பற்றினேன்.

“கோச்சுக்காத ஸிஸ்டர். நாங்க கூடக் காலங் காத்தால அண்ணா நகர்லயிருந்து கௌம்பி நார்த் மெட்ராஸ்க்கு வந்து ஒன்னத் தேடி ரோடு ரோடா அலஞ்சிக் கிட்டிருக்கோம். நீ சரக்கு ஏத்தி என்ன சம்பாதிப்பியோ, அதவிட அதிகமா ஒனக்குத் தர்றேன். எறங்கும்மா ப்ளீஸ்”

“அது சரி. இன்னிக்கி நீ தருவ, நாளக்கி யாரு தருவா? இந்தப் பேப்பர்க்காரன் சொம்மாக் கெடக்காம எம்போட்டாவப் புடிச்சிப் போட்டாலும் போட்டான், இதே ரோதனயாப் போச்சு. ஒன்ன மாதிரி பத்துப் பேர் டெய்லி இந்த மினீம்மாவ பேஜார்ப் பண்றான் சாமி.”

“எல்லார் போலயும் நாங்க இல்ல முனியம்மா, ப்ளீஸ் கொஞ்சம் எறங்கும்மா.”

“கொயந்தய வச்சிக்கினு நா எறங்க ஏற எல்லாம் முடியாது. அந்தம்மாவக் கார்லயிருந்து எறங்கி இந்தாண்ட வரச் சொல்லு.”

“அவங்களாலயும் எறங்கவும் ஏறவும் முடியாதும்மா.”

“ஆமா ஆமா, கார்ல குந்திக்கினு வர்ற பணக்காரவுங்களுக்கு கார வுட்டு எறங்க முடியாது. ஆள வுடு நா கௌம்பறேன்.”

“ஸிஸ்டர் ஸிஸ்டர், ஸ்டாப் ஸ்டாப்.”

“அட இன்னா சாமி, ஷிஷ்டர் ஷிஷ்டர்னு என்ன பீலிங்ல வுடறியே. மேட்டர் இன்னா, சொல்லு”.

“ஒன்ட்ட சொல்லித்தானே ஆகணும் ஸிஸ்டர், நம்ம ஒய்ஃப் ஒரு போலியோ விக்ட்டிம்.”

“இஷ்டாப் இஷ்டாப். அம்மாம் பெரிய இங்கிலீப்ஸல்லாம் நமக்குத் தெரியாது. பரவாயில்ல நீ தமிய்லயே சொல்லு.”

“அது.... வந்து..... அவங்களுக்கு சூம்பிப் போன கால். நடக்க முடியாதும்மா.”

“மெய்யாலுமா சாமி!”

சுதியிறங்கி முனியம்மா சுமுக நிலைக்கு வந்தாள்.

"இத்த அப்பவே சொல்றத்துக்கென்னா சாமி, நா ஏதும் ஏடா கூடமாப் பேசியிருந்தா மனசுல வச்சிக்காத சாமி. இந்தா இந்தக் கொயந்தயக் கொஞ்சம் புடி."

வறுமையின் அறிகுறியே தெரியாதபடிக்கு, வெயிலோ பனியோ ஊடுருவ முடியாத பாதுகாப்பான, பகட்டான ஆடையைத் தலை முதல் பாதம் முடிய உடுத்தி விட்டிருந் தாள் அந்தக் குழந்தைக்கு.

குழந்தையை வாரியெடுத்தபடி நான் முன்னே நடக்க, முனியம்மா பின் தொடர்ந்தாள். காரின் இடது பக்க முன் கதவை நான் திறந்தது தான் தாமதம், ஸீட்டில் ஒரு எம்பு எம்பி, என்னிடமிருந்து குழந்தையைப் பறித்துக் கொண்டு, மார்போடு இறுக்கியபடி முத்தங்களை வாரி வாரி வாரி வழங்கினாள் நம்ம ஆள்.

அந்நிய அணைப்பினால் கலவரமடைந்து குழந்தை அழ ஆரம்பித்த போது, அந்த அழுகையைத் தாங்கமாட்டாமலும், அதே சமயம் குழந்தையைத் திரும்பக் கைப்பற்றிக் கொள்ள மனசில்லாமலும் முனியம்மா நெளிந்து கொண்டு நின்றாள்.

"காருக்குள்ள ஒக்காரு முனியம்மா" என்று பின்கதவைத் திறந்தேன் அவளுக்காக. ரொம்ப சங்கோஜத்தோடும் கொஞ்சம் சந்தோஷத்தோடும் பின் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டவள், "யப்பா, இன்னா ஜில்ல்னு கீது" என்று உடல் சிலிர்த்தாள்.

கொஞ்சங் கொஞ்சமாய்க் குழந்தை சமாதான மடைந்ததும் அந்த ரெண்டு பெண்களுக்கிடையே உரையாடல் ஆரம்பமானது.

"ஒம் பேரு முனியம்மாவாம்மா?"

"இல்லம்மா. மினீம்மா."

"ரெண்டும் ஒண்ணுதான். முனியம்மவா இருந்தவ தான், ட்ரை சைக்கிள் மிதிச்சி மிதிச்சி மெலிஞ்சி ஓடாப் போய் "மினி"ம்மா ஆய்ட்டாளாம்" என்று நான் ஹாஸ்யம் பண்ணினது அங்கே எடுபடவில்லை.

"பொம்மனாட்டிங்க பேசிண்டிருக்கச்ச சித்த சும்மாயிருங்கோ. முனியம்மா அப்பறம் வெக்கப்படப் போறா."

மினீம்மா என்கிற முனியம்மா வெட்கப்பட்டால் எப்படியிருப்பாள் என்கிற கற்பனையில் லயித்தபடியே நான் ஜகா வாங்கிக் கொண்டேன்.

உரையாடல் தொடர்ந்தது.

"ஒனக்கு ஹஸ்பண்ட் இருக்காரில்லியா முனியம்மா?"

"இன்னாம்மா?"

"ஒன்னோட ஆத்துக்காரர். ஒம் புருஷன்."

"ம். இருக்கு. இருக்கு."

“அவர் வேலக்கிப் போறதில்லியா? கைக் கொழந்தயோட நீ இப்டிக் கெடந்து கஷ்டப்படறியே முனியம்மா.”

“அது இந்த மினீம்மா தலையெயுத்து. எம் புருசனுக்கு ஒரு வேல வெட்டியும் கெடையாது. அது வூட்லதான் கெடக்கும்.”

“வூட்ல கெடக்கறது சரி, சும்மா இருக்கற மனுஷன் ஆத்ல இருந்து கொழந்தயப் பாத்துக்கப்படாதோ! நீ கொழந்தயையும் தூக்கிண்டு தொழிலுக்குப் போய் ஸ்ட்ரெய்ன் பண்ணிக்கிறியே முனியம்மா!”

“நீ ஒரு பக்கம்மா. ராத்திரி பகல் என்னேரமும் அதுக்குக் குடிதான். இப்பக் கூட தண்ணயடிச்சிட்டுத்தான் வூட்ல படுத்துக் கெடக்கும். கொயந்தய அது கைல வுட்டுப்புட்டு நா போனா டேஞ்ஜர் தான். அது கொயந்தய யாராவது பிச்சக்காரனண்ட வித்தாலும் வித்துப்புடும். அதுக்கு வேண்டியது தண்ணியடிக்கக் காசு.”

“அட அநியாயமே, இப்டிக்கூட ஒரு ஆத்ல ஒரு ஆம்படையான் இருப்பாளோ?”

“அந்த அநியாயத்த ஏம்மா கேட்டுக்கற. நா தண்டயார்ப் பேட்டயில சரக்கு ஏத்திக்கினு பாரிசு, காசிச் செட்டித் தெரு, ஷென்ட்ரல் டேசன்னு அலஞ்சிட்டு வரணும், இந்தக் கொயந்தயயும் தூக்கிக்கினு. இது புல்லா ஏத்திக்கினு மல்லாந்து கெடக்கும் வூட்ல. லோலோன்னு அலஞ்சி நா சம்பாரிச்சிக்கினு வந்து அதுக்கு ஆக்கிக் கொட்டணும். அதுவும் சொம்மா இல்ல. ரெண்டு வேளயும் அதுக்குக் கவிச்சி வேணும். கவிச்சி வாசம் வந்தாத்தான் உள்ளார சோறு எறங்கும்”.

“கவிச்சியா? அப்டீன்னா?”

“அதான், ஆடு, மாடு, கோயி, மீனு, எறா, நண்டு....”

“ஐயே, நண்டா? அந்த எழவையெல்லாமா மனுஷாள் திம்பா?”.

“அந்த டேஷ்ட் ஒனக்கின்னா தெரியப் போவுது. சரி அத்த வுடும்மா. நா என்னோட சோகக் கதையவே பேசிக்கினு கீறேம் பாரு. இவ்ளோ அயகாக் கீறியே நீ, சாமி சொல்லிச்சி ஒனக்கு காலு வெளங்காதுன்னு. நெசம்மாவா?”

“நெஜந்தா முனியம்மா. நா கிராமத்ல பொறந்து வளந்தவ. நா கொழந்தையா இருக்கச்ச இப்ப இருக்கிற மாதிரி போலியோ டிராப்ஸ் போடறதெல்லாம் கெடையாது. இப்பத்தான் ரோட்டரி க்ளப்லயிருந்து எல்லாக் கொழந்தைங்களுக்கும் ஃப்ரீயா வருஷத்துக்கு ரெண்டு வாட்டி போட்டு விடறா. அடடே, ஆமா முனியம்மா, இன்னிக்கி ஃபிப்ரவரி ஒண்ணு, போலியோ சொட்டு மருந்து போடற நாள். நம்மக் கொழந்தக்கி சொட்டு மருந்து குடுக்கக் கொண்டு போனியோ?”

“நீ ஒண்ணும்மா, காத்தாலயிருந்து ஒரு ரூவாக் காசுக்குத் துப்பு இல்லியேன்னு டென்சன்ல கீறேன். சொட்டாவது மருந்தாவது!”

“அடி அசடே, டைம்ல சொட்டு மருந்து குடுக் கலைன்னா நம்ம கொழந்தயும் என்னை மாதிரிக் கால் சூம்பிப் போகும். நாலு மணி வரக்யும் தான் பூத் தொறந்திருக்கும். இவர் கூட ரோட்டரி க்ளப்ல இருக்கார். ஏன்னா, ஒங்க பூத் கூட இந்த

ஏரியால தானே இருக்குன்னு சொன்னேள், மணி நாலாகப் போறது. வண்டிய சீக்கிரமா ஒங்கப் போலியோ பூத்துக்கு விடுங்கோன்னா."

விட்டேன்.

குழந்தையைத் தான் மடியில் இருத்திய படியே சொட்டு மருந்து தர வேண்டும் என்று இவள் பிரியப்பட்டதால், நர்ஸ் ஒருத்தியைக் காருக்கே வரவழைத்து மருந்தைச் சொட்ட ஏற்பாடு செய்யப்பட்டது.

பிறகு, ட்ரை சைக்கிளைப் பார்க் செய்திருந்த இடத்துக்கு மறுபடி வந்ததும், முனியம்மா தன்னுடைய வண்டியிலிருந்த பால் புட்டியை எடுத்து வந்தாள்.

குழந்தைக்குப் பால் புகட்டியவாறே, "ஆமா, நீ லஞ்ச் சாப்ட்டியா முனியம்மா?" என்று இவள் கேட்டதற்கு, முனியம்மா சலித்துக் கொண்டாள்.

"நா என்னத்தத் துண்றதும்மா. இன்னிக்கி சம்பாத்யமும் இல்ல. அப்டி சம்பாரிச்சாலும் அந்தக் கஸ்மாலத்துக்கு வாய்க்கி ருசியா ஆக்கிப் போடத்தான் காணும்."

"ஐயோ, என்ன முனியம்மா நீ, தாலிகட்ன ஹஸ்பண்டக் கெட்ட வார்த்தையெல்லாம் சொல்லித் திட்ற!"

"தாலி மட்டும் கட்டிக்கினா போதுமாம்மா!"

"அந்தத் தாலி தாண்டி முனியம்மா ஒரு பொண்ணுக்கு பலம். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்னு நீ கேள்விப்பட்டதில்லியா?"

இந்த நேரத்தில் இடையில் புகுந்தேன் நான்.

"ஆமா ஆமா. கள்ளானாலும் கணவன், ஃபுல்லா னாலும் புருஷன்."

"நீங்க சித்த சும்மாயிருங்கோன்னா" என்று என்னை நறுக்கி விட்டு விட்டு முனியம்மாவிடம் சமாதானம் சொல்லத் தலைப்பட்டாள்.

"முனியம்மா, நா இவரண்ட இப்டி நறுக்னு பேசறத வச்சி நா இவர் மேல கோவிச்சிக்கிறேன்னு நெனச்சிராதேடி. ஒரு தாய் தன்னோட கொழந்தயக் கண்டிக்கிற மாதிரி அப்பப்ப இவரக் கண்டிப்பேன். மத்தபடி இவர் கிழிச்சக் கோட்டை நா தாண்டவே மாட்டேன் முனியம்மா. கடவுளுக்கு அடுத்த படியா ஹஸ்பண்ட் தாண்டி நேக்கு எல்லாம். நீயும் அப்டியே தான் இருக்கணும்னு நா ஆசைப்படறேண்டி முனியம்மா."

"எனக்கு மட்டும் அப்டி ஆச இல்லியாம்மா! குடிப் பயக்கம் மட்டும் இல்லன்னா இந்த மனுசன் நல்லாத்தான் இருப்பார். குடிய நிறுத்த ஒரு வயி இருக்கான்னு தெரிலியேம்மா."

"வழி இருக்கு முனியம்மா, வழி இருக்கு. நா சொல்ற மாதிரி நீ செஞ்சா வழி இருக்கு. நா சொல்றத சித்த கேக்கிறியா?"

"சொல்லும்மா.".

“அதுக்கு முந்தி நீ லஞ்ச் சாப்புடு முனியம்மா. இந்தா, எனக்கும் இவருக்கும்னு பாக் பண்ணிட்டு வந்தேன். எனக்குப் பசியில்ல இவருக்கும் பசியிருக்காது. ஏன்னா, ஒங்களுக்குப் பசிக்கிறதா?”

“பசியா? அது மாயமா மறஞ்சே போச்சி.”

“பாத்தியா முனியம்மா, எனக்கும் இவருக்கும் ஒற்றுமைன்னா அப்டி ஒரு ஒற்றுமை. அப்டித் தாண்டி நீயும் ஒன்னோட ஹஸ்பண்டும் இருக்கணும். இந்தா சாப்புடு.”

“குடும்மா நா வூட்ல போயி துண்ணுக்கறேன். நீ என்னமோ சொல்ல வந்தியே அத்தச் சொல்லு.”

“முனியம்மா, எங்களுக்குக் கல்யாணமாகிப் பத்து வருஷம் ஆச்சு. இன்னும் என் வயித்ல புழு பூச்சி ஒண்ணும் வக்யல. அந்த பாக்யம் நேக்குக் கெடையாதுன்னு டாக்டர்ஸ் எல்லாம் சொல்றா. கார், பங்களா, சொத்து எல்லாம் இருக்கு. ஆனாலும் கொஞ்சறதுக்கு ஒரு கொழந்த இல்லியே முனியம்மா. ஒன்னோட கொழந்தய ஃபோட்டோல பாத்தப்பவே அதுமேல ஒரு பாசம் ஏற்பட்டுப் போச்சு. இப்ப நேர்ல பாத்தப்பறம் மனசு கெடந்து அடிச்சிக்கிறதுடி. இப்ப நா என்ன சொல்றேன்னா முனியம்மா....”

“சொல்லும்மா.”

“நீ இந்த ட்ரை சைக்கிள்ள அலையற வேலய விட்டுடு.”

“ஐயே, அப்பால?”

“நா சொல்றதக் கேளு.”

“சொல்லு.”

“எங்காத்த ஒட்டி ஒரு அவுட்ஹவுஸ் இருக்கு. அதுல நீ குடும்பத்தோட குடி வந்துடு. குடிய மறக்கறதுக்கு ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்ஸ் இருக்கா.அவாட்ட காட்டி ஒன்னோட ஹஸ்பண்டுக்கு ட்ரீட்மென்ட் குடுப்போம். ஆறே மாசத்ல ஒன்னோட ஹஸ்பண்ட் புது மனுஷன் ஆயிருவார். எங்கக் கம்பெனிலயே அவருக்கு ஒரு வேல போட்டுக் குடுத்துரலாம். நீ வேல ஏதும் செய்ய வேண்டாம். அவுட் ஹவுஸ்ல ராணியாட்டாம் இருக்கலாம். இந்தக் குட்டிப் பையன் டே டைம்ல எங்காத்ல இருப்பான் நைட்ல அவுட் ஹவுஸ்க்கு வந்துருவான். இவனுக்காக அவுட் ஹவுஸ்ல ஒரு ரூமை ஏஸி பண்ணிருவோம்.”

“கேக்கறதுக்கு நல்லாத்தான் கீதும்மா....”.

“நடைமுறைலயும் நன்னாத்தான் இருக்கும் முனியம்மா. நீ மட்டும் சரின்னு ஒரு வார்த்த சொல்லு முனியம்மா.”

“எனக்கும் ஆசயாத்தான் கீதும்மா, ஆனாலும்....”

“ஆனாலும்?”

“ஒரு வார்த்த....”

“ஒரு வார்த்த?”

“என்னோட ஹஸ்பண்டு கைல கேட்டுக்கினு சொல்றேம்மா.”

வடக்கு வாசல், **ஜூலை 2010.**

# முட்டை

பாளைங்கோட்டைக் கான்வென்ட்டில் நானும் என்னுடைய சகோதரிகளும் படித்துக் கொண்டிருந்த கால் நூற்றாண்டுக்கு முந்தின காலத்தில், திருநெல்வேலி ஜில்லாவிலேயே யூனிஃபாம் அமுலில் இருந்த ஒரே பள்ளிக்கூடம் எங்கக் கான்வென்ட் தான். அன்றைய திருநெல்வேலி ஜில்லா என்பது இன்றைய தூத்துக்குடி, கன்யாகுமாரி மாவட்டங்களையும் உள்ளடக்கிய விசாலமான நிலப்பரப்பு. கிட்டத்தட்டக் கால்வாசித் தமிழ்நாடு.

பச்சை வெள்ளை சீருடையில், கோனார் ஒற்றை மாட்டு வண்டியில், கோஸ் பெட்டியில் உட்கார்ந்து பள்ளிக்குப் போகிற போது, துணிப் பைக்கட்டையும் தூக்குச் சட்டியையும் சுமந்து கொண்டு, மஃப்டியில் போகிற மற்ற லோக்கல்ப் பள்ளிக்கூடப் பிள்ளைகளைப் பார்க்க இளக்காரமாயிருக்கும்.

யூனிஃபாம் எல்லாம் சூழ்ச்சியாய் இருந்தாலும், அந்தக் காலத்தில் பாளையங்கோட்டைக் கான்வென்ட்டில் இங்லீஷ் மீடியம் கிடையாது. மூணாங் கிளாசில் தான் ஏ பி ஸி டி யே சொல்லித் தருவார்கள். அதிலும் ஒரு ஆறுதல் என்னவென்றால், மற்ற சாதாரணப் பள்ளிக்கூடங்களில் ஆங்கில அரிச்சுவடிக்கே ஆறாங்கிளாஸ் வரைக் காத்திருக்க வேண்டும்.

திருவனந்தபுரம் அத்தையின் குட்டிக் குட்டிப் பெண்கள் கால் வருஷ அரை வருஷ விடுமுறைகளில் பாளையங்கோட்டைக்குப் படையெடுக்கிற நாட்களில், எங்கள் மேலே இரக்கமேயில்லாமல் இங்லீஷில் போட்டுத் தாக்குகிறபோது, எங்களுடைய கான்வென்ட் மமதை காணாமற் போகும்.

கோழி முட்டை என்கிற கோள வடிவமான வஸ்து, ஓட்டுக்குள்ளேயிருந்து வெளியேறி, பக்குவப்படுத்தப்பட்டுப் பரிமாறப்படுகிற போது, அதனுடைய ஒவ்வொரு அவதாரத்துக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு என்பது போன்ற இன்றியமையாத தகவல்களெல்லாம் அந்தத் திருவனந்தபுரத்துப் பெண்குட்டிகளின் ஆங்கில உரையாடல்களிலிருந்து நாங்கள் கிரகித்துக் கொண்டது.

வெங்காயம் நறுக்கிப் போட்டுத் தோசை மாதிரி வார்த்தால் ஆம்லெட்டாம்.

அதையே கிண்டிவிட்டுப் பொறியலாக்கினால் ஸ்க்ராம்பிள்.

வெங்காயமில்லாத வெறும் முட்டைக் கலக்கல் ரம்பிள் டம்பிள்.

கலக்காமல் கொள்ளாமல் அப்படியே தோசைக் கல்லில் பொறித்தெடுத்து பெப்பர் சால்ட் தூவிப் பரிமாறினால், அது புல்ஸ் ஐ.

இம்மாதிரியான முட்டை ஐட்டங்களோடு, எனக்கே எனக்கான பிரத்தியேக முட்டை ஸ்பெஷல் ஒன்றும் இருந்தது. மிலிட்டரியிலிருந்த எங்கப் பெரிய மாமா சொல்லிக் கொடுத்த வித்தை.

முட்டையின் குவிந்த ஓட்டுப் பகுதியில், குண்டூசி அல்லது ஊக்கு கொண்டு மிக நுண்ணிய துளையொன்று போட்டு, அதில் வாய்வைத்து உறிஞ்சியிழுப்பேன். வெள்ளைக் கரு முதலில் வாய்க்குள்ளே வரும். தொடர்ந்து, மஞ்சள் கரு வருகிறபோது, நம்ம நாக்கு சும்மாப் பரமானந்தம் கொள்ளும். சோலி முடிந்ததும், அந்தக் காலி ஓட்டைப் பூப்போல

வைத்து விடுவேன், மற்ற முழு முட்டைகளோடு. கோழி முட்டை அல்ல, அது போலி முட்டை என்று யாராலுமே கண்டுபிடிக்க முடியாது. பாட்டி, அம்மா, அக்கா எல்லாருமே ஏராளமாய் ஏமாந்திருக்கிறார்கள்.

இந்த முட்டை உறிஞ்சல் என்னுடைய ஏகபோக உரிமையென்றாலுங்கூட, புல்ஸ் ஐ என்பது தான் நமக்குப் பிரியமான ஐட்டம். பிற்காலத்தில் சென்னைக் கையேந்தி பவன்களில், ஆப்பாயில் என்று அறியப்பட்டுப் பிரபலமடைந்த உணவு வகை.

ஹாஃப் பாயில்டு என்பதன் தமிழ் மொழி பெயர்ப்புத்தான் ஆப்பாயில் என்பது என்று புரிபட எனக்குக் கனகாலம் ஆச்சு.

அம்மா புல்ஸ் ஐ போட்டார்களென்றால் வெள்ளைப்பரப்பின் மையத்தில் மஞ்சள் கரு, மிக மெல்லிய ஆடையினால் போர்த்தப்பட்டுப் புடைத்துக் கொண்டு நிற்கும். விரலால் மிருதுவாய் நீவினால் ஆடை நசிந்து மஞ்சள் வழியும். அதில் விரலை முக்கிச் சூப்பினால், ஆஹா, பரவசப்பட்டு நாக்கு ஒரு முறை பரலோகம் போய்த் திரும்பும்.

கோழி முட்டை ஒன்றின் விலை அப்போது ஒரணா.

அதாவது ஆறு நயாப் பைசா.

ஆனாலும் கோழி முட்டை அந்தக் காலத்தில் கடைகளில் காணக் கிடைக்காத அரிய வஸ்து. கூடையில் வைத்துக் கூவிக் கொண்டே தெருவழியாய் வருகிறவர்களை வழிமறித்து வாங்கிக் கொண்டால் தான் உண்டு.

காசு கொடுத்தவுடன் முட்டைகள் கைமாறி விடுவதில்லை.

முட்டைகளெல்லாம் செக் அப் செய்து தான் வாங்கப்படும்.

ஒரு முக்கால் பாத்திரத் தண்ணீரில் முட்டைகள் ஒவ்வொன்றாய் மெல்ல வைக்கப்படும். தண்ணீரில் முட்டை முங்கி விட்டால் நல்ல முட்டை. நீரில் மிதந்தால் கூமுட்டை.

ஃப்ரிட்ஜ் என்கிற ஐஸ் அலமாரி அரண்மனைகளில் மட்டுமே கொலுவிருந்த அந்தக் காலத்தில் முட்டைகளைப் பரிசோதித்து வாங்கிக் கொள்வது அவசியமாயிருந்தது.

எங்களுடைய பரம்பரை வீடு, அரண்மனை இல்லையென்றாலும் அட்டகாசமான பரப்பளவு. வீட்டுக் கட்டிடத்தையடுத்து அசத்தலான ஒரு தோட்டம் வேறே.

தென்னை, பனை, பூவரசு, புளிய மரம் போன்ற ஜனரஞ்சகமான மரங்களோடு, சீத்தாப்பழம், மாதுளை, அரை நெல்லிக்காய், நார்த்தங்காய், ஆமணக்கு போன்ற அபூர்வமான தாவர இனங்களும் எங்கள் தோட்டத்தில் உண்டு.

தவிர, பாட்டியின் பராமரிப்பில் ஒரு மினி கோழிப் பண்ணையும் இருந்தது.

அந்தக் கோழிகள் இடுகிற முட்டைகள் எங்கள் குடும்பத் தேவைகளுக்குப் போதாமல் போனதற்குக் காரணங்கள் ரெண்டு.

ஒன்று, ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேறு விசேஷ நாட்களிலும் முட்டைக் கோழிகள் முழுசாகவே வயிற்றுக்குள் போய்விடும்.

ரெண்டு, அக்கம் பக்கத்திலிருந்து வந்து கேட்ப வர்களுக்கு சகாய விலைக்கு விற்கப்பட்டுக் கோழிகள் பாட்டியின் பாக்கெட் மனியாய் மாறிவிடும்.

பாக்கெட் மனி, பாட்டிக்கு மிகவும் அவசியமா யிருந்தது.

அருகிலிருந்த அசோக் டாக்கீஸில் பாட்டி மாசம்

ஒரு படம் பார்த்தாக வேண்டும். வெள்ளி, சனி சாயங்காலங்களென்றால், குழந்தைகள் நாங்களும் பாட்டியோடு ஒட்டிக் கொள்வோம்.

தரை டிக்கட் நாலணாதான். மாடியில், சோஃபாவில் உட்கார்ந்து படம் பார்க்கிற அளவுக்குத் தகுதியிருந்தாலும், நட்சத்திரங்களை அண்மையில் பார்க்க வேண்டும் என்பதற்காகப் பாட்டி எப்போதுமே சிமெண்ட் பெஞ்ச் போட்ட தரை டிக்கட் தான்.

சினிமாவுக்குப் பெண்கள் போவது இஸ்லாத்தில் விரும்பத்தகுந்தது அல்ல என்பதால், பாட்டி, இஸ்லாமியக் கொள்கைகளுக்குக் குந்தகமில்லாமல், பர்தா போர்த்திக் கொண்டு தான் த்யேட்டருக்குக் கிளம்புவார்கள்.

அதுவும் போக, சினிமாவுக்குப் போகிற பாவச் செயலை ஈடு செய்ய, ரெண்டு மூணு மாசத்துக்கொரு தடவை பாட்டி தர்காவுக்குப் போய் வருவார்கள்.

பாளையங்கோட்டையின் தெற்கு எல்லையில், சரோஜினி பார்க்கை ஒட்டியிருக்கிற தர்கா. பாட்டி தலைமையில் நாங்களும் ஜாலியாய் தர்காவுக்குப் போய் வருவோம்.

தர்காவில் ப்ரார்த்தனை செய்வதைக் காட்டிலும், சரோஜினி பார்க்கில் சறுக்கு, சீசா, ஊஞ்சல் விளையாடுவது எங்களுக்கு முக்கியம்.

பார்க்கில் ஒரே கூச்சல், குழப்பம், ஆர்ப்பாட்டம் தான்.

எங்களுடைய இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் வீட்டுக்குள்ளே செல்லுபடியாகாது.

வீட்டில் வாப்பா என்கிற கறார் கண்டிப்பான குடும்பத்தலைவர் இருக்கிறார்.

ஒரு சலசலப்பு எழுந்தாலும் திட்டு விழும் அல்லது குட்டு விழும்.

அல்லது ரெண்டும் விழும்.

வாப்பாவுக்கு எதிரே பாட்டி வரமாட்டார்கள்.

கடுமையான கோஷா.

மருமகனுக்கு மாமியார் முகங்காட்டாத இஸ்லாமியப் பண்பாடு பாட்டியின் தலைமுறையோடு காலாவதியாகிப் போனது.

கணக்குப் பாடத்தில் நான் சர்வசாதாரணமாய்க் கோழி முட்டை, வாத்து முட்டை எல்லாம் வாங்கிக் கொண்டு வருவேன்.

அன்றைக்கெல்லாம் விசேஷமான திட்டுகளும் குட்டுகளும் கிடைக்கும்.

திட்டுகள் மற்றும் குட்டுகள் என்னுடைய சகோதரிகளுக்கும் அவ்வப்போது கிடைக்கும்.

இந்த விஷயத்தில் வாப்பா ஒரு சமூக நீதிக் காவலர். பாரபட்சம் பார்க்காதவர். பெண்களுக்கு முப்பத்தி மூணு சதவீதம் என்பது கிடையாது.

மாறாக, ஃபிஃப்ட்டி ஃபிஃப்ட்டி.

ஆணும் பெண்ணும் சரிசமம் என்கிற ஆணித்தரமான கொள்கை வாப்பாவுடையது. ஆண் வர்க்கத்துக்கும் பெண் வர்க்கத்துக்கும் குட்டுகள் சரிசமமாய்ப் பகிர்ந்து வாப்பாவால் வழங்கப்பட்டன. ஆணுக்கு நாலு குட்டு என்றால் பெண்ணுக்கும் நாலு

குட்டு. ஆனால் விசேஷம் என்னவென்றால், பெண்களுக்கான நாலு குட்டுகளையும் நாலு சகோதரிகளும் பகிர்ந்து கொள்ள, ஆண்களுக்குப் பாத்தியப்பட்ட நாலையும் ஒரே பையனான நான் மட்டுமே தன்னந்தனியாய்த் தலையில் சுமக்க வேண்டியிருந்தது.

ஸ்கூலில் முட்டை வாங்கிக் கொண்டு வரும் நாட்களில், திட்டு குட்டு தவிர இன்னுமொரு தாங்க முடியாத வேதனையுமுண்டு.

ஸ்கூலில் முட்டை வாங்கினால், வீட்டில் எனக்கு முட்டை கட்.

வட்டமான டைனிங் டேபிளில், வாப்பாவோடு குழந்தைகள் எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, எல்லாத் தட்டுக்களிலும் முட்டைகள் வந்து விழும், என்னுடையதைத் தவிர.

முட்டைத் தட்டுகளை நான் ஏக்கத்தோடு பார்ப்பேன்.

என் மேலே இரக்கங் கொள்ளக் கூடாத கண்டிப்புக்குக் கட்டுப்பட்டு சகோதரிகளெல்லாம் என்னைப் பரிதாபமாய்ப் பார்க்கிற சூழ்நிலையில், கடைசியில் மனமிரங்கி வாப்பா தன்னுடைய முட்டையிலிருந்து கொஞ்சம் பிய்த்தெடுத்து என்னுடைய தட்டில் போடுவார்.

வாப்பாவுக்குக் கூட புல்ஸ் ஐ தான் ரொம்பப் பிடிக்கும்.

ஆனால், ஆங்கிலம் பேசுகிற அத்தை மகள்கள் யாரும் திருவனந்தபுரத்தில் அவருக்குக் கிடையாது என்பதால், தனக்குப் பிரியமான முட்டைப் பதார்த்தத்தின் பெயர் புல்ஸ் ஐ என்று அவருக்குத் தெரிய வாய்ப்பில்லாமல் போச்சு. "மஞ்சள் கரு நடுவுல பொடச்சிட்டு நிக்குமே அந்த மாதிரி வேணும்' என்று பாமரத்தனமாய்ச் சொல்லுவார்.

"வாப்பா, அதுக்குப் பேர் புல்ஸ் ஐ' என்று சொல்லி அவருடைய அறியாமையை அகற்றி என்னுடைய அறிவாற்றலை நிலை நாட்ட எனக்கு ஆவல் பிறக்கும்.

அனாவசியமாய் வாயைத் திறந்து இன்னுமொரு அடிஷனல் குட்டைப் பெற்றுக் கொள்வானேன் என்று வாய் மூடி மௌனியாய் இருந்து கொள்வேன்.

*

மெட்ராஸ் ஸ்டேட் எலக்ட்ரிஸிட்டி போர்டில், பாளையங்கோட்டையில்,அஸிஸ்ட்டன்ட் இஞ்ஜினியராய்க் கொடி கட்டிப் பறந்தவர் வாப்பா.

சீஃப் இஞ்ஜினியர்களே இந்தக் காலத்தில் தெருவுக்கு ரெண்டு பேர் இருக்கிறார்கள், தெருவுக்கு ரெண்டு இஞ்ஜினியரிங் காலேஜ்கள் இருப்பது போல.

ஆனால், வாப்பா காலத்தில் பாளையங்கோட்டை ஊரிலேயே அவர் ஒருவர் தான் அஸிஸ்ட்டன்ட் இஞ்ஜினியர்.

வாப்பாவுடைய உபயோகத்துக்கென்று இடது பக்கம் ஸ்ட்டீரிங் வைத்த அட்டகாசமான வில்லீஸ் ஜீப் ஒன்று இருந்தது. ஊர்ன்ழ் ஜ்ட்ங்ப் க்ழ்ண்ஸ்ங்.

பக்கத்துக் கிராமங்களுக்குக் காம்ப் போகிறபோது, லீவ் நாட்களில் வாப்பா குழந்தைகளையும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு போவார்.

தாதங்குளம் போன்ற சிற்றூர்களில் ஆறு பைசா முட்டை அஞ்சு பைசாவுக்குக் கிடைக்கும். அந்த அஞ்சு பைசா முட்டை விற்கிற வீடுகளை விசாரித்துக் கொண்டு புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஜீப் நகரும். சட்டையணியாத கிராமத்துச் சிறுவர்கள் ஆர்வத்தோடும் ஆரவாரத்தோடும், ஜீப்புக்குப் பாதுகாப்பாய் ஓடி வருவார்கள்.

அஞ்சு பைசா முட்டை கணிசமாய்க் கொள்முதல் செய்யப்பட்ட காலக்கட்டங்களில், வீட்டில் முட்டைகள் ரொம்ப தாராளமாய்ப் புழங்கும்.

ஏஇ யாயிருந்த வாப்பா, டிஇ யாகி எஸ்இ யாகி ரிட்டயர் ஆன பின்னாலும், முட்டை ஓர் இன்றியமையாத சைட் டிஷ்ஷாய்த்தானிருந்தது, அவருக்கும், எனக்கும், எங்கள் எல்லோருக்கும்.

ஆனால், அப்போது பாளையங்கோட்டை, இப்போது மெட்ராஸ்.

*

வீட்டுக்கு ஒரே ஆண் பிள்ளை என்கிற அசைக்க முடியாத தகுதியின் அடிப்படையில், பெற்றோரை வைத்துப் பேணுகிற பாக்கியம் எனக்கே வாய்த்தது.

சகோதரிகளெல்லாம் கல்யாணமாகிப் போய், இந்தியாவின் பல பாகங்களில் வசித்தாலும், வாப்பா அம்மாவைப் பார்க்க ரெண்டு மூணு மாசத்துக்கொருதரம் மெட்ராஸ்க்கு வந்து போகிற அளவுக்குப் பாசப் பிணைப்பு நீடித்தது.

டாக்டர் தங்கச்சி மட்டும் அரேபியா போய்த் திரும்பி வந்து சென்னையில் ப்ஸட்டில் ஆனாள்.

ஆனால் எங்களையெல்லாம் பார்க்கிற வசதி தான் வாப்பாவுக்குக் குறைந்து கொண்டே வந்தது. கண் பார்வை மங்க ஆரம்பித்தது.

அதி தீவிர ஆன்மீகவாதியான வாப்பா, கண்பார்வை குறைந்து கொண்டே வந்த காலத்திலும் அதிகாலையில் சுபுஹ் தொழுகைக்குப் பின்னால் குர்ஆன் ஓதுவார். கண்ணாடியைக் கழட்டிக் கையில் வைத்துக் கொண்டு, எழுத்துக்களுக்கும் கண்களுக்குமிடையே கண்ணாடியை முன்னும் பின்னும் நகர்த்தி ஃபோக்கஸ் செய்து வாசிப்பார். மிச்சமிருக்கிற பார்வைக்கும் இது குந்தகமாய்ப் போகும் என்று சொல்கிறதைக் காதில் போட்டுக் கொள்ளாத அளவுக்கு ஆன்மீகப் பிடிவாதம்.

நாளாவட்டத்தில், கொஞ்சங்கூட மிச்சமில்லாமல் பார்வை பூஜ்யமாகிப் போனது. ரெண்டு கண்களிலும் மாறி மாறி செய்த ஆப்பரேஷன்கள் டாக்டர்களுக்குத் தான் பிரயோஜனப்பட்டன.

குடும்பத் தலைவராய் ஆட்சியிலிருந்த காலத்தில் வாப்பா சர்வாதிகாரியாயிருந்தவர். அந்தச் செருக்கையும் பேராண்மையையும் அப்படியே கட்டிக் காத்து வந்தார். பார்வை பறிபோனதைப் பற்றி ஒரு வார்த்தை பேச மாட்டார், பிறர் பேச சம்மதிக்கவும் மாட்டார்.

வாழ்க்கையே இருண்டு போய் விட்ட வேதனை அவருடைய உள்மனசில் இல்லாமலா இருக்கும்!

ஆனாலும் ஒரு முக்கல் முனகல் கிடையாது.

.இந்தப் பார்வையற்ற நிலையிலும், தினமும் ஐந்து வேளை மசூதிக்குப் போய், ஜமாத்தோடு தொழுகையில் கலந்து கொண்டேயாக வேண்டும்.

ஸ்கூட்டரில் நான் கூட்டிக் கொண்டு போவேன். என்னால் இயலாத சந்தர்ப்பங்களில் கடைப் பைய னொருவன் சைக்கிளில் அழைத்துப் போவான்.

கிட்டத்தட்ட முக்கால்க் கிலோ மீட்டர் சைக்கிளின் காரியரில் உட்கார்ந்து போவது பயங்கர அசௌகரியம் என்றாலும் அதைக் குறித்து அலட்டிக் கொள்ளவே மாட்டார்.

வாழ்க்கையில் ஒரேயொரு முறையாவது வாப்பாவின் வேதனையை உணர வேண்டும், ஒரேயொரு நாளாவது, அவருடைய இருண்ட உலகத்தில் பிரவேசித்துப் பார்க்க வேண்டுமென்கிற தார்மீக உந்துதலில், ஒரு ஞாயிற்றுக் கிழமை முழுக்கக் கண்களை மூடிக் கொண்டு வாழ்வது என்று முடிவெடுத்து, காலைத் தொழுகையிலிருந்து ஆரம்பித்தேன்.

சில மணி நேரங்கள் சிரமத்தோடு கழிந்தன.

குளிப்பதற்கென்று பாத்ரூமுக்குள்ளே போனபோது, கை நழுவி விழுந்த சோப்பைத் தடவித் தடவிப் பார்த்துக் கண்டெடுக்க முடியாமற் போய்த் தோற்றுக் கண் திறக்க நேர்ந்தது.

சில மணி நேரங்கள் என்னால் தாக்குப் பிடிக்க முடியாத இருட்டு வாழ்க்கையை வாப்பா ஏழு வருஷமாய், மனவுறுதியோடு வாழ்ந்து கொண்டிருப்பதை நினைக் கையில் மனசு அழுதது அவருக்காக.

கண்களைப் பாதுகாக்க முடியாமற் போனாலும் உடலின் மற்ற அவயவங்களின் ஆரோக்யத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் ரொம்ப ஆர்வம் வாப்பாவுக்கு.

படுக்கையில் படுத்துக் கொண்டே கைகளையும் கால்களையும் மடக்கி நிமிர்த்தி உடற்பயிற்சி செய்வது அவருடைய வழக்கம்.

அவருடைய அறைக்குள்ளே, சுவரைத் தொட்டுக் கொண்டே வாக்கிங் போவார். அவ்வப்போது, தட் என்றொரு சத்தங் கேட்கும்.

அறைக்குள்ளே எட்டிப்பார்த்தால், எதிர்த்த சுவரில் அவர் முட்டிக் கொண்டது தெரிய வரும்.

கேட்டால், "இல்லியே' என்பார்.

பாத்ரூமுக்குள்ளே தனியாய்ப் போகாதீர்களென்றால், தனியாய்த்தான் போவார்.

பாத்ரூமுக்குள்ளே வழுக்கி விழுந்து, நெற்றிக்கு மேலாய்த் தலையில் தோல் கிழிந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்த அர்த்த ராத்திரியில் போய் டாக்டர் தங்கச்சியை எழுப்பிக் கூட்டிக் கொண்டு வந்தேன்.

டெட்டால் போட்டுத் துடைத்து விட்டு, தோல் மரத்துப் போகும் ஊசி செலுத்தாமலேயே அவள், வழுக்கைத் தலையில் தையல் போட்டாள்.

அர்த்த ராத்திரியில் அப்படித்தானே செய்ய முடியும்!

தையல் போடுகிற மூணு நிமிஷமும் ஒரு உஸ் ஒலி கூட எழுப்பாமல், ஒன்றுமே நடக்காதது போலத் தங்கச்சியிடம் சுகம் விசாரித்துக் கொண்டிருந்த வாப்பாவின் ஆண்மைத் திமிர் அளவிட முடியாதது.

வாப்பாவின் அறையை ஒட்டினாற் போலத் தான் கிச்சன்.

கிச்சனில், சுவற்றை ஒட்டினாற்போல டைனிங் டேபிள்.

காலையில் நாஷ்ட்டா ரெடியாகிற நேரம் அவருக்கு மானசீகமாய்ப் புலப்படும் போல.

சுவரைத் தடவித் தடவி வந்து, டைனிங் டேபிளில் அவருக்குள்ள நாற்காலியில் உட்கார்ந்து கொள்வார்.

*

அன்றைக்கும் அப்படித்தான் வந்து உட்கார்ந்து, அவருக்கெதிரேயிருந்த ப்ளேட்டைத் தடவிப் பார்த்து, ஈரமில்லை என்று உறுதி செய்து கொண்டு, இட்லி தோசைக்குக் காத்திருந்தார். இட்லி தோசையைவிட அண்டா என்று அறியப்படுகிற முட்டை முக்கியம்.

"ராத்திரி முட்டைல வெங்காயம் போட்டிருந்திச்சி. வெங்காயம் வேண்டாம்னு சொல்லு' என்றார் வாப்பா, பக்கத்திலிருந்து பரிமாறிக் கொண்டிருந்த என்னிடம்

"இல்ல வாப்பா, இதில வெங்காயம் இல்ல. இது ஒங்களுக்குப் புடிச்ச புல்ஸ் ஐ' என்றேன்.

“என்ன பேர் சொன்ன?”

“புல்ஸ் ஐ வாப்பா.”

“புல்ஸ் ஐ ன்னா மாட்டுக் கண்ணுன்ல அர்த்தம்?”

“ஆமா வாப்பா, மாட்டுக் கண்ணு தான்.”

தட்டிலிருந்த முட்டையில் விரல்களைப் பதித்த வாப்பா, கொஞ்ச நேரம் அப்படியே இருந்தார். பிறகு வாயிலிருந்து வார்த்தைகள் மெல்ல உதிர்ந்தன.

“மாட்டுக் கண் எதுக்கு, எனக்கு இப்ப வேண்டியது மனுஷக் கண் இல்லியா மகனே!”

வாப்பாவுடைய வெளிறிப்போன விழிகளில் முதன் முதலாய்க் கண்ணீர் முத்துக்கள் திரண்டிருந்தன.

**சமநிலைச் சமுதாயம், மார்ச் 2009.**

# ரெண்டு பேர் தள்ளுகிற வண்டி

வெள்ளிக்கிழமை கடை போடவே கூடாது என்று சங்கத்திலிருந்து கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டதால் வெள்ளிக்கிழமை லீவ் விட்டேயாக வேண்டிய நிர்பந்தம். இல்லாவிட்டால் வாரத்தில் ஏழு நாள் உழையோ உழையோ என்று உழைப்பான் இவன். இவன் இப்படி என்றால், இவனுக்கு வாய்த்தவளோ இவனை விட ஒரு படி மேலே. வாரத்துக்கு எட்டு நாள் இருந்தால் எட்டு நாளும் உழைக்கிறவள்.

சங்கத்தில் இன்னொரு தீர்மானமும் போட்டி ருந்தார்கள். துணி ஒண்ணுக்கு இஸ்திரிப் போட ரெண்டரை ரூபாய் வாங்க வேண்டுமென்று. ஆனால் இவன் ரெகுலர்க் கஸ்டமர்களிடம் தொடர்ந்து ரெண்டு ரூபாயே வாங்கினான்.

இந்தத்தெருவில் எல்லோருமே ரெகுலர்க் கஸ்டமர்கள் தான்.

ரெண்டு ரூபாய் வாங்கினாலே கட்டுப்படியாகிறது என்கிறபோது, எதற்கு அநாவசியமாய் ரேட்டைக் கூட்ட வேண்டும் என்கிற இவனுடைய மனநிலையோடு அவளும் ஒத்துப் போனாள்.

ரெண்டு பேரும் ஒத்துப் போகாத இலாக்காக்களே கிடையாது.

ரெண்டு ரூபாய்க்கு இவர்கள் தொழில் செய்வது சங்கத்துக்குத் தெரிந்தால் நடவடிக்கை எடுப்பார்கள். அபராதம் போடுவார்கள்.

ஆகையால், வாடிக்கையாளர்களுக்குப் பணிவான வேண்டுகோள் வைத்திருந்தார்கள் இவர்கள், டிஸ்க்கவுன்ட் விவகாரம் ரகசியாமாயிருக்க வேண்டுமென்று.

ஆனாலும் ரகசியம் கசிந்து, பக்கத்துத் தெருவுக்குள் புகுந்துவிட்டது.

*

ஒரு நாள் காலையில் புது முகம் ஒன்று வந்தது, ஒரு பை நிறையத் துணிகளோடு.

"சார் புதுசா குடி வந்திருக்கீகளா?' என்று இவன் கேட்டதுக்கு, "இல்லப்பா, நா பக்கத்துத் தெரு. ப்ஸகண்ட் க்ராஸ்' என்று பதில் வந்தது.

"ஐயோ, அடுத்த தெருத் துணியெல்லாம் நாங்க வேங்கக் கூடாது சார். ரெண்டாவது கிராஸ்ல ஒர்த்தர் கட போட்டிருக்காரே சார், அவர்ட்ட தான் நீங்க தரணும்' என்று இவன் மறுக்கப் பார்த்தான்.

ஆனால் அந்த நபர் மசியவில்லை.

“அது எனக்குத் தெரியும்ப்பா, அந்த ஆள் ரொம்ப ஸ்லோ. துணி குடுத்தா அயண் பண்ணித்தர மூணு நாள் நாலு நாள் ஆகுது. நீங்க ஹஸ்பண்ட் அண்ட் ஒய்ஃப் ரெண்டு பேரும் வேல செய்றதால சுறுசுறுப்பா அயண் பண்றதாக் கேள்விப்பட்டேன். அதோட இன்னொண்ணும் கேள்விப்பட்டேன்....”

“என்ன சார் கேள்விப்பட்டீக?”

“மெட்ராஸ்ல எல்லா அயண்காரங்களும் ட்டு ஃபிஃப்ட்டி வாங்கறப்ப நீங்க மட்டும் ட்டு ருப்பீஸ் தான் வாங்கறீங்கன்னு கேள்விப்பட்டேன்.”

“ஐயையோ, தப்பு சார், தப்பு தப்பு. யாரோ ஒங்கட்டத் தப்பாச் சொல்லியிருக்காக. இங்கயும் ட்டு ஃபிஃப்ட்டி ருப்பீஸ் தான் சார்.”

“அட எனக்குத் தெரியும் தம்பி. பயப்படாத, நா யார்ட்டயும் சொல்ல மாட்டேன். இந்தா, பதிமூணு துணி இருக்கு. அர்ஜன்ட் ஒண்ணுமில்ல, நாளக்கி வந்து வாங்கிக்கிறேன். டெலிவரி எடுக்க வர்றப்ப ஒங்க ரெண்டு பேருக்கும் ஒரு நல்ல ந்யூஸ் சொல்றேன்.”

துணிகளோடு, ஒரு புதிரையும் இவர்கள் மேல் திணித்து விட்டுப் போனவருக்கு மேற்கொண்டு மறுப்புச் சொல்ல இவர்களால் இயலவில்லை.

"மச்சான், இது தப்பில்லியா மச்சான்?' என்று இவள் மெல்லக் குரல் கொடுத்தாள்.

“ரெண்டாவது கிராஸ் இஸ்திரி வண்டிக்காரர் வவுத்ல அடிக்கிற வேலயில்லியா மச்சான் இது? இந்த வேலய நீயும் நானும் செய்யலாமா மச்சான்?”

“செய்யக் கூடாதுதான் புள்ள. அந்த ஆள் என்னமோ நல்ல சங்கதி சொல்லப் போறேன்ட்டுப் போறாரே புள்ள. அது என்ன நல்ல சங்கதின்னு தெரியலியே. நாளக்கித் தெரிஞ்சிரப் போவுது. சங்கதியக் கேட்டுக்குவோம். பெறவு, இனிமே தெருவு மாறி வராதீக சாமின்னு அந்த ஆள் கிட்டக் கண்டிசனாச் சொல்லிப்புடுவோம்.”

ஆனால், அடுத்த நாள் அந்த ஆள் சொன்ன நல்ல தகவலைக் கேட்டுக் கொண்ட பின்னால், "இனிமே தெருவு மாறி வராதீக சாமி' என்று சொல்ல இயலாதவர்களாய்ப் போனார்கள் இந்த ரெண்டு பேரும்.

"எங்க ரோட்டரி க்ளப்லயிருந்து நூறு அயணிங் கார்ட்ஸ் மெட்ராஸ்ல ஒங்களப் போல உள்ள நூறு இஸ்திரிக்காரங்களுக்கு அன்பளிப்பா தரப் போறோம்ப்பா' என்று ஆரம்பித்தார் அவர்.

“எனக்கு ஒரு கார்ட் அலாட் பண்றாங்க. எங்க ரெண்டாவது க்ராஸ்ல இருக்கற அயண்காரருக்காகத்தான் நா சொல்லி வச்சிருந்தேன். இப்ப ஒங்களப் பாத்தப் பெறகு அந்த வண்டிய ஒங்களுக்குத் தரலாம்னு முடிவு பண்ணிட்டேன். சும்மாயிருக்காம எங்கத் தெரு அயண்காரர்கிட்ட வண்டி தர்றதாச் சொல்லித் தொலச் சிட்டேன். பரவாயில்ல அந்த ஆள நா சமாளிச்சிக்கிறேன். வண்டி ஒங்களுக்குத்தான்.”

“ஆனா சார், ரெண்டாவது கிராஸ் காரருக்குச் சேர வேண்டிய வண்டி, அவர்ட்டயிருந்து தட்டிப்பறிக்கிறது எப்டி நியாயமாகும் சார்....”

“நீயாப்பா தட்டிப் பறிக்கிற? நாந்தானே ஒனக்குத் தர்றேன். அந்த ஆள் ஸிங்கிள் மேன். நீங்க புருஷம் பொண்டாட்டி ரெண்டு பேர் ஒரே வண்டில எதிரும் புதிருமா நின்னு வேல செய்றீங்க. ஒங்களுக்குத்தான் அடிஷனலா இன்னொரு வண்டி தேவை. அந்தாளுக்குத் தேவையில்ல. ஒங்களப்பத்தி மொதல்லயே தெரிஞ்சிருந்தா, அந்த ஆள்கிட்ட சொல்லயிருக்க மாட்டேன். நாளக்யே வண்டி இதே ஸ்பாட்ல டெலிவரி ஆயிரும். ரிஸீவ் பண்ணிக்க ரெடியாயிருங்க. என்ன, சந்தோஷந்தானே?”

சந்தோஷந்தானா இல்லையா என்று இந்த ரெண்டு பேரும் ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு முன்பே அடுத்த நாள் விடிந்து விட்டது. புத்தம் புதிய இஸ்திரி வண்டி ஒன்று ஒரு டெம்போவில் வந்து இறங்கி விட்டது.

இவர்களுடைய மூணாவது க்ராஸிலுங்கூட, தனி நபர்த் தொழிற்கூடமாய்த்தான் இந்த இஸ்திரிக்கடை இயங்கி வந்தது.

மனைவி பரிமாறுகிற மதிய உணவைப் பகல் ஒண்ணரை மணிபோல ஒரு எடுப்பு எடுத்துவிட்டு ப்ளாட்ஃபாமில் பழைய அட்டைகளை விரித்துப் படுக்கிறவன், ஒரு ரெண்டு மணி நேரம் சொகம்மாய் ஒரு தூக்கம் போடுவான்.

அந்த ரெண்டு மணி நேர இடைவேளையை விரயம் செய்வானேனென்று இவள் இஸ்திரிப் பெட்டியைக் கையிலெடுக்க முனைந்தாள். நாலு கிலோக் கனமான இஸ்திரிப் பெட்டியைக் கையாள்வது முதலில் மலைப் பாயிருந்தாலும், நாளாவட்டத்தில் பழகிப் போனது.

"என் ராசாத்தி, இந்த மொரட்டு வேலயெல்லாம் ஒன்னோட நாசூக்கான ஒடம்புக்கு ஒத்துக்காதும்மா, வேணாம்' என்று இவன் தடுக்கப் பார்த்தது எடுபடவில்லை அவளிடம். "பொழுதன்னிக்கும் நீ மாடா ஒழக்கிற. நா வெட்டியா ஒக்காந்து வேடிக்க பாத்துட்டிருக்கவா மச்சான். எனக்கும் ஒரு பொட்டி வேங்கிக் குடு, நானும் கூட மாட வேல செய்றேன். ஆம்பளக்கி சமமா பொம்பளையும் எல்லா வேலையும் செய்ற காலம் மச்சான் இது. ரெண்டு பேரும் சேந்துத் தள்ளினாத்தான் வண்டி ஓடும்' என்று கணவன் மேலே ஆதிக்கம் புரிந்து அவனை அடிபணிய வைத்து விட்டாள்.

ஒரு வெள்ளிக்கிழமை ரெண்டு பேரும் பாண்டிச்சேரிக்குப் போய், மூவாயிரத்துச் சொச்சம் கொடுத்து பளபளக்கிற இஸ்திரிப்பெட்டியொன்றோடு திரும்பினார்கள். அதற்குப் பிறகு தான் இஸ்திரி வண்டியின் எதிரெதிர்ப் பக்கத்தில் கணவன் மனைவி நின்று இஸ்திரி போடுகிற இனிமை ஆரம்பமானது.

தொழில் படு சுறுசுறுப்பாய் நடந்தது. இஸ்திரிப் பெட்டி ரெண்டாகி, இப்போது இஸ்திரி வண்டியும் ரெண்டாகிப் போனது. வண்டி வந்து இறங்கியது வியாழக்கிழமை. வெள்ளிக்கிழமைக் காலையில் இவர்கள் ரெண்டு பேரும் ரெண்டாவது க்ராஸில் ரோட்டரி க்ளப்காரரின் அட்ரஸ் தேடிப் போய் நன்றி சொல்லிவிட்டு வந்தார்கள்.

அப்போது தான் ரெண்டாவது க்ராஸ் இஸ்திரி வண்டி கண்ணில் பட்டது.

வெள்ளி விடுமுறையானதால் வண்டிக்கு சொந்தக்காரர் அங்கே இல்லை.

வண்டி, பக்கவாட்டிலெல்லாம் இற்றுப்போய்ப் பரிதாபமாயிருந்தது. ரெண்டு ஜோடி சக்கரங்களில் ஒரு ஜோடியைக் காணவில்லை. சக்கரங்களுக்கு மாற்றாய், ஒரு பக்கம் சவுக்குக் கட்டை ஒன்றும், இன்னொரு பக்கம் ஒரு செங்கல் அடுக்கும் வண்டியைத் தாங்கி நின்றன.

ரிட்டயர் ஆக வேண்டிய நிலையிலிருக்கிற இந்த வண்டி இன்னும் எத்தனை நாள் தாக்குப் பிடிக்கும் என்று தெரியவில்லை.

"மனசுக்குக் கஷ்டமாயிருக்கு மச்சான்' என்றாள் இவள்.

“இந்த மனுஷனுக்குச் சேர வேண்டிய வண்டிய

நாம அநியாயமாப் புடுங்கிக்கிட்டோமோன்னு யோசனை யாயிருக்கு.”

“அந்த ஆளுக்குக் குடுத்து வக்யல, நமக்குக் குடுத்து வச்சிருக்குன்னு நெனச்சிக்க வேண்டியது தான். சரி, நட.”

*

ரெண்டு வண்டிகளாய்க் கடை விஸ்தாரமான பின்னால், ரெண்டாவது க்ராஸிலிருந்து எல்லை தாண்டி மூணாவது க்ராஸுக்கு இவர்களைத் தேடி துணிகள் ஏழெட்டு வீடுகளிலிருந்து வர ஆரம்பித்தன.

இஸ்திரி வண்டியை அன்பளித்த ரோட்டரி க்ளப்காரர் ஆரம்பித்து வைத்தது.

ஒரு வீட்டுக்குச் செய்கிற போது மற்ற வீடுகளுக்கும் செய்து தானே ஆக வேண்டும்! வேலைப்பளு அதிகமானபோது, பாண்டிச்சேரி பளபளா இஸ்திரிப் பெட்டியின் கனமும் கூடிப்போனது மாதிரியிருந்தது இவளுக்கு.

கைகள் ரெண்டும் ஓய்ந்து போயின.

ரெண்டாவது க்ராஸ் வீடுகளுக்கு டெலிவரி கொடுக்கிற வேலை, இஸ்திரிப் பெட்டியோடு மல்லுக் கட்டுகிறதை விட லேசானதாய் இருந்தது.

ஆனால், டெலிவரி கொடுக்கப் போகிற போது, அந்த ரெண்டாவது க்ராஸின் ஆஸ்தான இஸ்திரிக்காரரின் கண்களில் பட்டுவிடாமல் தவிர்ப்பது தான் பெரிய ப்ரயத்தனமாயிருந்தது.

அப்படியும் ஒரு நாள் வசம்மாய் சிக்கிக் கொண்டாள்.

"தங்கச்சீ' என்ற அழைப்புக்குத் திரும்பிப் பார்த்தாள். அந்த இஸ்திரிக்காரர் அழைப்பை ஏற்று அருகில் போக வேண்டியதாய்ப் போச்சு.

"நீ மூணாவது கிராஸ் தானே தங்கச்சி?' என்கிற சாதாரணக் கேள்விக்கே, "அ.. ஆமாங்க அண்ணாச்சி' என்று தட்டுத்தடுமாறியவள், அடுத்த கேள்வியில் ஆடிப் போனாள்.

“புது வண்டி நல்லா இருக்காம்மா?”

“இது... வந்து... நல்லா இருக்குங்க அண்ணாச்சி.”

அதற்கு அடுத்த கேள்வி எப்படியிருக்குமோ என்று இவள் திகிலடைந்திருக்கிற போது ரொம்ப இதமாய் வந்து விழுந்தது அந்தக் கேள்வி.

“நமக்கும் திருநவேலிப் பக்கம் தானாம்மா?”

“ஆமாங்க அண்ணாச்சி. எப்டிக் கண்டுபிடிச்சீக அண்ணாச்சி?”

“இதுக்கு என்னா, மை போட்டா கண்டு புடிப்பாக? அதான் வாய் நெறய்ய அண்ணாச்சீ அண்ணாச்சீங்கியே தாயி! நீங்க புருசம் பொஞ்சாதி ரெண்டு பேரும் சேந்து வேல செய்தீகன்னு சார்வாள் சொன்னாக. வண்டிய அவியளுக்குக் குடுக்கலாம்னு இருக்கேம்னாக. ஆஹா அப்டியே செஞ்சிருங்க சாமின்னேன். ரெண்டு பேரும் ஒத்த வண்டியில முட்டிக்கிட்டு நிக்யாம ரெண்டு வண்டில சவுரியமா தொழில் பாக்கலாம்ல? ஆனா ஒண்ணு தாயி, எம் பொஞ்சாதி மட்டும் இப்ப இருந்திருந்தா நா அந்த வண்டிய அபேஸ் பண்ணியிருப்பேன் தெரியுமா!”

“ஒங்க..... பொஞ்சாதி.... இல்லியா அண்ணாச்சி?”

“போய்ச் சேந்துட்டாளே தாயி. போன மவராசி சும்மாப் போனாளா? ரெண்டு பொட்டபுள்ளைகளப் பெத்து எங்கைல குடுத்து, பாத்துக்க வேய்ன்னுட்டுல்லா போய்ட்டா. அதுகளக் கரையேத்ததுக்காகத்தான் நா கெடந்து பாடுபட்டுக்கிட்டுக் கெடக்கேன். சரி, நீ கெளம்பு தங்கச்சி. ஒம் புருசன நா விசாரிச்சதாச் சொல்லும்மா.”

*

என்ன பிறவி இந்த மனுஷன் என்று நினைத்துக் கொண்டே நடந்தாள். தனக்குச் சேர வேண்டிய வண்டியை இவர்கள் அபகரித்துக் கொண்டதைக் குறித்து ஒரு வில்லங்க வசனம் பேசவில்லை. என்னுடைய தெருக் காரர்களின் துணிகளை, ஏரியாக் கட்டுப்பாட்டை மீறி நீங்கள் எப்படிப் பெட்டி போட்டுக் கொடுக்கலாம் என்று சீறவில்லை. ரெண்டரை ரூபாய் என்று நிர்ணயிக் கப்பட்டிருப்பதை மீறி, ரெண்டு ரூபாய்க்குக் கள்ள வியாபாரம் பண்ணி என் வயிற்றில் எப்படி அடிக்கலாம் என்று குமுறவில்லை. இந்த முறைகேடுகளை சங்கத்தில் முறையிடுவேன் என்று பூச்சாண்டி காட்டாவில்லை....

இந்த நல்ல மனிதனுடைய வயிற்றிலடித்து வாங்கிக் கொண்ட வண்டியால் சாதித்தது என்ன? கைகள் ஓய்ந்து போனது தான் மிச்சம்.

ரெண்டு வண்டி போட்டு வேலை செய்கிறோம். வருமானம் கூடியிருக்கிறது. ஆனால் மனசில் நிறை விருக்கிறதா?

"மச்சான் ஒன்ட்ட ஒரு ஞாயத்த சொல்லணும்' என்று ஆரம்பித்தாள்.

“இந்த வண்டி நமக்கு வேணாம் மச்சான்.”

“ஏம்புள்ள அப்டிச் சொல்லுத.”

“நெசம்மாத்தான் சொல்லுதேன் மச்சான். நா இன்னிக்கி அந்த அண்ணாச்சியப் பாத்தேன் மச்சான்.”

“எந்த அண்ணாச்சியச் சொல்லுத?”

“ரெண்டாவது கிராஸ் இஸ்திரிக்கார அண்ணாச்சிய.”

“ஓ, எனக்குச் சேர வேண்டிய வண்டியக் களவாண்டுக்கிட்டீகளேன்னு தகராறு பண்ணாராக்கும்.”

“ஐயே, தகராறு பண்ற ஜாதியில்ல மச்சான் அந்த மனுஷன். தங்கமான ஆளு மச்சான். பாவம், அந்த ஓட்ட வண்டிய வச்சிக்கிட்டுக் கஷ்டப்பட்டுட்டிருக்காக.”

“துணி இப்ப ஜாஸ்தியா வருது. ரெண்டு வண்டி இருந்தாத்தான புள்ள நமக்கு செரமமில்லாம இருக்கும்?'

“துணியக் கொறச்சிக்கிருவோம் மச்சான். அடுத்தத் தெருத் துணிகள நாம இனிமே வேங்க வேணாம். அந்த அண்ணாச்சி சண்டக்கி வரலங்கதுக்காக அவரோட வருமானத்த நாம புடுங்கிக்கிறது தர்மமில்ல மச்சான். அந்த அடாவடி வருமானம் நமக்கு வேணாம். துணி தேச்சித் தேச்சி எனக்குக் கையெல்லாம் வலிக்கி.”

“வேல செய்ய வேணாம். நீ சும்மாக் குத்தவச்சி இரின்னாலும் கேக்க மாட்டங்க.”

“என்னத்துக்குக் குத்தவச்சி இருக்கணுமாம்? முன்ன மாறி ஒரே வண்டியிலயே ஒனக்கு எதுத்தாப்ல நின்னு துணி தேப்பேன்.”

“அப்ப மட்டும் கை வலிக்காதாக்கும்.”

“வலிக்காது மச்சான். ஒன்னோட மொகத்தப் பாத்தமேனிக்யே நா வேல செஞ்சேன்னா, ஒங்கூட சிரிச்சிப் பேசிக்கிட்டே துணி தேச்சேன்னா, கை வலிக்கவே வலிக்காது மச்சான்.”

தெருவில் ஆள் நடமாட்டம் இல்லாததை உறுதி செய்து கொண்டு எட்டி அவன் இவளுடைய கன்னத்தைக் காதலாய் நிமிண்டினான். நிமிண்டின விரல்களை உதடுகளில் பதித்து முத்தச்சத்தம் செய்தாள்.

"அந்தத் துணியயெல்லாம் காலி பண்ணு என் ராசாத்தி. பிறத்தியார் சொத்து நமக்கு வேணாம். இப்பவே வண்டியத் தள்ளிக் கொண்டுட்டுப் போய் அடுத்தத் தெரு அண்ணாச்சிட்ட ஒப்படச்சிட்டு வந்துருதேன்' என்று வண்டியை உருட்ட ஆயத்தமானவனிடம் "நானும் வர்றேன் மச்சான்' என்றாள் இவள்.

"ஆமா, இந்த வண்டியத் தள்ள ரெண்டு பேர் வேணுமாக்கும்' என்றவனை நோக்கி, "ரெண்டு பேரும் சேந்துத் தள்ளினாத்தான் வண்டி ஓடும்' என்று சிரித்தாள் இவள்.

**(கலைமகள்,** ஏப்ரல் 2009.

**அமரர் கி.வா.ஜ நினைவுச் சிறுகதைப் போட்டி,**

2009-இல் முதல் பரிசு **பெற்ற சிறுகதை.)**

# இறந்தவன் எழுதுகிறேன்

தயவு செய்து புதிர் கொள்ளாதீர்கள்.

நீங்கள் நினைக்க நினைப்பது சரிதான்.

நீங்கள் இதை வாசிக்கிற நேரத்தில், இப்போது இதை எழுதிக் கொண்டிருக்கிற நான் இறந்து போயிருப்பேன்.

என்னைப் போன்ற இளம் ஸீனியர் ஸிட்டிஸன் களுக்கும், ஸீனியர் ஸிட்டிஸன்களாய் அங்கீகாரம் பெற வெய்ட்டிங்கில் இருக்கிற கனவான்களுக்கும் ஞாபகமிருக் கலாம், அறுபதுகளின் ஆரம்பத்தில் குமுதத்தில் வந்த இறந்தவன் பேசுகிறேன் என்கிற புதுமையான சிறுகதையை.

அந்தக் கதையின் கதாநாயகன் ஒரு விஞ்ஞானி.

தன் மேலேயே பரிசோதனை செய்து பார்த்துக் கொள்கிற ஒரு வித்யாசமான விஞ்ஞானி. தன்னுடைய பரிசோதனைக்குத் துணையாய்த் தன்னுடைய இளம் மனைவியை அமர்த்துகிறான்.

ரெண்டாந்தாரமாய்க் கட்டிக் கொண்ட இளம் மனைவி.

இறந்து போன மனிதனைத் திரும்ப உயிர்ப்பிக்கிற பரிசோதனை.

கதாநாயகன் "இறந்து போய்'ப் படுத்திருக்கிறான்.

படுப்பதற்கு முன்னால் பதிவு செய்யப்பட்ட அவனுடைய குரல், டேப்பில் ஓடிக் கொண்டிருக்கிறது. மனைவிக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கிற குரல். அந்தக் குரல் பணிக்கிறபடி இவள் செய்து கொண்டே வந்தால், அதன்படியே ரசாயனங்களை "இறந்து போன' உடம்பில் செலுத்திக் கொண்டே வந்தால், கதாநாயகன் திரும்பவும் உயிர் பெறுவான்.

டேப் ஓடிக் கொண்டே இருக்கிறது.

கதாநாயகனின் குரல் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டேயிருக்கிறது.

ஆனால் நம்மக் கதாநாயகியோ ஆடாமல் அசை யாமல் அமர்ந்திருக்கிறாள்.

கட்டளைகள் நிறைவு பெற்றுக் கொஞ்ச நேரம் டேப் சத்தமில்லாமல் சுத்திக் கொண்டே இருக்கிறது. பிறகு, கதாநாயகனின் குரல் தொடர்கிறது, பயங்கர சிரிப் பொலியோடு.

என்னுடைய குரலின் கட்டளைப்படி நீ செய்தேயிருக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும் பெண்ணே. நான் சொன்ன ரசாயனங்களை, சொன்ன நேரத்தில் என்னுடைய உடம்பில் நீ சேர்க்காததால் பரிசோதனை தோல்வியடைந்து விட்டது. பரிதோதனை தோல்வியடைந்ததேயொழிய, பரிதாபத்துக்குரிய பெண்ணே, நான் வெற்றியடைந்து விட்டேன். உன்னையும் என்னையும் தவிர ஒரு மூன்றாவது நபர் இந்த சோதனைச்

சாலைக்குள்ளே பிரவேசித்தால் இதன் கதவுகள் தானாக மூடிக் கொள்ளும். திறக்கவே திறக்காது. இப்போது உன்னோடு ஒரு மூன்றாவது நபர் இருக்கிறானென்பது எனக்குத் தெரியும். இன்னும் சில விநாடிகளில் இந்த சோதனைச் சாலை பற்றியெறியப் போகிறது. வெடித்துச் சிதறப்போகிறது. என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள் - உனக்கும் உன்னுடைய கள்ளக்காதலனுக்கும்.

அடுத்த நாள் காலையில் கருகிய உடல்கள் மூன்று கண்டெடுக்கப்பட்டன. அந்த மூன்றாவது உடல் யாருடையது என்று அறியவே முடியவில்லை என்று கதை முடியும். அந்த விஞ்ஞானி கம் கதாநாயகன் கூட ஒரு ஸீனியர் ஸிட்டிஸன் தான்.

ஸீனியர் ஸிட்டிஸன்களின் வாழ்க்கையே சோக மானது தான்.

வாழ்க்கையின் முடிவு இன்னும் சோகமானது.

மரணம்.

முதியவர்களுக்கு மட்டுந்தானா மரணம்?

ஒட்டு மொத்த மனித குலத்துக்கே எதிர்காலம் என்பது மரணந்தானில்லையா?

நாளைக்குப் பிறக்கப் போகிற குழந்தைகளெல்லாம் கி.பி.2200ல் நிச்சயமாய் மறைந்து போயிருக்கும்!

நூறாண்டு காலம் வாழ்க என்று வாழ்த்துவதெல்லாம் வாழ்த்தல்ல, வசவு.

"வாழ்த்து'ப் பெறுகிற அந்த ஆசாமிக்கு அந்த வாழ்த்து தப்பித்தவறிப் பலித்து விட்டதென்றால், நூறு வயசை எட்டி, கண் பார்வை மங்கி, காது மந்தமாகி, பற்களெல்லாம் கழண்டு கொண்டு, கை கால்கள் விழுந்து, தோல் சுருங்கி, எறால் மீன் மாதிரி உடல் சுருண்டு, படுத்த படுக்கையாகிப் போய், கட்டிலுக்கும் குடும்பத்துக்கும் பாரமாகி, சனியன் எப்போது போய்ச் சேரும் என்கிற சாபங்களைச் சுமந்து கொண்டு, இந்த நூறு வயசு வாழ்க்கை தேவை தானா?

நீண்ட நாள் வாழ்கிற பேராசை எல்லாருக்கும் இருக்கிறது.

ஆனால் முதுமை எய்த எவருக்குமே விருப்பமில்லை.

எப்படியும் சாகப் போகிறாய். என்றோ ஒரு நாள் சாகப் போகிறாய். கடைசி வரை கட்டிலைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு படுத்துக்கிடந்து. கல்லடிபட்டு, சொல்லடிபட்டுப் புறப்படுவதற்கு, காலாகாலத்திலேயே புறப்பட்டுப் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தால் புண்ணியம் இல்லையா!

எவ்வளவு துரிதமாய் நீ செத்துப் போகிறாயோ, அதுவே நல்லது, உனக்கும் உலகத்துக்கும்.

*

நிற்க. திரும்ப அந்த விஞ்ஞானிக் கதைக்கு வருவோம்.

கல்லூரிக் காலத்தில் என்னை ரொம்ப ரொம்பப் பரவசங் கொள்ளச் செய்த சிறுகதை அது.

கதை இப்போது முக்கியமல்ல. இறந்தவன் பேசுகிறேன் என்கிற அந்தத் தலைப்பு தான் முக்கியம்.

ஏனென்றால், அந்தத் தலைப்பு தான் இறந்தவன் எழுதுகிறேன் என்கிற என்னுடைய இந்தத் தலைப்புக்கு இன்ஸ்ப்பிரேஷன்.

*

மரணம் என்பது ஒரு படுபயங்கரமான விஷயம் தான்.

ஆனால் மரணத்தை விடவும் படு படு படு பயங்கர மானது அந்தத் கடைசி நிமிட மரண வேதனை. அந்த இறுதி நேர இழுபறிக்கு இஸ்லாத்தில் அம்சமாய் ஒரு வார்த்தை வைத்திருக்கிறார்கள்.

சக்ராத்.

அந்த சக்ராத்தின் கொடுமைய நான் பல வருஷங்களுக்கு முன்பே கண்ணால் பார்த்து உணர முடிந்தது, பெங்களூரில் என்னுடைய தூரத்து சித்தப்பா ஒருவர் செத்துப் போக சபிக்கப்பட்டிருந்த போது.

தன்னுடைய வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில், ஆஸ்பத்திரியில் கிடந்த சித்தப்பாவுக்கு, உடம்பில் எங்கெங்கே துளைகள் இருக்கின்றனவோ அங்கங்கெல்லாம் குழாய்களைச் சொருகியிருந்தார்கள்.

சில குழாய்கள் இன்லெட், சில அவுட்லெட்.

இறுதி விநாடி நெருங்கிவிட்டது.

இனியும் இந்த உடலை ஆஸ்பத்திரியில் படுக்கப் போட்டுக் கொண்டு, ஃபீஸ் கறந்து கொண்டிருப்பது தர்மமில்லை என்று டாக்டர்கள் உணர்ந்தபோது, அந்த உடலை இந்த உலகத்தோடு இணைத்திருந்த, உயிரைப் பிடித்து வைத்திருந்த ட்யூப்களெல்லாம் பிடுங்கி யெறியப்பட்டன.

சித்தப்பா சாக விடப்பட்டார்.

ஆஸ்பத்திரியிலிருந்து ஆம்புலன்ஸில் ஏற்றப்பட்டு, முக்கால் மணி நேரப் பிரயாணத்துக்குப் பிறகு கலாசிப் பாளையத்திலிருந்த வீட்டில் கொண்டு வந்து கூடத்தில் கிடத்தப்பட்டு ரெண்டு மணி நேரமாகியும் சித்தப்பா சாகாமல் பிடிவாதத்திலிருந்ததால், தொண்டைக் குழியில் துடித்துக் கொண்டிருந்த உயிர், விடுதலையடைந்து

விடத் திமிறிக் கொண்டிருந்த கடைசி நிமிடத்தில், உடலைச் சுற்றியிருந்த சுற்றத்தார் எல்லாரும், அநேகமாக அந்த உடலின் மேலேயே கவிழ்ந்தபடி, லா இலாஹா இல்லல்லாஹ், லா இலாஹா இல்லல்லாஹ் என்று கோரஸ்ஸ்ய்க் குரல் கொடுத்து, உயிரை விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

மரணத்தைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் ஒரு வழியாய் எல்லாருமாய்ச் சேர்ந்து உடம்பிலிருந்து உயிரைப் பிதுக்கி வெளியேற்றியே விட்டார்கள்.

சித்தப்பாவுக்கு ஒரு வழியாய் விடுதலை கிடைத்தது.

நிரந்தர விடுதலை.

*

சக்ராத் மிகமிகக் கொடூரமானது.

அந்த இறுதி நேர இழுபறியினாலேயே மரணத்துக்கு ஒரு பயங்கரப் பரிமாணம் கிடைக்கிறது.

மரணத்தை நினைத்தால்

பயமாயிருக்கிறது

வாழ்க்கையை நினைத்தால்

இன்னும் பயமாயிருக்கிறது

இருபத்தொண்ணாம் நூற்றாண்டில் வாழ்க்கை பயமயமாய்த்தான் ஆகிப் போனது.

ஜனப் பெருக்கம், வாகன நெரிசல், விலைவாசி ஏற்றம், றெக்கை கட்டிப் பறக்கிற ரியல் எஸ்டேட், அரசியல் வாதிகளின் அராஜகம், அடியாட்களின் அடாவடி.

கைவசம் கோடிகளை வைத்திருக்க வேண்டும், அல்லது கேடிகளை வைத்திருக்க வேண்டும். ரெண்டும் இல்லையென்றால் வசதியாய் வாழ முடியாது என்கிற நிலை. இவற்றோடு, என்னேரமும் நிகழலாம் என்கிற மரண பயம்.

மரண பயம் என்பது மனிதனுக்கு அத்தியாவசிய மானது.

கொஞ்சமாவது நேர்மையாய், நாணயமாய் வாழ வேண்டுமென்கிற உந்துதலை சில மனிதர்களிடமாவது ஏற்படுத்துவது இந்த மரண பயம் தான்.

சில மனிதர்களுக்கு மரண பயம் பழகிப் போய் விடுகிறது.

எனக்குப் பழகிப் போனதைப் போல.

சக்ராத்தை நினைத்துத்தான் கொஞ்சம் கலவரம் கொள்கிறேன்.

அந்தக் கலவர நிலையைக் கடந்து, விடுதலையடைந்து விட்டால், பிறகு மோன நிலை தான்.

உலக வாழ்க்கையிலே பஞ்சமா பாதகம் எதுவும் புரியவில்லை. எவர் குடியையும் கெடுக்கவில்லை, நம்பிக்கைத் துரோகம் செய்யவில்லை, கள்ளக் கையெ ழுத்துப் போடவில்லை,புறம்பேசித்திரியவில்லை. நல்லவனாய்த்தான் வாழ்ந்திருக்கிறேன். ஆகையால் சொர்க் கத்துக்குப் போக வாய்ப்புகள் நிறைய.

சொர்க்கத்துக்குப் போனால் அல்லாவைப் பார்க் கலாம்.

அம்மாவைப் பார்க்கலாம், வாப்பாவைப் பார்க்கலாம்.

மதர் தெரசாவைப் பார்க்கலாம்.

மஹாத்மா காந்தியைப் பார்க்கலாம்.

மஹாத்மா காந்தி என்றதும் சின்ன வயசுச் சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகிறது.

பரமக்குடி செட்டியார் ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்த பள்ளிப் பிராயம்.

மசூதிக்குத் தொழுகைக்குப் போகிற வாப்பாவுக்குப் பரிச்சயமாய்ப் போன மௌலானா ஒருவர் அடிக்கடி வீட்டுக்கு வருவார்.

மௌலானாவுக்கும் வாப்பாவுக்குமிடையே இஸ்லாமிய விவாதங்கள் நடக்கும்.

கதவு மறைவிலிருந்து அவதானித்துக் கொண்டிருப் பார்கள் அம்மா.

அம்மா என்றால் சும்மா அடுப்பாங்கரை அம்மா அல்ல.

அந்தக் காலத்திலேயே அம்மா பி.ஏ.

பாளையங்கோட்டை சாராட்டக்கர் காலேஜின் முதல் முஸ்லிம் மாணவி என்கிற சிறப்பு அம்மாவுக்கு உண்டு.

மௌலானாவோடு வாப்பா விவாதத்திலிருந்த போது, சொர்க்கம் நரகம் பற்றிய சர்ச்சை வந்தது.

உயிர் போகிற இறுதி நிலையில், லா இலாஹா இல்லல்லாஹ் என்கிற கலிமாவை உச்சரித்து விட்டு மரணித்தால் தான் மோட்சம் என்றார் மௌலானா.

இஸ்லாமானவர்களுக்குக் கலிமா சொல்லித் தரப்பட்டிருக்கிறது. கலிமா தெரியாத, முஸ்லிமல் லாதவர்களுக்கு எப்படி என்று வாப்பா கேட்டதற்கு மௌலானா அதே பதிலைத்தான் சொன்னார்.

யாராயிருந்தாலும், கலிமா சொல்லிவிட்டு செத்தால்தான் சொர்க்கமாம்.

முஸ்லிமல்லாதவர்கள் எவ்வளவு உத்தமர்களா யிருந்தாலும், கலிமா சொல்லவில்லையென்கிற ஒரே காரணத்துக்காக அவர்களுக்கு மோட்சம் மறுக்கப்படுவது அநீதி இல்லையா என்கிற வாப்பாவுடைய நியாயமான கேள்விக்கு, மௌலானாவின் பிடிவாதமான பதில் தான் விடையாய் வந்தது.

“முஸ்லிமல்லாதவன் எவ்வளவு யோக்கியனாய் இருந்தாலும் சரி, கலிமா சொல்லா விட்டால் நரகம் தான்.”

இந்த நேரத்தில் தான் அம்மா அப்பட்டமாய் ஒரு கேள்வியை மௌலானா முன் வைத்தார்கள்.

“மஹாத்மா காந்திக்கு சொர்க்கமா நரகமா?”

"சாகும் போது காந்தி கலிமா சொல்லவில்லையே' என்றார் மௌலானா.

"சொன்னார்' என்று உறுதியாய் ஒலித்தது அம்மாவின் குரல்.

“லா இலாஹா இல்லல்லாஹ் என்று காந்தி சொன்னாரா?'

“இல்லை, ஹே ராம் என்று சொன்னார்.”

“அது கலிமா இல்லை.”

“அவருக்குக் கற்பிக்கப்பட்ட கலிமா அதுதான். இங்கே இஸ்லாமானவர்கள் எத்தனை பேருக்கு இறுதி நேரத்தில் கலிமா சொல்ல நாக்கு வருகிறது? ஆனால், மஹாத்மா காந்திக்கு நாக்கு வந்தது. அவருக்குக் கற்பிக்கப்பட்ட கலிமாவை உச்சரித்து விட்டு உயிர்விடுவதற்கு அவருக்கு ஆண்டவன் அருள் புரிந்தான்.”

அம்மாவுடைய ஆணித்தரமான வாதத்தோடு மௌலானா உடன்படவில்லை.

அம்மாவின் பொறுமை கரைகடக்கப் பார்த்தது. குரல் உயர்ந்திருந்தது.

“ஒரே வார்த்தைல சொல்லுங்க மௌலானா, மஹாத்மா காந்திக்கு சொர்க்கமா நரகமா.”

மௌலானா ஒரே வார்த்தையில் சொன்னார்.

“நரகம்.”

அடுத்த விநாடி கதவு மறைவிலிருந்து புயல் போல வெளிப்பட்டார்கள் அம்மா.

இந்த மனுஷன் முன்னால் கோஷாவாவது பர்தாவாவது!

அம்மாவின் குரல் உச்சத்தில் அதிர்ந்தது.

“மஹாத்மா காந்திக்கி நரகம்னா, மஹாப்பாவி, ஒனக்கும் நரகந்தான்யா!”

வெலவெலத்துப் போன அந்த மௌலானா அதற்குப் பிறகு நம்ம வீட்டுப்பக்கம் தலை காட்டவே இல்லை.

மசூதிக்குக் கூட வந்தாரோ இல்லையோ!

மஹாத்மாவின் இந்த மலரும் நினைவு மேலெழுகிற போதெல்லாம் ஒரு குற்றவுணர்ச்சி தலையெடுக்கும், மூணு வருஷங்களுக்கு முன்பு வாங்கிய சத்திய சோதனையைப் புரட்டிக்கூடப் பார்க்கவில்லையே என்று.

மரணம் என்னை நெருங்கிக் கொண்டிருக்கிற இந்தத் தருணத்தில், அது நேரும் முன் சத்திய சோதனையை வாசித்து முடித்து விட வேண்டுமென்கிற வேகத்தில், அந்த அறுநூத்தியஞ்சு பக்கங்களையும் ஆறே அமர்வுகளில் படித்து முடித்தேன்.

ஆச்சு.

பெண்டிங் ஒர்க் எதுவும் கிடையாது.

கைவசமிருந்த சொற்ப ஆயிரங்களைத் தேவைப்பட்ட மூணு பேருக்கு தர்மம் பண்ணியாச்சு.

வாட்ச்மேன் அஜீஸ் பாய்க்கு ஆயிரம்.

ப்ளம்பர் சங்கருக்கு ரெண்டாயிரம்.

பூக்கார ஜோஸஃபைனுக்கு மூணு.

மிச்ச ஐயாயிரத்தை ஒரு கவரில் போட்டுத் தலைமாட்டில் வைத்துக் கொண்டு படுத்துக் கொள்ள வேண்டும்.

கவரின் மேலே வாசகம்: "என்னுடைய ஈமக் கிரியைகளுக்கு.'

இப்போது உட்கார்ந்து இதை எழுதிக் கொண்டி ருக்கிற நான், இந்தக் கதையை எழுதி முடித்துத் தபாலில் சேர்த்த பின்னால் சில மணி நேரங்கள் தான் ஜீவித்திருக்கப் போகிறேன்.

இந்தக் கதை பிரசுரம் பெறும் முன் செத்துப் போய்விடப் போகிறேன்.

*

அறுபத்தெட்டு வயசில் மரணித்து விடுவாய் என்று ஒரு ஜோஸ்யன் சொன்னான், பத்து வருஷம் முந்தி.

ஜோஸ்யம் பார்க்கிறது இஸ்லாத்தில் ஹராம் என்று சொல்லப்பட்டிருந்தாலும், சும்மா விளையாட்டுப் போல ஒரு ஜோஸ்யனிடம் கையை நீட்டினேன், சிநேகிதர்களோடு. அந்த ஜோஸ்யன் 68 என்று சொன்னதற்கு ப்ஸகண்ட் ஒப்பீனியன் பெறுவதற்காக இன்னொரு ஜோஸ்யனிடம் போனேன், சிநேகிதர்களுக்குத் தெரியாமல்.

முதல் ஜோஸ்யன் சொன்னதை ரெண்டாவது ஜோஸ்யனிடம் சொல்லிக் கருத்துக் கேட்டேன்.

ரெண்டாவது ஜோஸ்யன் ஒரு படி மேலே போய் சரியாய் அறுவத்தெட்டாவது பிறந்த நாள் அன்றைக்கு மண்டையைப் போடுவாய் என்றான்.

க்யூரியாஸிட்டி தாளாமல் மூணாவதாய் ஒரு ஜோஸ்யனிடம் போய், முதல் ரெண்டு பேர் சொன்னதைச் சொன்னபோது அந்த ஆள், ரெண்டாவது ஜோஸ்யன் சொன்னதை ஆமோதித்தான்.

அறுவத்தெட்டாவது பிறந்த நாளில் மரணம்.

இன்றைக்குப் பதினஞ்சாந் தேதி.

நாளைக்குப் பதினாறு.

பதினாறாம் தேதி எனக்குப் பிறந்த நாள்.

68 ஆவது பிறந்த நாள்.

நான் ரெடி.

ஆனால் நாளை நிகழப் போகிற என்னுடைய மரணம் எப்படி நேரப்போகிறது என்பது இன்னும் ஒரு புதிராய்த்தானிருக்கிறது.

அறுபத்தேழு வயசு வரை உடம்புக்கு ஒரு வியாதியும் வரவில்லை.

சர்க்கரை வியாதியோ, ரத்த அழுத்தமோ, நெஞ்சு வலியோ, எதுவுமே இல்லை.

மருந்துக்குக் கூட உடம்புக்கு ஒரு நோய் வரவில்லை.

இந்த ஆரோக்யத்தோடேயே போய்ச் சேர்ந்து விடுவது ஒரு வரப்ரசாதம் தான்.

கிழடு தட்டிப் போய் இழுத்துக் கொண்டு கிடப்பது நமக்கு வேண்டவே வேண்டாம். 68 வயசு என்பதில் எனக்குப் பூரண சம்மதம் என்பதால் எக்ஸ்டன்ஷனுக்காக ஆண்டவனிடம் அப்பீல் செய்யவில்லை.

நாளைக்கு எனக்கு மரணம்.

ஆனால் எப்படி?

மாரடைப்புக்கு வாய்ப்பே இல்லை.

சாலை விபத்து?

சாலை விபத்து என்றதும் டாக்டர் சித்தப்பா நினைவுக்கு வருகிறார்.

சாலை விபத்தில் செத்துப் போன சித்தப்பா.

வில்லிவாக்கத்திலிருந்த க்ளினிக்குக்கு அண்ணா நகரிலிருந்து தன்னுடைய மாருதி காரில் தான் போவார் சித்தப்பா.

அவ்வப்போது எங்கேயாவது போய்த் தாராளமாய் மாருதியால் இடித்துக் கொள்வார்.

அவர் இடிக்காத வேளைகளில் வேறு வாகனங்கள் வந்து மாருதி மேலே மூட்டும்.

இடிபாடுகளின் பின்விளைவாக, முன்னும் பின்னும் மாருதியில் ஏழு குறும் பள்ளங்கள் இருந்தன.

அன்றைக்குப் பார்த்து சித்தப்பா காரில் போகாமல் ஸ்கூட்டியையெடுத்துக் கொண்டு க்ளினிக்குக்குப் போனார்.

சாலை விபத்தில் போய் விட்டார்.

ஸ்கூட்டியில் போகாமல் மாருதியிலேயே

போயிருந்தால் சித்தப்பா தப்பித்திருப்பார். மாருதியில் பள்ளங்களின் எண்ணிக்கை மட்டும் எட்டாய் உயர்ந்திருக்கும்.

காலையில் நான் சாலையில் போகப் போவதில்லை.

சாலையில் போனால் தானே விபத்து?

ஆகையால் சாலை விபத்தும் ரூல்டு அவுட்.

பின் எப்படி மரணம்? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

சரி, நாளைக்கு என்ன அஜெண்டா?

அதிகாலையிலெழுந்து காலைக்கடன்களை முடிப்பேன்.

ஷேவ் செய்து விட்டுக் குளிப்பேன்.

சுபுஹ் தொழுகை தொழுது விட்டு குர்ஆன் ஓதுவேன்.

பிறகு, கரன்ஸிக் கவரைத் தலைமாட்டில் வைத்துக் கொண்டு நல்ல பிள்ளையாய்க் கட்டிலில் படுத்துக் கொள்வேன்.

வீட்டில் யாருமே இல்லாதது பெரிய வசதி.

வெளிக்கதவைத் தாழிட மாட்டேன். என் அறைக் கதவும் சும்மாதான் சாத்தியிருக்கும்.

என்னுடைய மரணம் எந்த ரூபத்தில் வந்து என்னை ஆட்கொள்ளப் போகிறது என்பது இந்த விநாடி வரை பயங்கரப் புதிராய்த் தான் இருக்கிறது.

கட்டிலில் மல்லாக்கப் படுத்தபடி காலையில் காத்திருக்கப் போகிறேன்.

கொய்ட் இன்ட்ரஸ்ட்டிங்.

நன்றி சொல்லி விட்டு, விடைபெற்றுக் கொள் வதற்காக அந்த மூன்று ஜோஸ்யர்களையும் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தேன்.

முதல் ஆள் எட்டு வருஷத்துக்கு முந்தியே போய்ச் சேர்ந்து விட்டாராம்.

தனக்குத்தானே அவர் ஜோஸ்யம் பார்த்துக் கொள்ளவில்லை போல.

மற்ற ரெண்டு பேரோடும் பேசினேன்.

அவர்களும் பாத்திரங்களாயிருக்கிற இந்தக் கதையைப் பற்றிச் சொன்னேன்.

அவர்கள் ரெண்டு பேரும் கணித்தபடி நாளைக்கு நான் இந்த உலகத்தைப் பிரியவிருப்பத்தைச் சொன்னேன்.

ரெண்டு பேரில் ஒருவர் மட்டும் என்னுடைய முகவரியைக் கேட்டுப் பெற்றுக் கொண்டார். "என்னுடைய' இறுதிச் சடங்கில் கலந்து கொள்கிறவராயிருக்கலாம்!

அடுத்த ஜோஸ்யரோட நம்பரையும் வாங்கிக் கொண்டார். அவரையும் கூட்டிக் கொண்டு வருவார் போல!

சரி வாசகர்களே. இந்தக் காகிதங்களைக் கவரில் போட்டு ஒட்டி, பத்திரிகை முகவரி எழுதி, ஸ்டாம்ப் ஒட்டி, போஸ்ட் ஆஃபீஸில் போய்ப் பெட்டியில் போட வேண்டும்.

அண்ணாநகரில் நாலு இருபதுக்கு லாஸ்ட் க்ளியரன்ஸ்.

விடைபெற்றுக் கொள்கிறேன் நண்பர்களே.

அஸ்ஸலாமு அலைக்கும்.

அனைவருக்கும் வணக்கம்.

***

பிற்சேர்க்கை :

பதினாறாந் தேதி.

“ஐயா, அது ஜோஸ்பர் சார் வீடுங்களா?”

“ஆமா, நாந்தான் பேசறேன். நீங்க யார் சார் பேசறீங்க?”

“நானும் ஒங்களப் போல கை ரேகை பாக்கறவன் தான். ஒரு பத்து வருஷத்துக்கு முந்தி நீங்களும் நானும் ஒரு பாய்க்கு ரேகை பாத்துச் சொல்லியிருக்கோம். அந்த ஆள் நேத்து என்ட்ட ஃபோன்ல பேசினார். ஒங்கட்டயும் பேசியிருப்பாரே?”

“ஆமா சார் பேசினார். இன்னிக்கி அவருக்கு அறுவத் தெட்டாவது பிறந்த நாளாம். இன்னிக்கி சாகப் போறேங்கறார் சார். நீங்களும் நானுந்தான் அவருக்கு அப்டி ஜோஸ்யம் சொன்னோமாம். எனக்கு ஒரே ஷாக். பதட்டத்ல நா அவர் ஃபோன் நம்பரயும் வாங்கிக்கல, அட்ரஸயும் கேட்டுக்கல.”

“நா கேட்டுக்கிட்டேன்..”

“வெரி குட் சார், வெரி குட். அந்த ஆள் செத்துப் போறேன்னு எதுவும் செஞ்சிக்கக் கூடாது சார்.”

“அவர் ஒண்ணும் செஞ்சிக்க மாட்டார். நாம தான் செய்யணும்.”

“சார், புரியல.”

“தான் இன்னிக்கி செத்துப் போறதா அவர் ஒரு கதை எழுதிப் பத்திரிகைக்கி அனுப்பிச்சிருக்கார். அந்தக் கதை பப்ளிஷ் ஆகிறபோது, தான் செத்துப் போயிருப்பேன்னு எழுதியிருக்கார். ஆனா ஒரு அதிசயம் நடந்தாத்தான் இன்னிக்கி அந்த ஆளுக்கு சாவு வரும். அந்த அதிசயத்துக்கு நாம தான் ஏற்பாடு பண்ணனும்.”

“என்ன சார் சொல்றீங்க?”

“ஜோஸ்யம் பொய்க்கக் கூடாதுங்கறேன்.”

“அதுக்காக?”

“அதுக்காக அந்த ஆள் செத்தே ஆகணும்.”

“நீங்க என்ன சார் இப்படிப் பேசறீங்க. அவரக் காப்பாத்த வழியே இல்லியா முருகான்னு நா தவிச்சிட்டிருக்கேன்! அவரோட அட்ரஸக் கொஞ்சம் சொல்லுங்களேன் சார், ப்ளீஸ்.”

“ஒங்களுக்கு அட்ரஸ் குடுக்க நா என்ன மடையனா! நீங்க வேற மாதிரி ஆளா இருக்கீங்களே தம்பி. நம்ம தொழிலுக்கு துரோகம் செய்ற ஆளா இருக்கீங்க. இதை நா ஓரளவுக்கு எதிர்பாத்தேன். அதான் நானே ஸிங்கிளா இந்த மேட்டர ஹாண்டில் பண்ணிட்டேன்.”

“சார், என்ன சார் பண்ணீங்க?”

“நா இப்ப சொல்றத ஒங்களுக்குள்ளயே வச்சிக்கிருங்க. இன்னிக்கிக் காலைல ஒம்போது மணிக்கி அந்த பாய் சாகப் போறார். அதுக்கு ஏற்பாடு பண்ணியாச்சு.”

“ஏற்பாடு பண்ணியாச்சுன்னா?”

“போட்டுத்தள்றதுக்கு ஒரு ஏஜன்ஸிய செட்டப் பண்ணியாச்சு. இப்ப மணி எட்டு அம்பத்தஞ்சு. இன்னும் ஒரு அஞ்சு நிமிஷம் பத்து நிமிஷத்ல போட்டுத் தள்ளிருவானுங்க. எழுத்தாளர் கதை சுமுகமா முடிஞ்சிரும். நம்ம ஜோஸ்யம் பலிச்சிரும். சரி, நா வச்சிர்றேன் தம்பி. பய்.”

“சார் வச்சிராதீங்க, சார், சார்.”

**(வடக்கு வாசல், மே 2009)**

# கார் காலம்

இன்றைக்குப் பத்தாந்தேதி.

பத்தாந்தேதி வந்தால் பரபரப்பாகி விடுகிறேன்.

என்னுடைய அவள் ஃபோன் பண்ணுகிற நாளில் லையா!

பத்தாந்தேதி பத்தாந்தேதி ராத்திரி எட்டிலிருந்து பத்துக்குள் தவறாமல் ஃபோன் செய்வாள். இது இவளுக்கும் தெரியும்.

ஃபஸ்ட் நைட்டில் எல்லாவற்றையும் கன்ஃபஸ் செய்து விட்டனில்லையா !

சமயத்தில் இவளே ரிஸீவரை எடுப்பாள்.

ஒரு கால் நிமிஷம் குசலம் விசாரித்துவிட்டு ரிஸீவரை என்னிடம் கொடுத்துவிட்டு, நாகரிகமாய் நகர்ந்து போய்விடுவாள். இந்த விஷயத்தில் இவளுடைய பெருந் தன்மை பல சந்தர்ப்பங்களில் என்னை சங்கடப்படுத்தும்.

இன்றைக்கு சாயங்காலம் ஷாப்பிங் போக வேண்டுமென்று இவள் சொன்னபோது நான் தயங்கி யதையும் தட்டிக்கழிக்க முயன்றதையும் புரிந்து கொண்டு, நெருங்கி வந்து கிசுகிசுத்தாள்.

“இன்னிக்குப் பத்தாந்தேதி, மாசத்ல ஒங்களுக்குப் பொன்னான நாள்னு நேக்குத் தெரியாதான்னா? அந்தக் கடைல ஸேல் போட்டிருக்கா. இன்னிக்கித்தான் கடேசி நாள். சட்டுபுட்டுன்னு பர்ச்சேஸ் பண்ணிட்டு ஏழு ஏழரைக்கெல்லாம் வந்துருவோம். ஃபோன் எட்டு மணிக்கி மேல தான வரும், கெளம்புங்கோன்னா, ப்ளீஸ்.”

ஆட்டோவில் போகிற போது, கை விட்டுப் போன கடந்த காலத்தை அசை போட்டபடியே போனேன்.

அவளோடு காதல் வசப்பட்டிருந்த கல்லூரி நாட்கள்... சுற்றித் திரிந்த காதல் ஸ்தலங்கள்... சேர்ந்து பார்த்த சினிமாக்கள்... கல்யாணத்துக்குக் குறுக்கே நின்ற ஜாதிப் பிரச்சனை....

பிறகு இவளைக் கைப் பிடித்தது... பிஸினஸ் ஆரம்பித்தது... கார் வாங்கினது... வாழ்க்கையில் வளர்ந்தது... திடீரென்று ஒரு சாபமாய் வந்திறங்கிய வியாபார நெருக்கடியில் நஷ்டப்பட்டது... காரை விற்க நேர்ந்தது... வாழ்விலும் தாழ்விலும் பத்தாந்தேதிக்குக் காத்துக் கிடப்பது...

இருந்தாற்போல இவள் கூவினாள்: "ஏன்னா, நம்மக் கார்ன்னா! நம்மக் கார்!!”

ஆமாம். ஆறு மாசத்துக்கு முன்னாள் விற்கப்பட்ட என்னுடைய கார் எங்கள் ஆட்டோவைக் கடந்து வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. ஆறு மாசத்துக்குப் பின்னால் முதல் தடவையாய் அந்தக் காரைப் பார்த்தது பரவசமாயிருந்தது.

ஆனால் என்னைவிட இவளுக்குப் பரவசம் நிறைய.

நாங்கள் கார் வாங்கினதில் ரொம்பப் பெருமை இவளுக்கு.

இந்தக் காரில்தான் டிரைவிங் கற்றுக் கொண்டாள்.

காரில் தனியாய்ச் சுற்றுவது இவளுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு.

மார்க்கெட்டுக்குப் போவதற்குக் கார், போஸ்ட் ஆஃபீஸுக்குப் போவதற்குக் கார், பியூட்டிப் பார்லருக்குக் கார், தோழிகளை விஸிட் செய்யக் கார் என்று எப்போதும் கார் எதற்கும் கார் என்று இருந்தவள், கார் கை மாறிய அன்று கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தாள்.

"நம்மக் கார நா ரொம்ப மிஸ் பண்றேன்னா' என்று கண்கள் பனிக்கச் சொல்லுவாள்.

இன்றைக்கும் இவள் கண்களில் கண்ணீர்.

இது குதூகலக் கண்ணீர்.

“ஏன்னா, ஆட்டோவக் கொஞ்சம் வேகமா ஓட்டச் சொல்லுங்கோன்னா.”

“எதுக்கு?”

“நம்மக் கார் பக்கத்ல போகச் சொல்லுங்க. நா அதத் தொட்டுப் பாக்கணும்னா”

“அதெல்லாம் நடக்கற காரியமில்லம்மா. நாம இப்ப மவுன்ட்ரோட்ல போயிண்டிருக்கோம்.”

“ப்ளீஸ், கொஞ்சம் ஃபாஸ்ட்டாப் போகச் சொல்லுங் கோன்னா. ட்ராஃபிக் ஸிக்னல்ல கார் நிக்கும். நா தொட்டுப் பாக்கணும்னா. ப்ளீஸ்னா.”

என்னுடைய தாடையைப் பற்றிக் கொண்டு தவிப்போடு கெஞ்சினாள்.

பாவம், இவளுடைய ஆசை இன்றைக்கு நிறைவேற வில்லை. இவளுடைய கார் எங்கேயோ மறைந்துவிட்டது.

ரொம்ப அப்ப்ஸட் ஆகியிருந்தவளை நான் தேற்றினேன்.

“நம்மக் கார வாங்கினவா அட்ரஸ் எங்கிட்ட இருக்கேம்மா, நா ஒன்ன அங்கக் கூட்டிண்டுப் போறேன். நீ ஆச தீரத் தொட்டுப் பாக்கலாம். வேணும்னா அவாளாண்ட பர்மிஷன் வாங்கிண்டு ஒரு ரவுண்ட் போயிட்டுக்கூட வரலாம். நா அரேய்ஞ்ஜ் பண்றேன்.”

“நிச்சயமா அரேய்ஞ்ஜ் பண்ணுவேளா?”

“நிச்சயமா.”

“ப்ராமிஸ்?”

“ப்ராமிஸ்.”

நான் உறுதிமொழி கொடுத்த பின்னால்தான் இவள் சமனப்பட்டாள்.

ராத்திரி டெலிஃபோன் மணியடித்தபோது பாத்ரூமில் இருந்தேன்.

அவசரமாய் வெளியே ஓடி வந்த போது, வழக்கம் போல் இவள் ஃபோனில் அவளிடம் நலம் விசாரித்துக் கொண்டிருந்தாள்.

நான் வந்ததும் ரீஸீவரை என் கையில் தந்தவள், எப்போதும் போல் விலகிப் போகவில்லை. நான் அவளிடம் பேசுவதையே பார்த்தவாறிருந்தாள்.

இவள் பார்த்துக் கொண்டிருக்கையில் அவளிடம் பேசிக் கொண்டிருப்பது சர்வ சங்கடமான சோதனை யாயிருந்தது.

என்றைக்கும் ஒதுங்கிக் கொள்கிறவள், இன்றைக்கு இவளுடைய பெருந்தன்மையில் ஏதோ மாற்றம் நிகழ்ந்து விட்டது மாதிரி, நான் பேசுவதையே பார்த்தவாறிருந்தாள்.

மறுமுனையில் பேசிக் கொண்டிருந்த அவள், இன்றைக்கென்று பார்த்து, பழைய கதைகளையெல்லாம் கிளறோ கிளறென்று கிளறிக் கொண்டிருக்க, அந்தப் பழைய நினைவுகளால் ஆட்கொள்ளப்பட்டு என் கண்கள் பனிப்பதை என்னால் கட்டுப்படுத்த இயலவில்லை. பேசி முடித்து, ஒரு வழியாய் ரிஸீவரை வைத்துவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்ட போது இவள் அந்நியோன்னியமாய் நெருங்கி வந்தாள்.

“மாசாமாசம் அவளண்ட பேசறச்ச இப்டித்தான் அழுவேளா?”

ஆமாம் என்று சொல்லுவதா இல்லையென்று சொல்லுவதா என்று புரியாத சங்கடத்தில் விழியோரம் திரும்பவும் கண்ணீர் துளிர்த்தது.

"ஏன்னா, நீங்க அவள ரொம்ப மிஸ் பண்றேளா' என்று காதருகில் கேட்டாள். இருந்திருந்தாற்போல குரல் சற்று உயர்ந்தது.

“ஏன்னா, அவளத் தொட்டுப் பாக்கணும்னு ஆசப் படறேளா?”

நான் பார்வையை அவள் பக்கம் திருப்பித் தீர்க்கமாய்ப் பார்தேன்.

"வேண்டான்னா, அப்டிப் பாக்காதேங்கோ, நேக்கு பயம்மா இருக்கு' என்று மேலும் குரலை உயர்த்தினாள்.

“நீங்க பாக்கறதப் பாத்தா, ஆமாண்டி நேக்கு அவளத் தொட்டுப்பாக்கணும் போல இருக்கு, அவளோட ஒரு ரவுண்டு போகணும் போல இருக்கு, நீ தாண்டி அரேய்ஞ்ஜ் பண்ணனும்னு சொல்ற மாதிரி இருக்குன்னா”.

குரல் உடைந்து போய் அழுதாள். பொங்கிப் பொங்கி அழுதாள்.

இவள் அழுது தணிய நான் காத்திருந்தேன்.

தணிந்ததும் உறுதியான குரலில் பேசினாள்.

“போதும்னா இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு. இதுக்கு மேல நேக்குத் தாளாது. அடுத்த மாசம் அவ ஃபோன் செய்றச்ச எங்காத்துக்காரருக்கு இனி ஃபோன் செய்யாதேடியம்மா, இதோட முடிச்சிருன்னு சொல்லிட்டு ரீஸீவர வச்சிரப் போறேன். அவளோட பேச இனி ஒங்கள அலவ் பண்ண மாட்டேன். ப்ளீஸ், என்ன மன்னிச் சிருங்கோ.”

ஒரு சிருங்கார சஹாப்தம் ஒரு வழியாய் முடிந்தே போனதோ என்கிற விசனத்தில் நான் மூழ்கிக் கொண்டிருந்தபோது இவள் திரும்பவும் பேசினாள்:

“நம்மக் கார நா மறந்துட்டேன்னா. ஒரேடியா மறந்துட்டேன். அத இனி பாக்கணும்னோ, தொட்டுப் பாக்கணும்னோ, ஒரு ரவுண்டு போகணும்னோ நேக்கு ஆசையில்லை. இல்லவே இல்லை. நீங்க எனக்காக எதுவும் அரேய்ஞ்ஜ் பண்ண வேண்டாம். பண்ணவே வேண்டாம். என்ன, புரியறதா?”

எனக்குப் புரிந்து தொலைத்து விட்டது.

சில சங்கதிகள் புரியாமலேயிருந்தால் எவ்வளவு சொகம்மாயிருக்கும்!

**கவிதை உறவு, 37 ஆவது ஆண்டுமலர், மே 2009.**

# சின்னஞ்சிறிய தீவு ஒண்டு

மெஜஸ்ட்டிக் ஸிட்டி என்று பெரிதாய் ஆங்கிலத்தில் எழுதியிருந்த வண்ணமயமான நாலு மாடிக் கட்டிடத்துக்குள்ளே பிரவேசித்தாள் வேணி.

ராசாவின் கையை வலது கையினால் இறுகப் பற்றியிருந்தாள்.

இடது கையில் கனமான பெட்டி ஒண்டு.

ராசாவும் அந்தப் பெட்டியும் மட்டும் தான் அவளுடைய இன்றைய உடமைகள்.

விசாலமான அந்தக் கட்டிடத்துக்குள்ளே அப்பழுக்கில்லாத தரையில், தாயின் கையைப் பிடித்தபடி நடந்து கொண்டிருந்த ராசாவுக்கு, அவனுக்கு முன்னால், அவனைப் போலவே, தாயின் கையைப் பற்றியபடி நடந்து கொண்டிருந்த அவனுடைய வயதையொத்த சிறுவன்மேல் கவனமிருந்தது.

பிழை.

கவனம் அந்தச் சிறுவன் மேலல்ல, அந்தச் சிறுவனின் கையிலிருந்த பொப்காண் பொட்டலத்தின் மேல்.

அந்தப் பொட்டலத்திலிருந்து ரெண்டு பொப்காண் முத்துக்கள் கீழே சிந்தி, சுத்தமான அந்தத் தரையில் கிடந்து கண்களை உறுத்தின.

ராசாவுக்கு, குனிந்து அதை எடுக்க முடியாமல் அம்மாவின் வேகமும், கைப்பிடி இறுக்கமும் இருந்தது.

இறுக்கமும் வேகமும் இல்லாவிட்டாலும் கூட அதைக் குனிந்து எடுக்க இயலாது. அம்மா சத்தம் வைப்பாள்.

கீழே கிடந்த பொப்காணைத் திரும்பிப் பார்த்தபடியே அம்மாவோடு நடந்தான். ஆசை அடக்க முடியாமற் போனபோது, நடையைத் தளர்த்தித் தரித்து நின்று அம்மாவை ஏறிட்டுப் பார்த்தான்.

“ஒண்டுக்கு வருகுது அம்மா.”

“இங்கை எங்கையடா ஒண்டுக்குப் போவாய்? பேசாமல் நட.”

“அங்கை முன்னாலை இடம் இருக்குது அம்மா. நான் பார்த்தனான். நீங்கள் இருங்கோ, நான் ஓடிப் போயிட்டு வந்துடுறன்.”

“நான் இங்கையே நிக்கிறன் மகன், கெதியாய்ப் போயிட்டு வா.”.

அம்மாவிடமிருந்து விடுதலை பெற்று ராசா வேகமாய் வந்தான், பொப்காண் சிந்தியிருந்த இடத்துக்கு.

ஆஹா, அந்த ரெண்டு பொப்காண் மணிகளும் அங்கேயேதான் கிடந்தன, யார் காலிலும் பட்டுச் சிதைந்து போகாமல்.

விரைவாய் வந்து ராசா அவற்றைப் பொறுக்கக் குனிந்த அதே விநாடியில். பொப்காண் பெருக்கித் தள்ளப்பட்டுக் குப்பையாய்ப் போனது.

பெருக்கித் தள்ளிய துப்புரவுப் பெண்ணைத் தலைநிமிர்த்திப் பார்த்தான் ராசா, ஏமாற்றத்தோடு.

அவள் சிரித்தாள் அவனைப் பார்த்து.

பிறகு, அவனுக்குப் புரியாத சிங்களத்தில் ஏதோ சொன்னபடி அவன் கையைப் பிடித்து வழிநடத்திப் போனாள், கொஞ்சம் விலகியிருந்த பொப்காண்

கவுன்ட்டருக்கு.

அவள் வாங்கித் தந்த பொப்காண் பொட்டலத்தை ஆசையோடு பெற்றுக் கொண்டு, அம்மா தன்னைத் தேடுமுன் அவளிடம் போய்ச் சேர்ந்து விடவேண்டுமென்று ராசா ரெண்டு எட்டு எடுத்து வைத்தபோது அம்மாவே அங்கே வந்து விட்டாள்.

“என்ன மகன், ஒண்டுக்குப் போக இவ்வளவு நேரமே? இதென்ன கையிலை, யார் வாங்கித் தந்தாங்கள், ம்? யாரிட்டையும் கை நீட்டி வாங்குகிறது நல்ல பழக்கமே?”

“அம்மா, இந்த ஆன்ட்டிதான் வாங்கித் தந்தவ. ரொம்ப நல்ல ஆன்ட்டி அம்மா.”

அம்மா அந்த ஆன்ட்டியைப் பார்த்தாள்.

அந்தப் பெண் புன்னகையோடு சிங்களத்தில் சொன்னது இவளுக்குப் புரியவில்லை. அய்போவன் என்று அவளை நோக்கிக் கை கூப்ப வேண்டும் என்று மட்டும் தோன்றியது.

கூப்பினாள்.

இவளுக்குத் தெரிந்த ஒரே சிங்கள வார்த்தையை அந்தப் பெண்ணின் மேல் பிரயோகிக்கவும், அந்தப் பெண் இவளை நோக்கி சகஜமாய் சிங்களத்தில் கதைக்க ஆரம்பித்து விட்டது வேணிக்கு சங்கடமாய்ப் போனது.

இருந்தாலும் தன் மகனுக்குப் பொப்காண் வாங்கித் தந்து உபசரித்த அந்தப் பெண்ணின் மேலே வேணிக்கு மரியாதை இருந்ததால், தன்னுடைய சந்தேகத்தை அவளிடம் கேட்டுத் தெளிவு பெற முயற்சிக்கலாம் என்று தெரிந்தது.

தமிழிலேயே அவளிடம் தன்னுடைய கேள்வியை வைத்தாள்.

“அம்மா, இந்தக் கட்டிடத்திலைதான் பாஸ்ப்போட் ஒஃபீஸ் இருக்குது எண்டு சொன்னனாங்கள். எங்கை இருக்குது எண்டு சொல்லேலுமே?”

இவளுடைய தமிழ் அவளுக்குப் புரிய வாய்ப்பில் லையானாலும், ஒஃபீஸ், பாஸ்ப்போட் என்கிற வார்தைகளைப் புரிந்து கொண்டு அவள் சொன்ன சிங்களத்திலிருந்து, அந்த அலுவலகம் இந்தக் கட்டிடத்தில் இல்லை என்று வேணியால் புரிந்து கொள்ள முடிந்தது. திரும்பவும் அவளை நோக்கிக் கரங்குவித்துவிட்டு அங்கேயிருந்து வெளியேறினாள், மகனோடும், பெட்டி யோடும், ஏமாற்றத்தோடும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிக்கிடுகிறபோது சொன்னார்கள், சிங்களம் தெரியாவிட்டால் பரவாயில்லை, கொழும்பு நகரத்தில் தமிழைக்கொண்டே சமாளித்து விடலாம் என்று. ஆனால், காலையில் ரத்மலான விமான நிலையத்தில் வந்து இறங்கியது முதல், விமான நிலயத்தில், பஸ்ஸில், சாலையில், மெஜஸ்ட்டிக் ஸிட்டியில் என்று இந்த நிமிடம் வரை வேணி எதிர்கொண்ட அனைவருமே

தமிழ் அறவே தெரியாத சிங்களவர்களாவே அமைந்து போனார்கள்.

தமிழச்சி என்று இவளுடைய முகத்தில் முத்திரை குத்தியிருந்தாலும், யாருமே இவளோடு தமிழில் கதைக்கிறார்களில்லை.

நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது.

தமிழர் ஒருவரை உடனடியாக சந்தித்தே ஆக வேண்டும்.

அப்போது தான் பிரச்சனையில்லாமல் வேலை கெதியாய் முடியும்.

அந்தக் கட்டிடத்திலிருந்து வெளிக்கிட்டதும் வெளியே நின்றிருந்த ஆட்டோவை சமீபித்தாள்.

ஆட்டோ சாரதியிடம் துணிந்து தமிழில் பேச்சுக் கொடுத்தாள்.

“அண்ணை, நீங்கள் தமிழ்க் கதைப்பீங்களே?”.

"ஓம் தங்கச்சி, தமிழ்க் கதைப்பன்' என்று வந்த பதிலைக் கேட்டதும் பெரிய நிம்மதி ஏற்பட்டது.

"எங்கை போக வேணும் தங்கச்சி' என்று ஆட்டோக் காரரிடமிருந்து வந்த கேள்விக்கு நம்பிக்கையோடு பதில் தந்தாள்.

“அண்ணை, யாழ்ப்பாணத்திலையிருந்து வாறம். பொடியனுக்குப் பாஸ்ப்போட் எடுக்கவேணும். பாஸ்ப்போட் ஓஃபீஸ் இந்தக் கட்டிடத்திலை தான் இருக்குது எண்டு சொன்னனாங்கள். அதுதான் ரத்மலானையிலிருந்து நேரா இங்காலை வந்தம். ஆனால், அது இங்கை இல்லையெண்டு சொல்லுகினம்.”

"உது இந்தக் கட்டிடத்தில் இல்லையம்மா' என்றார் ஆட்டோக்காரர்.

“இந்தக் கட்டிடத்துக்குப் பக்கத்திலை தான்

ஒரு ஒழுங்கையிலை முந்தி இருந்தது. இங்கையிருந்து

மாத்திட்டினம். இப்ப பொரள்ளையிலை இருக்குது தங்கச்சி.”

“இங்கையிருந்து கனதூரமே அண்ணை?”

“அப்பிடியொண்டும் தூரமில்லையம்மா. போவம், ஏறுங்கோ.”

வேணியும் ராசாவும் ஆட்டோவில் ஏறிக் கொண்டார்கள்.

ஒரு வழியாய் ஒரு தமிழரின் வாகனம் தங்களுக்கு அமைந்து போனது வேணிக்கு வலு சந்தோஷமாய் இருந்தது.

ஆனாலும் இந்த ஆட்டோக்காரரைக் குறித்து ஒரு சந்தேகம் இருந்தது.

கேட்டாள்.

“பொரள்ளைக்குப் போக சல்லி ரொம்ப எடுப்பீங்களே அண்ணை?”

அவர் சிரித்தார்.

“சல்லியே வேண்டாம் தங்கச்சி.”

“பகிடி பண்ணாதையுங்கோ அண்ணை.”

“பகிடியெல்லாம் இல்லை தங்கச்சி. வேலை முந்தி முடியட்டும். சல்லியைப்பத்தி அப்புறம் கதைப்பம்.”

“அண்ணைக்கும் யாழ்ப்பாணமே?”

“இல்லையம்மா, கொழும்புதான்.”

“அப்ப, நீங்கள் சிங்களம் வடிவாய்க் கதைப்பினம் தானே அண்ணை. சிங்களம் கதைக்கத் தெரிஞ்ச தமிழ்க்கார ஆட்டோ கிடைச்சது முருகன் செயல் அண்ணை. அண்ணை, நீங்கள் கொழும்பிலை எனக்குப் பெரிய உதவி ஒண்டு செய்ய வேணும் அண்ணை.”

“என்ன உதவி எண்டாலும் செய்யிறன் தங்கச்சி.”

“அண்ணை, எனக்குப் பாஸ்ப்போட் இருக்குது. ராசாவுக்குத்தான் இல்லை. பொரள்ளையிலை போய்ப் பொடியனுக்கு பாஸ்ப்போட் எடுக்க வேணும். எடுத்திட்டு அப்பிடியே கட்டுநாயக்க போய் ஃப்ளைற் ரிக்கற் எடுத்து மெட்ராஸ்க்கு ப்ளேன் ஏறவேணும். விவரம் ஒண்டும் எனக்குத் தெரியாது அண்ணை. நீங்கள் தான் கடைசி வரைக்கும் உதவி செஞ்சு எங்களை ப்ளேன் ஏத்தி விட வேணும்.”

ஆட்டோக்காரருக்கு மீண்டும் சிரிப்பு.

“உலகம் தெரியாத பிள்ளையாய் இருக்கிறீரே தங்கச்சி, எப்பிடி தனியாய் மெட்ராஸ் போவீர்?”

“துணைக்கி என்ரை ராசா இருக்கிறவர் தானே அண்ணை.”

“ராசா இருக்கிறவர் தான். ஆனால் தங்கச்சி, பாஸ்ப்போட் எடுக்கிறது கடையிலை சாமான் வாங்குறது போலை இல்லை. இண்டைக்கி விண்ணப்பம் வைச்சா, பாஸ்ப்போட் கைக்கு வர ரெண்டு கிழமை ஆகும்.”

“ஐயோ, ரெண்டு கிழமையே!”

“ஓம் தங்கச்சி. அதுக்குப் பின்னாலை உங்களுக்கும் ராசாவுக்கும் இண்டியன் விஸா எடுக்க வேணும்.”

“இந்தியாவுக்கு விஸா தேவையில்லையெண்டு சொன்னனாங்கள்?”

“ஆரோ பிழையாய்ச் சொல்லியிருக்கினம். இந்தியா விலையிருந்து சிறிலங்காவுக்கு வர விஸா தேவையில்லை. ஆனால் சிறிலங்காவிலையிருந்து இந்தியாவுக்குப் போக விஸா எடுக்கத்தான் வேணும். அது பரவாயில்லை, ஒரு நாள் வேலை தான். எப்பிடியெண்டாலும் நீங்கள் ரெண்டு கிழமை கொழும்பிலை நிக்கத்தான் வேணும்.”

ரெண்டு வாரம் கொழும்பில் தங்க நேரும் என்கிற விடயம் வேணியைக் கலவரப்படுத்தி விட்டது.

சொந்த பந்தங்கள் இல்லாத, மொழியும் தெரியாத இந்த நகரத்தில் எங்கே தங்குவது எப்படித் தங்குவது!

பொரள்ளைக்கு வந்து சேர்ந்த பிறகு கூட ஆட்டோவிலிருந்து இறங்கத் தோன்றவில்லை வேணிக்கு.

“பாஸ்ப்போட் ஓஃபீஸ் வந்திட்டது தங்கச்சி.”

“வேண்டாம் அண்ணை. நாங்கள் யாழ்ப்பாணத்துக்கே திரும்பிப் போறம்.”

“அப்ப, ராசாவுக்குப் பாஸ்ப்போட்?”

“பாஸ்ப்போட் எடுக்க வேண்டாம் அண்ணை. கொழும்பிலை ரெண்டு கிழமை நிக்க ஏலாது. இந்த ஊரிலை யாரையும் தெரியாது அண்ணை.”

கண்களில் வேணிக்குக் கண்ணீர் துளிர்த்தது.

துளிர்த்திருந்த கண்ணீர், முத்துக்களாய்த் திரண்டு கன்னங்களில் உருண்டது, அடுத்து ஆட்டோக்காரர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு.

“அண்ணை அண்ணையெண்டு வாய் நிறைக் கூப்பிடுறீர், பிறகு இந்த ஊரிலை யாரையும் தெரியாது, இங்கை நிக்க ஏலாது எண்டு சொல்லுறீர், என்ன தங்கச்சி இது!”

“அண்ணை, நீங்க என்ன சொல்லுறீங்கள்!”

“இந்த அண்ணை வீட்டிலை இந்தத் தங்கச்சி எத்தனை நாள் வேணுமெண்டாலும் நிக்கலாம் எண்டு சொல்லுறன்.”

ஆட்டோவிலிருந்து இறங்கி வேணி, அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டாள்.

“ரொம்ப நன்றி அண்ணை. ரொம்ப ரொம்ப நன்றி. மெட்ராஸுக்குப் போக முடியாமல் போயிருமோ, ராசாவின்ரை அப்பாவைப் பார்க்க முடியாமலேயே போயிருமோ எண்டு பயந்து போனன் அண்ணை. இந்த நன்றியை மறக்கவே மாட்டன் அண்ணை. யாருங்கோவன் அண்ணை, இதுகூட எங்கட நல்லூர் முருகனின்ரை வேலை தான்!”

*

பாஸ்ப்போட் ஓஃபீஸில் விண்ணப்பம் கொடுத்து விட்டு ஆட்டோவில் திரும்பிக் கொண்டிருந்தபோது ராசாவின் அப்பாவைக் குறித்துப் பேச்சு வந்தது.

அவர் சென்னைக்குப் போய் மூண்டு வருஷங்கள் ஆகிவிட்டதையும், ராசாவினுடைய படிப்பையும் எதிர்காலத்தையும் உத்தேசித்தும், கணவனோடு ஒரு நிம்மதியான வாழ்க்கை வாழ்கிற சந்தோஷமான எதிர்பார்ப்புகளோடும் சென்னை செல்லவிருப்பதை வேணி ஆட்டோக்காரரோடு பகிர்ந்து கொண்டாள்.

“அங்கை மெட்ராஸிலை வளசரவாக்கம் எண்டு ஒரு இடம் இருக்குதாம். யாழ்ப்பாணத்து சனம் கனபேர் வளசரவாக்கத்திலை இருக்கினமாம். ராசாவின்ரை அப்பாவும் அங்கைதான் நிக்கிறவர்.”

ஆட்டோக்காரரின் வீட்டையடைந்த போது அங்கே ஓர் ஆச்சர்யம் வேணிக்காக் காத்திருந்தது.

இந்த ஓர் ஆளைத்தவிர வீட்டில் யாருமே இல்லை.

அதைப்பற்றி வேணி கேட்டதற்கு அவர் சொன்னார், போன வருடம் கொழும்பில் நடந்த தற்கொலைப்படைத் தாக்குதலொன்றில், அந்த பாதையாய்ப் போய்க் கொண்டிருந்த தன்னுடைய மனைவி பலியாகிப் போன துயரத்தை.

"தமிழனுக்கு எங்கை போனாலும் நிம்மதியான வாழ்க்கை இல்லை தான் போலக் கிடக்குது. எங்களுக்கு யாழ்ப்பாணத்திலையும் மரணம் தான், இங்கை கொழும்பிலையும் மரணம் தான்' என்று வேணி வருத்தப்பட்டதற்கு, "மனித வாழ்க்கையே நிரந்தரமில்லாதது தானே தங்கச்சி' என்றொரு தத்துவம் ஆட்டோக் காரரிடமிருந்து பதிலாய் வந்தது.

“உலகம் பூராவும் இப்ப நிச்சயமில்லாத வாழ்க்கையாய்த்தான் கிடக்குது. ஆருக்கு எப்பிடி எந்த நேரத்திலை மரணம் வரும் எண்டு சொல்ல முடியாது. இதிலை தமிழனென்ன சிங்களவனென்ன!”

இல்லத்தரசி இல்லாததால் ஒழுங்கீனமாய்க் கிடந்த அந்த வீட்டை வேணி ஒழுங்கு படுத்தினாள்.

அடுக்களைக்குள் எட்டிப்பார்த்த போது அடுப் பெரிந்ததற்கான அறிகுறியே தென்படவில்லை.

ஆட்டோக்காரர் ஒரு தனிக்கட்டை.

போகிற போக்கில் எதையாவது வயிற்றுக்குள்ளே போட்டுக் கொண்டு போய்க் கொண்டே இருப்பார் போல. சமையலுக்கு அவசியமே இல்லை.

"அண்ணை, நான் இங்கை இருக்கேக்குள்ளை தினமும் குசினியிலை அடுப்பு எரியும். தினமும் மூண்டு வேளை சமையல் நடக்கும். அரிசி, பருப்பு, எண்ணை எல்லாம் வாங்கி வாருங்கோ' என்று வேணி ஆணையிட, சமையலறைச் சாதனங்கள் வந்து சேர்ந்தன. குசினியில் அடுப்பு மூட்டப்பட்டது.

“இதென்ன அண்ணை வீட்டிலை புத்தர் படம் மாட்டி வைச்சிருக்கிறீங்கள்!”

“பக்கத்திலை முருகன் படமும் இருக்குது, கண்ணிலை படேல்லையே?”

“ஆனால், புத்தர் படத்தைவிட முருகன் படம் சின்னதாயிருக்குது அண்ணை.”

“முருகன் மனசுக்குள்ளை பெரிசா இருக்கிறவர் தானே தங்கச்சி!”

இதுபோன்ற சரளமான உரையாடல்கள் தினசரி நடந்து கொண்டிருந்தன.

ஊரைச் சுற்றிக் காண்பிக்கிறேன் என்று ஆட்டோக் காரர் கூப்பிடுகிற போதெல்லாம் வேணி வேண்டவே வேண்டாமென்று மறுத்து விட்டாள்.

“கொழும்பிலை நூறு யாருக்கு ஒரு பரிசோதனை நிலையம் வச்சிருக்கனமே அண்ணை. இந்த சிங்களப் பொலிஸ்காரனையும் ஆமிக்காரனையும் கண்டாலே எனக்கு ஆகுதில்லை.”

வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தாலும் கூட ரெண்டு வாரம் வேகவேகமாய் ஓடிப் போனது.

ராசாவுக்குப் பாஸ்ப்போட் எடுக்கிற நாளில் ஆட்டோவில் போய்ப் பாஸ்ப்போட் எடுத்தாகி விட்டது.

அடுத்த நாளே இண்டியன் விஸô வழங்குகிற ஏஜென்ஸியில் போய், க்யூவில் நின்று விஸô்வும் எடுத்து முடிந்தது.

தொடர்ந்து மெட்ராஸுக்கு விமான ரிக்கற்.

ஆட்டோக்கார அண்ணை இல்லாவிட்டால் இது எதுவுமே சாத்தியப்பட்டிருக்காது.

சென்னைக்கு விமானமேறுவதற்கு முந்தின நாள் ராத்திரி, அவர் ஒரு ஸþட்கேஸோô்டு வந்தார்.

கீழே சக்கரம் பதித்த ஸþட்கேஸ்.

“தங்கச்சி, அந்த கனமான பெட்டியை இங்கையே விடும். உன்ரையும் ராசாவின்ரையும் ஞாபகமாய் அது இங்கையே இருக்கட்டும். சக்கரம் வைச்ச இந்தப் பெட்டி பாவிக்க நல்ல வசதி. உருட்டிக் கொண்டு போக வலு ஈஸி.”

*

அடுத்த நாள் காலையில், சக்கரம் வைத்த பெட்டியை ராசாவே வீட்டிலிருந்து ஒழுங்கைக்கு இழுத்து வந்தான், ஆட்டோவில் ஏற்றுவதற்கு.

கணவனை மூண்டு வருஷங்களுக்குப் பிறகு பார்க்கப் போகிற குதூகலம் ஒரு புறம் இருந்தாலும், இந்த அருமையான ஆட்டோக்கார அண்ணனை இனி எப்போது பார்க்கப் போகிறோம் என்கிற சோகமும் வேணியின் மனசுக்குள் கனத்துக் கிடந்தது.

இந்த ரெண்டு வாரத்து உறவில் ராசாவும் மாமா மாமா என்று அவரோடு ஒட்டிக் கொண்டான்.

*

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அரைக் கிலோ மீற்றர் தொலைவிலேயே வாகனங்களிலிருந்து இறங்கி, பாதுகாப்பு சோதனைக்குப் பிறகு, விமான நிலைய பஸ்ஸில் தான் ஏர்ப்போட்டுக்குப் போக வேண்டுமென்று விதி இருக்கிறது.

ஆட்டோவிலிருந்து இறங்கிக் கொண்டதும் வேணிக்கு அழுகை வரப் பார்த்தது.

"சந்தோஷமாய்ப் போய்ட்டு வாரும் தங்கச்சி' என்று ஆட்டோக்கார அண்ணை புன்னகைக்க முயன்றார்.

“ராசா, இந்த மாமாவை மறந்துருவீரே?”

“மறக்கவே மாட்டன் மாமா.”

“ராசா பொய் சொல்லுறீர். இந்த ஆட்டோக்கார மாமாவை மறந்துருவீர். நீர் மறக்காமலிருக்கத்தான் ராசாவுக்காக மாமா இந்த ஆட்டோ பொம்மையை வாங்கி வந்தனான்.”

ஆட்டோவில் மறைத்து வைத்திருந்த ஒரு குட்டி ஆட்டோவை எடுத்து அவர் ராசாவிடம் நீட்டினார்.

“இந்த ஆட்டோ பொம்மையை வச்சு விளையாடற போதெல்லாம் என்ரை ராசாவுக்கு இந்த ஆட்டோக்கார மாமா ஞாபகத்துக்கு வரவேணும், என்ன?”.

ஆட்டோக்கார மாமாவை ராசா இறுகக் கட்டிக் கொண்டான்.

பாசப் பிணைப்பிலிருந்து அவனை விடுவித்துப் பிரியா விடை கொடுத்த போது, "அண்ணை, உங்களை ஒண்டு கேக்க வேணும்' என்றாள் வேணி.

“இன்னும் ஏன் அண்ணை நீங்கள் அண்ணியை நினைச்சிக் கொண்டே இருக்க வேணும்? வடிவான ஒரு தமிழ்ப் பெட்டையாய்ப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் தானே அண்ணை?”.

"தமிழ்ப் பெட்டை தானே, வடிவாய்க் கிடைச்சாப் பண்ணிக் கொள்ளலாம் தங்கச்சி' என்று அண்ணை சிரித்தார்.

"அப்புறம் இன்னொண்டும் கேக்க வேணும் அண்ணை' என்று அடுத்த கேள்வியை முன் வைத்தாள் வேணி.

“ரெண்டு கிழமை சேர்ந்து இருந்தம், எங்களுக்கு எவ்வளவோ உதவி செஞ்சனீங்கள், உங்கட பேரை நானும் கேக்கலை, நீங்களும் சொல்லேல்லை அண்ணை.”

"பேர் எதுக்கு தங்கச்சி?' என்று அவர் திரும்பவும் சிரித்தார்.

"உமக்கு நான் அண்ணை, என்ரை ராசாவுக்கு நான் மாமா. இது போதுந்தானே!'

“இருந்தாலும் அண்ணை, ராசாவின்ரை அப்பா கேட்டால் சொல்ல வேணுந்தானே அண்ணை?”

“பேரைக் கட்டாயம் சொல்லத்தான் வேணுமே?”

“சொல்லுங்கோ அண்ணை.”

“என்ரை பேர்....”

“ம், சொல்லுங்கோவன்.”

“நாணயக்கார.”

“அண்ணை, இது சிங்களப் பேர் மாதிரி....? அப்ப நீங்கள்.... சிங்களவரே அண்ணை?”

“சிங்களவனெண்டா என்ன, தமிழனெண்டா என்ன தங்கச்சி? நான் மனுஷன்.”

அந்த மனுஷனைப் பார்த்து வேணி கண்ணீரோடு கரங்கூப்பி விடைபெற்றுக் கொண்டாள்.

“அய்போவன் அண்ணை”.

**கல்கி, 02.08.2009**

**அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப்போட்டி, 2009-இல் முதல் பரிசு பெற்ற சிறுகதை.**

# நாய்ப் பொயப்பு

வீட்டு நாய் ஒன்றும் தெரு நாய் ஒன்றும் ஒரு கேட்டின் முன்னே மீட் பண்ணிக் கொண்டன.

"ஹலோ' என்றது வீட்டு நாய்.

திரும்பிப் பார்த்தது தெரு நாய்.

"இன்னா பா, கேட்டுக்கு வெளியால நிக்கிற, எஸ்க்கேப் ஆய்க்கினியா?' என்றது.

"எஸ்க்கேப்பா! எஸ்க்கேப் ஆறதுக்கு நா என்ன விவேக்கா!' என்று சிரித்தது வீட்டு நாய்.

“கேட்ட சரியா மூடாம கூர்க்கா எங்கயோ போய்ட்டார். சுதந்திரக் காற்றைக் கொஞ்சம் சுவாசிக் கலாமேன்னு வெளிய எட்டிப் பாத்தேன். கூர்க்கா தல தெரிஞ்சதும் உள்ள போயிருவேன். அந்த ஆள் ஓனர்ட்ட வத்தி வச்சிருவான்.”

"அப்ப, கேட்டுக்குள்ள ஒனக்கு ஜெயில்தான்!'

“சேச்சே, ஜெயில்னுல்லாம் சொல்ல முடியாது, ஒரு பாதுகாப்பு, அவ்ளோ தான்.”

“இன்னாபா பெரிய்ய பாதுகாப்பு! கயுத்ல பட்டயக் கட்டிக் காம்பவுண்டுக்குள்ளார வுட்டுட்டா பாதுகாப்பா? நாங்கள்ளாம் எவ்ளோ ஃப்ரீயாக் கீறோம்! எங்களயெல்லாம் என்ன புள்ள புடிக்கிறவனா வந்து புச்சிக்கினு போறான்?”

“இருந்தாலும், ஒனக்குன்னு ஒரு வீடு இல்லியே.”

“இன்னாத்துக்கு எனக்கு வூடு! தா பார், இந்த ஒலகம் பூரா எனக்கு வூடு. ஒனக்கு இந்த வூடு தான் ஒலகம்”.

“இது வீடு இல்ல, பங்களா.”

“அட, கெவுணர் மாளிகயாவே இருக்கட்டுமே பா. நம்ம வூடு எம்மாம் பெரிசு பார். இந்த மெட்ராஸ்ல ஐயாக் கால் படாத எடமே கெடையாது. நீ பாவம் எங்கெங்க போயிருக்கப் போற! வள்ளுவர் கோட்டம் பாத்துக்கினியா நீ? ஏ வி எம் ஷ்டூடியோ பாத்துக்கினியா? எக்மோர் டேஷன், ஷென்ட்ரல் டேஷன் பாத்துக்கினியா? ஹைக்கோர்ட் பாத்துக்கினியா? ஷெக்ரட்டேரியட் பாத்துக்கினியா? ஹார்பர் பாத்துக்கினியா?”

“நா ஏர்ப்போட் பாத்திருக்கேனே!”

“ஏர்ப்போர்ட் இன்னா பெரிய்ய ஏர்ப்போர்ட்! எத்திராஜ் காலேஜ்க்குப் போய்க்கினியா நீ? பொம்பள காலேஜெல்லாம் நாங்க சொம்மாப் பூந்துப் பூந்துப் பொறப்படுவோம் தெர்மா! தாய்க்குலம் படிக்கிற காலேஜ்க்குப் போகச் சான்ஸ் இல்லாதது இன்னாபா நாய்க்குலம்!”

“ஆனா, எனக்கு டெய்லி மூணு வேள சாப்பாடு கெடக்யுதே.”

“நீ மூணு தபா தான துண்ற? நாங்க நெனச்ச நேரமெல்லாம் துண்றோம். தெர்மா?”

“எங்க ஓனர் எனக்கு ஸ்பெஷலா நாய் பிஸ்கட் வாங்கிப் போடறாரே!”

“நாய் பிஸ்கட்டா! அத மனுஷன் துண்ணுவானா? ஐ மீன், அத நாய் துண்ணுமா? நாங்க மனுஷ பிஸ்கட்டே துண்ணுவோம் தெர்மா? எங்க மீல்ஸ் எல்லாம் இன்னா வெரய்ட்டிண்ற! கல்லாண மண்டபங்களுக்குப் போயாச் சுன்னா புஃபே லஞ்ச், புஃபே டின்னர் தான். அதுவும், பாய் வூட்டுக் கண்ணாலத்துக்கு விசிட் குடுத்தாச்சுன்னா ஒரே என்வி ஐட்டம் தான். அன்லிமிட்டட் பிரியாணி. மட்டன் தான், சிக்கன் தான். இன்னாபா ஒனக்கு நாக்குல ஜொள் கொட்டிக்கினு கீது!”

“சேச்சே, அதெல்லாம் ஒண்ணுமில்ல. கொஞ்சம் உணர்ச்சிவசப் படப் பாத்தேன், ஒடனே சமாளிச்சிக் கிட்டேன். என்ன இருந்தாலும் பங்களா வாசம் மாதிரி வருமா! எனக்கு ஒடம்புக்கு சரியில்லன்னா ஒடனே வெட்டனரி டாக்டர்ட்ட கூட்டிட்டுப் போவாங்க. ஒன்ன டாக்டர்ட்ட கூட்டிட்டுப் போறதுக்குப் பாவம் யார் இருக்கா?”

“எங்க ஒடம்புக்கு எதுனாச்சும் நோவு வந்தாத்தானே? இது இன்னா பாடிண்ற? இஷ்டீல் பாடியாக்கும்! இந்த ஒடம்புக்கு ஒரு கேடும் வராது. அப்டியும் எதுனாச்சும் வந்தா வவுத்துக்கடுப்பு வரும். ரெண்டு நாள் டயட்டிங் பண்ணா சரியாப் பூடும்.”

“ரோட க்ராஸ் பண்றச்ச, பேருந்து, சீருந்து, ஷேருந்து எதுலனாச்சும் அடிபட்டுச்சுன்னா?”

“அடிபட்டா ஒண்ணும் ஆவாது. எங்கள ஆஸ்பத்திரிக்கி இட்டுக்கினு போறதுக்குன்னு செல நல்ல லேடீஸ் அண்ட் ஜென்ட்டில்மென் கீறாங்க. எங்களுக் கோசரம் ப்ளூ க்ராஸ்ன்னு ஒண்ணு கீது, எஸ் பி ஸி ஏன்னு இன்னொண்ணு கீது. எங்கள ஆம்புலன்ஸ்ல தூக்கிக்கினு போய், மருந்து வச்சுக் கட்டுப் போட்டு சொஸ்த மானவொடன ஸ்பாட்லயே கொணாந்து டிராப் பண்ணிட்டுப் போயிருவாங்க”.

“அதெல்லாம் சரி தான். வந்து... நம்ம ஒடம்பு அப்பப்பக் கம்ப்பெனிக்காக ஏங்கறபோது எங்க ஓனர் எனக்கு மேட்டிங் அரேய்ஞ்ஜ் பண்ணுவாரே! ஒனக்கு யார் பண்ணுவா?”

“அட, இதுக்கு ஒரு ஓனர் வேணுமாக்கும்! எங்களுக்கெல்லாம் ஃப்ரீ ஃஸெக்ஸ் தான்! நெனச்சா டேட்டிங் தான், நெனச்சா மேட்டிங் தான்! இன்னா நயினா ஒனக்கு ஒடம்பு ஒரு மாதிரியா ஜெர்க் ஆவுது? திரும்பவும் ஒணர்ச்சிவசப் பட்டுக்கினியா? நீ ஃபீல் பண்ணி இன்னா ஆவப்போவுது, ஒனக்கு இந்த ஜெயில் லைஃப்தான் தலையெயுத்து!”

“அட போப்பா. என்னதான் இருந்தாலும் நம்ம வாழ்க்க கட்டுப்பாடான வாழ்க்க. ஆரோக்யமான வாழ்க்க. டெய்லி எங்க ஓனரோட நா வாக் போறேன். வாக்கிங் ஹெல்த்துக்கு நல்லது தெரியுமோ?”

“வாக்கிங்காவது வத்திப்பெட்டியாவது! வாக்கிங் கெல்லாம் சோமாறிங்க செய்றது. தெரு நாய், நடந்து வாக்கிங் போறத எங்கயாச்சும் பாத்துக்கினியா நீ? நாங்கள்ளாம் ஜாகிங் தான். வாக்கிங்க வுட ஜாகிங்தான் ஹெல்த்துக்கு நல்லது, தெர்மா?”.

“ஆனா, ஜாகிங்க விட ரன்னிங் ரொம்ப நல்லதாச்சே? நீங்கள்ளாம் ரன்னிங் செய்றதில்லயா?”

“அப்பப்ப நாங்க ரன்னிங்கும் வுடுவோமே!”

“அப்பப்பன்னா, எப்ப?”

“இதோ, இப்பத்தான்!”

சொல்லிவிட்டுத் தெரு நாய், ச்சீட்டா வேகத்தில் ஓட்டமெடுத்தது.

பின்னால் வந்து கொண்டிருந்தது, கார்ப்பரேஷனின் நாய் பிடிக்கிற வண்டி.

**பாக்யா, 4-10 செப்டம்பர், 2009.**

**ஞானோதயம்**

## ஆசிரியர் குறிப்பு

1975ல் ஆரம்பித்த கோரியின் எழுத்துப் பயணம் இன்று வரை தொடர்கிறது. முழுநேர எழுத்தாளராக உருவெடுத்த கடந்த பத்தாண்டுகளில் எழுத்துலகிற்கு இவரது பங்களிப்பு மகத்தானது. படைப்புகள் கணையாழி, கல்கி, வடக்கு வாசல், கவிதை உறவு, கல்கி, சமநிலைச் சமுதாயம், கலைமகள், பாக்யா, யுக மாயினி, நவீன விருட்சம், தாமரை, மல்லிகை மகள் உள்ளிட்ட அனைத்து வெகுஜன மற்றும் இலக்கிய இதழ்களிலும் வந்திருக்கின்றன. இவையனைத்தும் பத்துக்கும் மேற்பட்ட நூல்களாக வெளிவந்திருக்கின்றன. கி.வா.ஜ. நினைவுச் சிறுகதைப் போட்டியிலும், அமரர் கல்கி நினைவு சிறுகதைப் போட்டியிலும் முதல் பரிசு கிடைத்தது. படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில், ஜோதிவிநாயகம் நினைவு சிறுகதைப் பரிசுத்திட்டம் என்ற அமைப்பை இலக்கிய நண்பர்களுடன் இணைந்து ஏற்படுத்தியிருக்கிறார்.